உ
சிவமயம்

# கண்ணகி வழிபாடும் இராஜராஜேஸ்வரி வழிபாடும்

(சக்திவழிபாட்டின் பரிணாமங்கள் குறித்த தமிழ் இலக்கிய வரலாற்று ஆய்வு)

நூலாசிரியர்
வாகீசகலாநிதி
கனகசபாபதி நாகேஸ்வரன்,M.A
சிரேஷ்ட விரிவுரையாளர், மொழித்துறை,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்

2007


ஸ்ரீராஜராஜேஸ்வரி

உ
சிவமயம்

# கண்ணகி வழிபாடும்

# இராஜராஜேஸ்வரி வழிபாடும்

## (சக்திவழிபாட்டின் பரிணாமங்கள் குறித்த தமிழ் இலக்கிய வரலாற்று ஆய்வு)


<u>நூலாசிரியர்</u>

வாகீசகலாநிதி

**கனகசபாபதி நாகேஸ்வரன், M.A**

சிரேஷ்ட விரிவுரையாளர், மொழித்துறை,

சப்ரகமுவ பல்கலைக்கழகம்



2007

உ

SIVAMAYAM

# KAN̄N̄AKI VAZHIPADUM
# RAJĀRĀJESHWARI VAZHIPAADŪM

## (A TAMIL LITERARY RESEARCH OF THE SUGGESTIVE EXPRESSION OF SHAKTHI CULT)

**AUTHOR**

**VAKEESA KALANITHI,**
**KANAGASABAPATHY NAGESWARAN, M.A,**
**SENIOR LECTURER, DEPT. OF LANGUAGES,**
**SABARAGAMUWA UNIVERSITY OF SRI LANKA.**

**2007**

1. நூல் :- கண்ணகி வழிபாடும் இராஜராஜேஸ்வரி வழிபாடும் (சக்தி வழிபாட்டின் பரிணாமங்கள் குறித்த தமிழ் இலக்கிய வரலாற்று ஆய்வு)

2. ஆசிரியர் :- வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், M.A
சிரேஷ்ட விரிவுரையாளர், மொழித்துறை,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிகுல்லோயா, இலங்கை

3. துறை :- தமிழ் இலக்கிய ஆராய்ச்சி

4. வெளியீடு:- 2007

5. கணினிப்பதிவு :- SDS கணினி நிறுவனம்.
43, பஸல்ஸ் லேன், வெள்ளவத்தை, இலங்கை

6. அச்சகம் :- லஷ்மி அச்சகம்,
195, ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு – 11, இலங்கை.
தொலைபேசி:- 2448545

7. பிரதிகள் :- 300

8. விலை :- ரூபா 200/=

9. கிடைக்குமிடம் :- மொழித்துறை,சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிகுல்லோயா,
இலங்கை.

ISBN : 978955 98962-5-8.

1. **BOOK** :- KANNAKI VAZHIPADUM
RAJARAJESHWARI VAZHIPADUM
(A TAMIL LITERARY RESEARCH OF THE SUGGESTIVE EXPRESSION OF SHAKTHI CULT)

2. **AUTHOR** :- VAKEESAKALANITHI.
KANAGASABAPATHY NAGESWARAN, M.A,
SENIOR LECTURER, Gr.1,
DEPT. OF LANGUAGES,
FACULTY OF SOCIAL SCIENCES AND LANGUAGES,
SABARAGAMUWA UNIVERSITY OF SRI LANKA,
BELIHULOYA.
SRILANKA.

3. **SUBJECT** :- TAMIL LITERARY RESEARCH

4. **PUBLICATION**:- 2007

5. **TYPE SETTING**:- SDS, 43, FUSSELS LANE,
OFF HAMPDEN LANE, WELLAWATTE,
COLOMBO – 06, SRI LANKA.

6. **PRINTING** :- LUKSHMI PRESS,
195, WOLFENDHAL STREET,
COLOMBO – 11, SRI LANKA.
TELEPHONE :- 2448545, 2330588

7. **COPIES** :- 300

8. **PRICE** :- 200/=

9. **AVAILABLE** :-
DEPARTMENT OF LANGUAGES
SABARAGAMUWA UNIVERSITY OF SRI LANKA
BELIHULOYA.

ISBN : 978-955 98162-5-8.



‘அருள்மாமணி’ ப.க. கனகசபாபதி ‘வித்துவாட்டி’, ‘கவிஞர்’ சுந்தரம்பிள்ளை கோகிலாம்பாள் தம்பதி. (வாகீச கலாநிதி நாகேஸ்வரனின் பெற்றார்)

# பொருளடக்கம்


1. முகவுரை

2. A Good Scholar endow with Versatile enius and calibre
   - Prof.Dr.V.Sivasamy

3. Excellent Academic - Prof . V.K.Ganesalingam

4. இயல் ஒன்று
   பண்பாட்டு ஆய்வுக்கான மூலங்கள் 1 – 19

5. இயல் இரண்டு
   கற்பின் சீற்றமும் கடலின் சீற்றமும் (சுனாமிப் பேரலைகள்) 20 – 45


6. இயல் மூன்று
   மட்டக்களப்பில் கண்ணகையம்மன் வழிபாடு 46 – 58

7. இயல் நான்கு
   அம்மன் படிமங்களும் பிரதிமாலக்ஷணங்களும் 59 – 81

8. நிறைவுரை 82 – 84

9. அடிக்குறிப்புக்கள் 85 – 88

SABARAGAMUWA UNIVERSITY OF SRI LANKA



**கனகசபாபதி நாகேஸ்வரன், B.A (Hons); M.A**

***KANAGASABAPATHY NAGESWARAN, B.A (HONS); M.A***

# முகவுரை

இந்நூல் எம்மால் எழுதப்பட்ட ஐந்தாவது நூல். தமிழ் இலக்கிய வரலாற்றாய்வாக வெளிவருகிறது. இப்போதெல்லாம் காலவரையறை, வழிபாட்டு முறைமை, தொன்மைகள் பற்றிய அக்கறை, பண்பாட்டின் மூலவேர்கள் பற்றிய ஆர்வம், ஒப்பீடு, மேற்குலகச் சித்தாந்தங்கள் பற்றிய கூர்மை நோக்கு, சிதிலமடைந்த ஆலயங்களின் புனர்நிர்மாணம், இயற்கையின் சீற்றத்துக்கான காரணங்களைக் கண்டறியும் விஞ்ஞான நோக்கு, கடற்கோள்கள் பற்றிய அராய்ச்சி, நவீன தொழில் நுட்பத்திறன் வளர்ச்சி என்றெல்லாம் ஆய்வறிவுச் சிந்தனைகள் விரிவாக வளர்ச்சியடைந்து வருவதனை நோக்கலாம். மெய்யியல், ஆன்மிகம், சித்தாந்தம், தத்துவம், உளவியல், மானுடவியல் என்பன குறித்த கலைத்துவ ஆய்வு வீச்சும் மேலோங்கி வளர்ச்சி கண்டு வருவதும் நோக்கற்பாலது.

இந்நூலிலே முப்பரிமாண நோக்கு இடம் பெறுகிறது.

I. இலக்கிய பண்படிப்படையில் நிலவும் கருத்துநிலைக்கும் வழிபாட்டு மரபுக்குமுள்ள தொடர்பு.

II. அகமுகமாகக் கண்ணகி வழிபாட்டம்சங்கள் வரலாற்றடிப்டையில் சோழப் பேரரசர்களது இராஜராஜேஸ்வரி அம்மன் வழிபாடாக மலர்ச்சியுறும் பாங்கு.

III. இயற்கையின் வெஞ்சினமும் - சீற்றமும் - அதனடியாக நிகழ்ந்த பயன்களும், அவை குறித்த சிந்தனைகளும் உள்ளவாறு.

என்று எழுதப்பட்டுள்ள விடயங்களைத் துலக்கலாம்.

இந்நூல் சக்திவழிபாட்டின் பரிணாமங்கள் குறித்த தமிழ் இலக்கிய வரலாற்றாய்வாக மலருகின்றது. இவ்விடத்தில் பரிமாணம், பரிணாமம் என்னும் இரு சொற்களின் பொருள் மரபைத் தெளிந்து

தெளிவது அவசியமாகிறது. பரிமாணம் - அளவு (Measure, Dimension). பரிணாமம் - பரியாயம் எனவும் படும். பிரதிபதம், நானாவிதம், குறிப்பாற் கூறுதல் என்னும் பொருள்களிலும் வரும். ஆங்கிலத்தில் Symonym, Diverseways, Suggestive Expression, Change என்று அகராதியிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நூலிலே அகமுகமான கருத்தியில் வளர்ச்சி, மனிதப்பண்புகளின் மேன்மையான பெறுமானம், படிமங்களின் பிரதிமாலஷணங்கள், சமுதாய நிலையில் பிடிப்புடன் பின்பற்றப்படும் வழிபாட்டு மரபு, வரலாற்று நோக்கில் தொடர்புறும் பெண் நிலைச் சிந்தனைகள், இலக்கிய மரபின் அழுத்தம் என்பன குறித்த பார்வைகள் இடம்பெற்றுள்ளன. ஈழத்து ஆய்வறிஞர்களின் முடிபுகள் இடம்பெற்றுள்ளன.

விக்கிரகவியல், ஆகமவியலடிப்படைகளிலன்றி இலக்கியப் பண்புகளின் அடிப்படையிலும் மானுட மேன்மைகளினடிப் படையிலும் இந்நூலிலே கருத்துக்களிடம் பெறுகின்றன. இக் காரணங்களினால் இந்நூல் ஒரு புதிய சிந்தனைத் தடத்தில் விரிகிறது.

சக்திவழிபாடு பற்றிய நோக்கு இந் நூலிலே நான்கு இயல்களாக ஆராயப்பட்டுள்ளன.

இயல் ஒன்று - பண்பாட்டு ஆய்வுக்கான மூலங்கள்.<br>
இயல் இரண்டு - கற்பின் சீற்றமும் கடலின் சீற்றமும்,<br>
(சுனாமிப் பேரலைகள்)<br>
இயல் மூன்று - மட்டக்களப்பில் கண்ணகியம்மன் வழிபாடு<br>
இயல் நான்கு - அம்மனின் படிமங்களும் பிரதிமாலஷணங்களும்.

மரபும், நவீனமும் (புதுமையும்) கலந்த சிந்தனையோட்டத்தினை இந்நூலினை வாசிப்போர் உணரக்கூடும். வளர்ச்சி - விருத்தி - அபிவிருத்தி - நிலைபேறு என்று

நோக்குவோர்க்கு முற்காலமும் இக்காலமும் பொருந்தியிணைவது இன்பஞ் செய்யவல்லது. எனினும் இலக்கியக் கொள்கையினடியாக நோக்குவோர்க்கு எக்காலத்தும் நிலை பெறும் பொருள்மரபு இந்நூலில் அமைவது கண்டின்புறத்தக்கது.

இந்நூலிலே இடம்பெற்றுள்ள இரு ஆங்கிலச் சான்றிதழ்களும் முறையே பேராசிரியர், கலாநிதி வி. சிவசாமி அவர்களாலும் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் அவர்களாலும் எழுதப்பட்டவை. சைவத்திலும், தமிழிலும் அறிவியலா ராய்ச்சிகளிலும் பேரீடுபாடு கொண்டு இன்றும் அயராது பணிபுரியும் ஆய்வுப் பேறறிஞர் விஞ்ஞானப்பேராசான் பேராசிரியர், கலாநிதி வீ. கே. கணேசலிங்கம் அவர்கள் என்னை எடுத்து வளர்த்தவர் என்பேன். பருத்தித்துறையில் திருஞானசம்பந்தர் கலாமன்றம் அமைத்துச் சைவத்தின் மாண்புகளையும், தமிழினிமையையும் வளர்ப்பதற்குப் பேருபகாரியாயமைந்தவர். என் சொற்பொழிவுகள், பட்டி மண்டப உரைகள், கதாப்பிரசங்கங்கள், விரிவுரைகளைத் தாமே முன்னாலிருந்து இரசித்து மகிழ்விக்கும் தேனீ. என்னை என்றென்றும் வாழ்த்தும் பேராசிரியர் கலாநிதி வீ. கே. கணேசலிங்கம் அவர்கட்கு என் மனமார்ந்த நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.

என் பேராசான் பேராசிரியர், கலாநிதி வி. சிவசாமி அவர்கள் பல்கலைக்கழகத்திலே எனக்கு விரிவுரைகளாற்றியவர். பேரறிஞர். வரலாற்றிலும், வடமொழியிலும், இலக்கியத்திலும், ஆங்கிலத்திலும், இசையிலும் நாட்டிய இயலிலும், கலைவரலாற்றியலிலும் பெரும் புலமை படைத்தவர். பாராயண நூல்கள் பல வடமொழியிலேயே உள்ளன, அவற்றின் தமிழ் விளக்கங்களை அருமையாகக் கட்டுரைகளிலே வடித்துத் தந்துள்ளார் பேராசிரியர் வி. சிவசாமி. என்னுள்ளே உயிர்ப்பாய் நிற்கும் கலாநிதி வி. சிவசாமி அவர்கள் உபகரித்துள்ள சான்றிதழ் ஆய்வறிவாளரிடையே என்னையும் **தூக்கி நிறுத்தும்** என்றே நம்புகிறேன். அவருக்கு என் மனமார்ந்த நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.

இலக்கியம், சமயம், கலைகள் தொடர்பான நூலுருவாக்கத்தின் போது என்னை மிகுந்த உற்சாகமூட்டி நிற்பவர்கள் அமைச்சுச் செயலாளர் ப. க. பரமலிங்கமும் (என் சிறிய தந்தையர்களான) ப.க. மகாதேவாவும், பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப் பணிப்பாளர்கள் வி. விக்கரமராஜா க. தெய்வநாயகம், சமயக்கல்வி உதவிப் பணிப்பாளர் எம். எஸ். ஸ்ரீ தயாளன், ஸ்ரீ சபாரத்தினம் தொண்டர் சபையின் தலைவர் எஸ். தியாகராசா (S.T.R), செயலாளர் தம்பு துரைராசா, உபதலைவர் லக்ஷ்மி அச்சக உரிமையாளர் வே. திருநீலகண்டன், கொழும்பு விவேகானந்த சபையின் பொதுச் செயலாளர் **சிவஞானச் செல்வர்** க. இராஜபுவனீஸ்வரன், கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவர் கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம் ஆகியோர்.

எனது கலை வாழ்வின் உயர்ச்சிகளில் என்றும் மதித்தற்குரியவர்கள் இன்னும் நால்வர். ஒருவர் கொழும்பு கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் அரச நம்பிக்கைப் பொறுப்பாளர் க. கனகசபாபதி அவர்கள். இரண்டாமவர் கொழும்பு மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் தேவஸ்தான அறங்காவலர் **பொன். வல்லிபுரம்** அவர்கள். மூன்றாமவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவை முன்னாள்ப் பணிப்பாளர் **த. உருத்திராபதி** அவர்கள். நான்காமவர் வவுனியா கோயிற் குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரப் பெருமான் திருக்கோயில் அறங்காவலர் **சிவமணி ஆறுமுகம் நவரத்தினராசா** அவர்கள். இவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

என் குடும்பத்துக்கு இடப் பெயர்வுகளும், குடும்ப அலைச்சலும் பெருஞ்சிரமங்களைக் கொடுத்தாலும், பிரத்தியேக அலுப்பாக நான் புரியும் எழுத்துப் பணியையும் சகிப்புணர்வுடனும், பொறுமையுடனும் ஏற்றுத்தாங்கி அனுசரித்து உறுதுணை புரிந்து நிற்கும் என் பாசத்திற்கும் அன்பிற்குரிய என் மனைவி **ரதியின்** பண்பைப் பெரு நன்றியுடன் நினைக்கிறேன். அம்பாள் நீடு சுகானந்தத்தை அருள வேண்டும் என்றே பிரார்த்திக்கிறேன்.

இந்நூலைக் கணினியிலே பொறித்து அச்சுக்கென முழுமையாகவே பணிகளை நிறைவு செய்து தந்தவர்கள் வெள்ளவத்தை S.D.S கணினி நிறுவனத்தினர். மிக நேர்த்தியும் அழகும் மிளிர அச்சேற்றித் தந்தவர்கள் லக்ஷ்மி அச்சகத்தார், ஊழியர்கள் அனைவர்க்கும் என் குல தெய்வம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் பரிபூரணமான திருவருள் கிடைக்க வேண்டும் என உளமாரப் பிரார்த்திக்கிறேன்.

இனி, நீங்கள் இந்நூலைப்பெற்று வாசித்து மகிழ்வதுடன் இனிவருங்காலத்தும் அடியேன் நூல்களை வெளியிடுவதற்கு உபகாரியந் தன்மையாளராய் உதவ வேண்டும் என்றும் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

**சைவமும் தமிழும் வாழ்க.**

அன்பன்,
கனகசபாபதி நாகேஸ்வரன்

மொழித்துறை,
சப்ரகமுவபல்கலைக்கழகம்,
2007.

## A GOOD SCHOLAR ENDOW WITH VERSATILE GENIUS AND CALIBRE

Dr. V.Sivasamy,
B.A (Hons) (Lond) M.A.(Cey) Hon.D. Litt. (Jaffna)
Retired Professor and Head of the Department of Sanskrit,
University of Jaffna.

Mr. Kanagasabapathy Nageswaran, B.A (Hons), M.A (Jaffna) is known to me for three decades as a student, colleague and friend. He hails from an illustrious family noted for Tamil hinduism and social services in Jaffna and nainativu in particular. He is one of the hereditary members of the board of trustees of the famous temple of the goddess Shri Nagapooshani enshrined at nainativu.

He had his primary and secondary education at the mahavidyalayam nainativu, Kathiresan college, nawalapitiya and mahajana college, Tellippalai. Later he entered the university of Jaffna and offered Tamil, History and Econmics for the first year arts examination and obted for a special degree Course in Tamil and passed the final Examination with second class upper division. Subsequently, he has obtained M.A.degree. He write a dissertation on "Tamil literary forms about the two famous muruka temples at maviddapuram and Nallur" in the Jaffna district for the above mentioned degree. He is now collecting data for the Ph. Degree.

Soon after graduation he was appointed as a temporary assistant lecturer in Tamil for seven years at the University of Jaffna. Subsequently he has been appointd as a senior lecturer Gr. I in Tamil and also a co – ordinator of the department of languages of the sabaragamuwa university.

Mr.K. Nageswaran is a good scholar endow with versatile genius and calibre. He is very proficient in Tamil language and literature hinduism, culture and journalism. He has written five books and several articles to conferences, journal, and magazine local and international and news papers in Sri Lanka.

He served as a sub – editor of eelandu a Tamil daily published in Jaffna in the eighties the last century. He has edited some Tamil classics and souvenirs published specially by some famous hindu temples. He is very interested in Jounalism too. He is a very good orator in Tamil and can deliver extempore lectures on Tamil studies culture and hinduism.

He is also a good musician especially in Tamil traditional devotional music – Pan Isai. He is acquainted with the Caratic and folk music too. As a result, he gives good musical and narrative discourses on hinduism called "Kathaprasangam" in the hindu Temples and societies.

His excellent command of Tamil language oratorical skill, proficiency in music and hinduism has enabled to him to get opportunities in the Sri Lanka Broadcasting Corporation. Besides being an announcer and programme producer for nearly five years, he has continued to give lectures and discourses especially on hinduism for nearly two and a half decades.

His activities academic and religious are not confined only to educational institutes and temples. He has delivered lectures and conducted seminars under the auspices of several Tamil cultural societies in Sri Lanka and outside.

He has done yeoman's service to the student community at the school and University land in the Teaching of Tamil, culture and hinduism.

As a result of his unstained service to Tamil, culture and religion, he is honored with several honor titles Vakeesa kalanithy, Navarasak kalaignani, Cencol Varidhi, Arudkalaimamani, Siddhanta Pandit by various cultural and religious societies and institutions in Sri Lanka. The Sri Lankan government has conferred upon him the title of the **Justice of peace for the whole Island.**

He maintains cordial relations with his teachers colleagues, students, friends and others. His conduct is good and character is exemplary. I have great pleasure the recommending him for any post or promotion be fitting his educational qualifications and attain ments.

V.Sivasamy.

24-01-2005.

## EXCELLENT ACADEMIC

Prof. V.K. Ganesalingam,
(Professor Emeritus, B.Sc (Hons) M.Sc (Hawai)
Ph.d (London), Hon. D.Sc. (Jaffna)
Justice of the Peace)

Arts and culture are the traditions that nation has. They are the life wise of people and to he proud of . The People will have to follow them intimately as they are the symbol of the nation. They have to be studied intellectually in a research methodology and scientifically. This is important for the progress of the nation.

Arts include all branches of learning and serve as the academic instruments by which appreciation and appraisal of the truth of arts and culture in detail. This will give a better understanding to per suit further knowledge for protection and further development of arts and culture.

The Tamil culture is proud to have 64 arts which are of great value but less talked about since its birth. By the study of these 64 arts in detail, Tamils particularly hindus, will reach device. Once understood the arts, they reach heavenly feeling. The target is reaching the god by the way of the arts. Once reached, one will attain the full satisfaction of birth, as people's full ambition is that, the all mighty is great, reaching his feet is position by mastering the 64 arts. It is in the nerve and brain of every hindu to amalgamate (oneness) with the god so that the rebirth does not take place.

Mr. Kanagasabapathy Nageswaran attached to the Sabaragamuwa University of SriLanka as a senior academic has come forward to explain all the 64 arts in the four of written literature rum which will be an ornament that lasts long and will be infused among the interested people. This is a fantastic and himalayan task, which no body has fully. This should be a wonderful gift for hinduism. One should appreciate for someone coming forward to undertake this godly work. This is the best contribution that everyone should be proud of. He has

undertaken a task, which nobody can do it and no body has the requisite qualification or ability to do it. He is the only man to do this scholarly work.

Mr. Nageswaran is a well known scholar, well versed in Tamil studies attached to the cindu culture by birth and generations, an important trustee in a famous shri Nagapooshani amman temple in the north, excellent academic with experience and high capacity, writer of several books and article in the jourals, well known narrator of hindu ethics and temple ceremonies over the radio and television, Poet of high calibre, disseminator of knowledge to the students and learners and a good communicator on the subject of 64 arts of the tamil culture.

It should to said pleasantly that Mr.Nageswaran is one of the few gentlemen in Sri Lanka who could contribute immensely to the field of arts and culture. His ideas are unchallengible and practicable. One should say without hesitation that non other than mr. Nageswaran would be able to contribute in this field unhesitatingly. People of his calibre is fast declining due to ill – education poor knowledge in this field. It is not far from his knowledge, as he is multifarious and multi fluent. He is a responsible type of gentleman. He is absolutely honest and trustworthy. He can be relied upon to complete a given task to the best of his ability. He has every characteristic of great gentleman.

Personally, he is well known to me. I attended several of his preaching at temples. I always appreciated his knowledge, progressive ideas away from ancient superstitious. He has the modern thoughts, just fit into the socio-economic and scientific attitudes. I have no hesitation to state that he is the appropriate and ideal person to be trusted and given, responsible job in the university commensurate to his qualifications and experience. I wish him every success.

02.03.2005 V.K. Ganesalingam

undertaken a task, which nobody can do it and no body has the requisite qualification or ability to do it. He is the only man to do this scholarly work.

Mr. Nageswaram is a well known scholar, well versed in Tamil studies attached to the chadreuture by birth and generations, an important trustee in a famous shri Nagapooshani amman temple in the north, excellent academic with experience at high capacity, writer of several books and article in the jourals, well known narrator of hindu ethics and temple ceremonies over the radio and television, Poet of high calibre, disseminator of knowledge to the students and learners and a good communicator on the subject of 64 arts of the tamil culture.

It should to said pleasantly that Mr. Nageswaran is one of the few gentlemen in Sri Lanka who could contribute immensely to the field of arts and culture. His ideas are unchallengible and practicable. One should say without hesitation that non other than mr. Nageswaran would be able to contribute in this field unhesitatingly. People of his calibre is fast declining due to the education poor knowledge in this field. It is not far from his knowledge, as he is multifarious and multi fluent. He is a responsible type of gentleman. He is absolutely honest and trustworthy. He can be relied upon to complete a given task to the best of his ability. He has every characteristic of great gentleman.

Personally, he is well known to me. I attended several of his preaching at temples. I always appreciated his knowledge, progressive ideas away from ancient superstitious. He has the modern thoughts, just fit into the socio-economic and scientific attitudes. I have no hesitation to state that he is the appropriate and ideal person to be trusted and given responsible job in the university commensurate to his qualifications and experience. I wish him every success.

02.03.2005 V.K. Ganeshalingam

# இயல் ஒன்று

## பண்பாட்டு ஆய்வுக்கான மூலங்கள்

சக்திவழிபாடு இன்று பல்வேறு பரிணாங்களுடன் பெரு வளர்ச்சி கண்டுள்ளது. வரலாறு, இலக்கியம், சாசனம், தொல்லிய லாதாரங்கள், அற்புதங்கள், ஆலயங்கள், நம்பிக்கைகள், திருப் பணிகள், சாந்திகள், சமூகவழக்காறுகள், நாட்டாரிலக்கியச் சான்றா தாரங்கள், புராணேதிகாச முன்மொழிவுகள், நேத்திகள், இயற்கை யின் விநோதங்கள், காரணங் கண்டுபிடிக்க இயலாத இயற்கையின் கொடிய சீற்றங்கள், பிறப்பிறப்பின் தாற்பரியங்கள், அறிஞர்களதும் அடியார்களதும் சித்தர்களதும் வரலாறுகள், தவசிரேஷ்டர்களான அடியார்களின் அன்பு வழிபாட்டின் பயன்பாடுகள், நோய்களின் பரிகாரங்கள், தெய்வத்திருவுருவங்களின் வெளிப்படையான தோற்றப் பாடுகள், அவதார புருஷர்களின் அமானுஷ்ய ஆற்றல்கள், நீதி முறைமையின் நேர்த்திகள், மானுட அநீதித்தனங்களின் முடிவுகள், தியானத்தின் பலாபலன்கள், கூட்டுவழிபாட்டின் பயன்கள், மக்கட் பரோபகாரத்தின் மேன்மைகள், தெய்விகக் கலைகளின் நேர்த்தித் திறன்கள் மூலம் வரும் நுட்பத்திறன் மேம்பாடுகள், தலயாத்திரைகள் சுற்றுலாக்கள் மூலம் ஏற்படும் தெய்விக அனுபவ அறிவு நலன்கள், யாத்திரைகள் மூலம் பெறும் மனச் சாந்திகள், தீர்த்தமாடுதலின் மூலம் பெறும் பிறவித் தூய்மை, விருந்தோம்புதலின் மூலம் பெறும் உயர் வாழ்க்கைப்பேறு, அருளாளர் - சிவனடியார் திருக்கூட்டத்தின் சேர்க்கை மூலம் பெறும சமய ஞானம், தவசீலர்களது தொடர்பின் மூலம் - ஈர்ப்பின் மூலம் பெறும் பேரானந்த அனுபவவாழ்வு, திரு முறை முற்றும் ஓதல் - பாராயணத்தின் மூலம் பெறும் பக்தி யுணர்வு, மொழி ஆளுமை, அன்பு, அரவணைப்பு, கொதியடங்கி மன அமைதிபெறல் என்பவற்றின் மூலம் பெறும் உயரிய சமூகச் செல்வாக்கு ஆகிய நடைமுறை வழிமுறைகளினூடே இன்றைய சமய ஞானமும் வழிபாட்டு மேன்மையும் பெரிதும் துலக்கம் பெற்று விளங்குவதனை நாம் நன்கு கூர்ந்து அவதானித்து விளக்கம் பெறலாம்.

சமயஞானமும், சமய ஈர்ப்புடனான வாழ்வும், பண்பாட்டுப் போற்றுதலும் பேணுதலும் வெறும் சடங்காக மட்டுமன்றி வாழ்க்கை அறமாகவே இன்று பெருமளவிலே போற்றப்படுவதனை நாம் ஆழமாக மனங்கொள்ள வேண்டும்.

சக்திவழிபாடு, தாய்த் தெய்வவழிபாடு, படைப்புக் கடவுள் வழிபாடு (FERTILITY CULT) மிகவும் நீண்ட காலத் தொன்மையும் பெருமையும் நுண்மையும் மகிமையும் மகத்துவமுமிக்கவொன்று. நீண்ட வரலாறும், மூலாதாரச் சான்றுகளுங் கொண்ட மானுட, தெய்விக விக்கிரகவியல் அடிப்படைகளைக் கொண்டமைவது. இன்றும் பெருஞ் செல்வாக்குடன் பொதுமக்களது வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்து இயல்கிறது.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன், தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கையம்மன், ஏழாலை களபாவோடை வசந்தபுரம் ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன், கந்தர்மடம் செல்வநாகபூஷணி அம்மன், புங்குடுதீவுக் கண்ணகைபுரம் கண்ணகையம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன், திருகோணமலை ஸ்ரீ பத்ரகாளி அம்மன், உடப்பு ஸ்ரீ பத்ரகாளி அம்மன், மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன், கம்பளை ஸ்ரீ முத்துமாரி அம்மன், நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன், பதுளை றொக்கில் ஸ்ரீ காளி அம்மன், மட்டக்களப்பு களுதாவளைக் கண்ணகை அம்மன், களுவாஞ்சிக்குடி ஸ்ரீ கண்ணகை அம்மன், வற்றாப்பளைக் கண்ணகை அம்மன், நவாலி வடக்குக் கண்ணகி அம்மன், சுட்டிபுரம் கண்ணகி அம்மன், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன், வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் என்ற மிகப் பிரசித்த பெற்ற அம்மன் திருக்கோயில்களும் இங்கு பெயர் இடப்பட்டுக் குறிப்பிடப்படாத இன்னும் பல அற்புதத் தன்மையும் அருள்வீச்சுங் கொண்ட ஆலயங்களும் ஈழவள நாட்டிலே மக்களது வேண்டுதல்களை ஈடேற்றிப் பேரருள் பாலித்து நிற்கின்றன.

சிந்துவெளியூடாகவும் ***சிலப்பதிகாரம்***, ***கண்ணகி வழக்குரை*** வரை உள்ள கண்ணகி பற்றிய செய்திகள் ஆய்வாளர் கருத்துக்கள் இவ்வாராய்ச்சிக் கட்டுரையிலே இடம் பெற்றுள்ளன. காலத்துக்குக்

காலம் தெய்வவழிபாட்டு மரபுகள் வளர்ச்சி கண்டுள்ள பாங்கினை இந்நூல் விவரிக்கும். நூல்களினதும், ஆய்வாளர்களினதும் பெயர்கள் சான்றாதாரங்களாகத் தரப்பட்டுள்ளன. வரலாற்று நோக்கு நிலையுடன், சமுதாய நம்பிக்கை, வழிபாட்டு நடைமுறை ஆகியன இணைத்தும் ஒப்பிட்டும் நோக்கப்பட்டுள்ளன.

கிராமிய, நாட்டார் வழிபாட்டு முறைமையும், சடங்குகளும், நாடகங்களும், கூத்துக்களும், படையல்களும், குளித்திகளும், நேத்திகளும் எல்லாம் எவ்வெவ்வாறு நிகழ்த்தப்படுகின்றனவென்பதைச் செய்திகளாகவும் சான்றுகள் கொண்டும் நிறுவப்படும் விஷயங்கள் நிறையவுள்ளன. பாடல்களும் இடம் பெற்றுள்ளன. மக்களின் திடமான நம்பிக்கைகள் குறித்த பேணல்மரபுகள் இக் கட்டுரையிலே நிரம்பவுள்ளன.

இலக்கிய வரலாற்று நோக்கிலே சங்ககாலம் முதல் இன்று வரை நிலவும் வாய்மொழி மற்றும் நிலத்தெய்வ வரலாறும், கருத்தியல் சார்ந்த விழுமியங்களுக்கு மதிப்பளித்து அவற்றைத் தெய்வங்களாகவே போற்றி வழிபட்டுள்ள மரபும் - வழக்காறும் இங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மனிதரும் தெய்வமாகலாம் என்னும் தத்துவம் தான் கண்ணகி வழிபாட்டின் தனிச்சிறப்பம்சம் என்பது நிறுவப்பட்டுள்ளது. குடும்ப மேன்மைக்குக் 'கற்புடைமை' தமிழர் பண்பாட்டிலே அவசியம் என்பதனையே கண்ணகியம்மன் வழிபாடு உணர்த்தி நிற்கின்றது. பத்தினி - கண்ணகி வெறும் மானுடப் பெண்மட்டுமல்ல. 'தெய்வம்' என்னும் கருத்தியற் பெருவளர்ச்சி நிலையின் ஏதுக்கள் குறித்து அலசியாராய்வது மிகவும் பெரும் பயன் தருவதாகும். மதுரைக்குத் தீமூட்டியதும், கொடிய வரட்சியையும் (மழையற்ற நிலைமையையும்) மாற்றியமையுமே கண்ணகியெனும் பத்தினித் தெய்வத்தின் தனித்துவ மாட்சிகள் என்பது அனைவராலுங் கூர்மையுடன் அறியப்பட வேண்டும்.

சங்க இலக்கியங்களிலே 'கொற்றவை' வழிபாடு உண்டு. மாரியம்மன், இராஜராஜேஸ்வரி அம்மன் என்ற வழிபாட்டு மரபுகள் பிற்காலத்திலே சக்திவழிபாட்டோடு இணைப்புப் பெற்றுக் கலப்

பதனைப் பார்க்கிறோம். கற்பு, அறம், அன்பு, வாய்மை, துறவு, தியானம், தவம் என்னும் கருத்துநிலைகள் சமுகமதிப்புப் பெற்றுத் தெய்வ வடிவங்களாகப் பரிமாணம் பெற்றுள்ளமையை இங்கு கண்டு தெளியலாம். மானுட வாழ்வின் அத்யந்த அம்சமாகவே சமய வழிபாடும் தோன்றும் என்பதனை இங்கு நீள நினைத்தல் வேண்டும்.

என் பேராசான், பேராசிரியர் கனகசபாபதி கைலாசபதி சக்தி வழிபாட்டு முறைமையின் பரிணாமம் பற்றிப் பின்வரும் ஆராய்ச்சிக் கருத்து முடிவுகளை எழுதியுள்ளார்.

> "சிவ வழிபாட்டுக்குரிய சின்னங்கள் சிந்துவெளி நாகரிகத்திலே காணப்பட்டாலும் சிந்துவெளி நாகரிகத்திலே முதலிடம் பெற்று விளங்கியது பெண் தெய்வ (அன்னை) வழிபாடே என்பது ஆராச்சியாளர் கருத்து. சிந்துவெளி மக்கள் வழிபட்ட தெய்வங்களை முக்கியத்துவத்தின்படி முறைப்படுத்திய மார்ஷல், முதலில் அன்னைத் தெய்வத்தையும், அதற்கடுத்தபடியாக மும்முக முடைய கடவுளையும், மூன்றாவதாக இலிங்கம் அல்லது குறியையும் எடுத்துக் கூறியுள்ளார்." [1]

பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை பின்வருமாறு கூறுவர்.

> "சங்ககாலம் தொட்டுத் தமிழ் மக்களுக்குள் வீர வழிபாடு இருந்து வந்தது. சங்க நூல்களிற் காணப் படும். நடுகல் வணக்கம் இங்கு குறிப்பிடத்தக்கது. பிற்காலத்து எழுந்த அண்ணமார், நாச்சியார், மதுரைவீரன், கண்ணகை முதலிய தெய்வ வழிபாடுகள் வீரவழிபாட்டின் கீழ் அடங்கும்." [2]

பேராசிரியர் க.கைலாசபதி குறிப்பிடும் இன்னுஞ் சில கருத்துக் களை முதலிலே நோக்குவாம்.

"சிந்துவெளி நாகரிகத்தை வளர்த்த மக்கள் பெண் தெய்வ வழிபாட்டையுடையராயிருந்தனர் என்பது விந்தையானதன்று. சிந்து வெளி நாகரிகத்துக்குச் சமகாலத்தவையான சிரியா, சின்னாசியா, எகிப்து முதலிய இடங்களில் பெண் தெய்வ வழிபாடு தோன்றியதற்கும் இத்தகைய சமுதாய முறையே (தாய்வழிச் சமூகம்) காரணமாகும். பண்டைய திராவிட மக்களிற் பெரும் பகுதியினர் தாய்வழி உரிமை, தாயமுறை முதலியவற்றைக் கடைப் பிடித்துள்ளனர். இதன் காரணமாகப் பெண் தெய்வ வழிபாடு திராவிடர்களிடையே பெருவழக்கா யிருந்தது என்று சமூகவியல் அறிஞர் கொள்வர்."[3]

கலாநிதி.க. கைலாசபதி மேலும் பின்வருமாறு கூறுவர்.

"சிவன் எனும் ஆண் தெய்வ சம்பந்தமான சைவ சமயத்தின் தோற்றம் தேடிச் சிந்துவெளி நாகரிகத்தை அடையும் நாம், அங்கு அன்னைத் தெய்வமே முழுமுதற் தெய்வமாக இருப்பதைப் பார்க்கிறோம். இதனைச் சிறிது கவனித்தல் தகும். இலிங்கவழிபாடானது உழவுத் தொழிலை மேற் கொண்டிருந்த பல புராதன நாகரிகங்களிற் காணப்படும் வழிபாட்டு முறையாகும். நீண்டு குவிந்த கல்வடிவு ஆண் குறியின் அடையாள மாகவும் அக்கல்லைச் சூழ்ந்த வட்டக்கல் வடிவு பெண் குறியின் அடையாளமாகவுமே முன்னை யோரால் கருதப்பட்டது" (மறைமலை யடிகள், சை.சி.ஞா.ப. 217) எனினும் அவர் சிவலிங்க உண்மைக்கு வேறுவிளக்கங் கொடுக்க முனைவர். அது வரலாற்று நோக்கோடு இயை பற்றுக் காணப்படுகிறது.)

சிந்துவெளி நாகரிகத்திற்குச் சமமான பிறநாகரிக மக்களிடையேயும் இவ்வழிபாட்டுமுறை நிலவியது.

ஆண்,பெண் குறிச் சேர்க்கையே பண்டைக்காலந் தொட்டு இலிங்கவடிவில் அமைந்தது என்பது பிற்காலச் சைவ சித்தாந்த சாத்திர நூலாலும் அறியக் கிடக்கின்றது.

"சத்தியுஞ் சிவமுமாய தன்மையிவ்வுலக மெல்லாம் ஒத் தொவ்வா ஆணும் பெண்ணும் உயர்குண குணியுமாகி வைத்தனன் அவளால் வந்த ஆக்கம் இல்வாழ்க்கையெல்லாம் இத்தை யும் அறியார் பீடலிங்கத்தின் இயல்பும் ஓரார்" என்று ***சிவஞான சித்தியார்*** தத்துவ விளக்கத்தோடு உரைப்பது பண்டு தொட்டு வந்த உண்மையே என்பதில் ஐயமில்லை." [4]

இனி, வருணனையையும் நோக்குவோம்.

"சிந்துவெளியிற் கண்டெடுக்கப்பட்ட ஓர் இலச்சினையில் இரு அரசமரக் கிளைகளுக் கிடையிலே ஆடைகளின்றிப் பெண் தெய்வ மானது காணப்படுகின்றது. நீண்ட கூந்தலும் கைகளில் காப்புகளும் காணப்படுகின்றன. மக்கள் உருவங்களும் விலங்குருவங்களும் அவ் வன்னைத் தெய்வத்திற்கு அடிபணிந்து அஞ்சலி செய்து நிற்கின்றன. அரச மரமும் அதனுடன் சேர்ந்த அன்னை வழிபாடும் ஆரியர் காலத்திற்கு முற்பட்டன என்பதற்கு இதனையும் சான்றாகக் கொள்வர் வரலாற்றாசிரியர். தமிழ் மக்களது சமயவளர்ச்சியில் மரவழிபாடு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. (Subramaniapillai, G., ***Tree worship and ophilatory,*** p.03)

'வரலாற்றுக் காலத்தில் வடிவம் பெற்ற தென்னிந்திய சைவ சிந்தாந்தம் மட்டுமன்றிப்

பொதுவாகவே அகண்ட இந்தியாவில் வளர்ந்த இந்து பௌராணிகக் கருத்துக்கள் நம்பிக்கைகள் முதலியனவும் சிந்துவெளிச் சமய அடிப்படைகளினால் பாதிக்கப்பட்டுள்ளன என்பது மறுக்க முடியாத வரலாற்றுண்மையாகும்." (Dikshit, S.K., ***The mother Goddes,*** P.2) 'அன்னை' அல்லது 'பேரன்னை' பிற்காலத்திலே தோன்றிய சக்தியைத் தோற்றுவித்த மூலப்பொருளின் (பிரகிருதி) முதலுருவாகும். அவருடைய பிரகிருதிகளே கிராம தேவதைகள் அல்லது கிராமச் சிறு பெண் தெய்வங்கள். அவற்றின் பெயர்களும் தலச் சரிதைகளுமே கணக்கிலடங்கா. எனினும் அவை யாவும் ஒரே பொருளையே குறிக்கின்றன. அந்த மூல சக்தியே வளத்தின் தெய்வம். இப் பெண் தெய்வங்கள் யாவும் ஆரியர்களுக்கு முற்பட்ட ஆரியரல்லாத இன மக்களிடையே செல்வாக்குடையனவாயிருந்தன என்பதில் ஐயமில்லை. ஆரியர்களுக்கு முற்பட வாழ்ந்த பூர்விகக் குடிமக்கள் சிலர் இந்து சமயத்தை ஏற்கவில்லை. அத்தகைய மக்களிடையே பெண் தெய்வ (அன்னை, தாய்) வழிபாடு நிலைத்துள்ளது. (Marshal, J. ***Mohanjadaro and the Indus Civilization,*** Vol.I,P.51) மார்ஷல் அவர்களின் இக் கூற்றானது மறைந்துவிடவில்லை என்பதனை நினைவுறுத்துகின்றது. 'இதனையொட்டி ஏரன் பெல்சு' (Ehrenfels, O.R., ***Mother Right in India,*** P.79-.80) என்பார் இந்தியாவிலுள்ள ஆதிவாசிகளிடையே நிலவும் முக்கிய பெண் தெய்வங்களின் நீண்டபட்டியல் ஒன்றினைத் தயாரித்துள்ளார். பிலிமக்கர, புடுபுடிக்கி, தார்ஜி, டொம், கடவா கலிங்கதிக்கரை, ஒக்கரை, கங்கை, கொல்கா, அத்தி, ஏலவை, இதிகை என்று நீண்டு செல்கிறது அப்பட்டியல்."

பழந்தமிழரது தலையாய தெய்வம் பெண் தெய்வமே என்பதில் ஐயமில்லை. சங்க இலக்கியங்கள் பலவற்றில் கொற்றவை வழி பாட்டு முறை கூறப்படுகின்றது. அச்சம் பொருந்திய பண்பை யுடைய கொற்றவை வெறியாட்டு முறையினால் பழந்தமிழர் வழி பட்டனர். (விரிவுக்குப் பார்க்க, *தமிழர் சால்பு*, பேராசிரியர் சு. வித்தியானந்தன்).

பழந்தமிழர் வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும் வரை விலக்கணமும் விளக்கமும் கொடுக்கும் தொல்காப்பியம் கொற்றவை நிலை என்னும் தலைப்பில் கொற்றவைக்குப் பலி கொடுத்து வணங்குதலைக் குறிப்பிடுகின்றது. சிந்துவெளி நாகரிகப் பெண் தெய்வம் பிற்கால இந்துசமயத்தில் 'சக்தி' யாக மிளிர்ந்தது என்று நாம் கொள்ள முடியுமானால் பழந்தமிழரின் கொற்றவை சைவ சித்தாந்தத்திலும் சக்தியாக, சிவனுடைய சக்தியாகி உருமாறியது என்று கொள்ளலாம்.

> "வெற்றிவேல் போர்க் கொற்றவை சிறுவ",
> " மலைமகள் மகளே' – என்றும்,
> "இழையணி சிறப்பின் பழையோள் குழவி" என்றும், *திருமுருகாற்றுப்படை* பாடுகின்றது.
> "பைம்பூட்சேஎய் பயந்தமா மோட்டுத்துணங் கையஞ் செல்வி"என்று *பெரும்பாணாற்றுப்படை* பாடுகின்றது. இத்தகைய பழைய குரல்களைக் கேட்கும் போது கொற் றவை, செல்வி முதலிய பெயர்களுடன் உயரிடம் வகித்த பழம் பெரும் பெண் தெய்வத்தின் பெருமிதத் தோற்றம் நமக்குத் தோற்றுகிற தல்லவா? சிவனுடைய மகன் என்று சொல்லாமல் **கொற்றவை சிறுவன்** என்று முருகன் குறிப்பிடும் பொழுது அங்கு தாய்வழி உரிமைச் சமுதாய உறவு முறை நிலவியது என்று நாம் திடமாக நம்பலாம் ; தாய்க்கு இருந்த முக்கிய இடத்தையும் நாம் தெளிந்து கொள்ளலாம்."[5]

அன்றும், இன்றும், என்றும், என்றென்றும் தமிழர் வழிபாடாகி யுள்ள 'வீரவணக்கம்' குறித்த செய்திகளும், கண்ணகி வழிபாட்டு வளர்ச்சியும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி, நாகபூஷணி, புவனேஸ்வரி, முத்துமாரி, காளி வழிபாட்டுமரபுகள் குறித்தும் சிந்திக்கும் போது வீரவணக்கம் குறித்துப் பேராசிரியர் கலாநிதி க.கைலாசபதி கூறும் செய்திகள் இன்றும் நம் தமிழர் வழிபாட்டுமுறைமையெனப் பேணப் படும் நிலையிலே மிகுந்த கவன ஈர்ப்புப்பெறுகின்றன. இன வரலாறும், போராட்டவரலாறும், வழிபாட்டுவரலாறும், சடங்குகளும் இன்றும் சங்கமித்துள்ள ஒரு நிலைமையை எண்ணிப் பார்த்தல் தகும்.

"பழந்தமிழர் வழிபாட்டு முறைகளுள்
வீர வணக்கமும் ஒன்று. போரிலே
விழுப்புண்பட்டு வீழ்ந்திறந்த வீரரைத்
தெய்வமாகப் போற்றினர். அவர்
களைக் கல்லில் அமைத்து வழிபட்டனர்.
"ஒன்னாத் தெய்வர் முன்னின்று விலங்கி
ஒளிரேந்து மருப்பிற் களிறெறிந்து
வீழ்ந்ததெனக் கல்லே பரவி னல்லது
நெல்லுகுத்துப் பரவுங் கடவுளுமிலவே."

என்றும் பாடுகின்றார் மாங்குடி கிழார். பகைவர் முன்னே அஞ்சாது நின்று அவர்மேற் செலவைக் குறுக்கிட்டுத் தடுத்து யானைகளைக் கொன்று வீழ்ந்துபட்ட வீரரது நடுகல்லைக் கடவுளாகக் கருதி வழிபடுவதல்லது நெல்லைச் சொரிந்து வழிபடும் தெய்வம் வேறொன்றுமில்லை என்பது பாடலின் பொருள். இதனால் வீரரைத் தெய்வமாகப் பரவுதல் எத்துணைச் சிறப்புடைய தாயிருந்தது என்பது தெளிவாகின்றது.

இன்றும் தமிழ் மக்களது அன்றாட, விழாக்களிலும் நிகழ்வு களிலும், பாடசாலைகளிலும் இடம்பெறும் வீரவணக்கம் - அக வணக்கம் - கருத்துநிலை வணக்கம் பற்றிய விளக்கங்களை விபரமாக அறிதல் இங்கு பொருத்தமாகும். பேராசிரியர், கலாநிதி க.கைலாசபதி பின்வருமாறு விளக்குகின்றார்.

"வீரவணக்கமானது திடீரெனத் தோன்றிய தொன்றன்று. புராதனத் தமிழ் மக்களிடையே நிலவிய வேறு பல நம்பிக்கைகளுக்கும் இதற்கும் தொடர்புண்டு என நாம் நம்பலாம். பொதுவாகவே இறந்தவர்களுக்குச் செய்யும் இறுதிச் சடங்குகள் வீர வணக்கம் தோன்றிய விளை நிலமாகும். தென்னகத்திலே இரும்புக் காலத்திற்கு (Iron Age) முன்பின்னாகக் காணப்படும் பெருங்கல் வளைவுப் புதைகுளிகள் (Megalithic Monuments) இறந்தவரை அடக்கஞ் செய்வதிலே அச் சமுதாயத்தினர் எத் துணை சிரத்தை காட்டினர் என்பதைக் குறிப்பன. பெருங்கற்களைக் கொண்டு வட்டமாக வளைக் கப்பட்ட இடங்களையே அக்கால "மயானங்கள்" எனலாம். அங்கு, தாழிகளிலோ அல்லது கல்லறை களிலோ மனித எலும்புத்துண்டுகளும் இரும்பா யுதங்களும் மட்பாண்டங்களும் கிடைத்துள்ளன. பெரும்பேர், சாணூர் அமிருத மங்கலம் போன்ற இடங்களில் இத்தகைய புதைகுழிகள் காணப்படும். தென்னகத்திலே இதுவரை கிடைத்த புதை பொருள்களில் மிகமுக்கியமான விஷயங்களைத் தெரிவிக்கும் ஆதித்த நல்லூரிலும் ஒரு பெரிய பழைய காலத்துமயான வெளியிலிருந்து முது மக்கள் தாழிகளும் (Urns) அவற்றுடன் தங்கம், வெண்கலம், இரும்பு முதலியவற்றாலான அழகிய பானை சட்டிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வாறு பார்க்கும் போது புராதன அடக்கமுறைக்கும் மூதாதையர் வழி பாட்டிற்கும் நிரம்பிய தொடர் பிருப்பது புலனாகும். இவற்றுடன் சம்பந்தப்பட்டதே வீரவணக்கம் எனலாம். பொதுவாக இறந்த மூதாதையரைப் போற்றி அவருக்கு ஆவன செய்யும் முறையிலிருந்தே சிறிது பிற்பட்ட காலத்தில் போரிலே பட்ட வீரரை வழிபடும் முறை தோன்றியது.

வீரவணக்கமானது தமிழ்நாட்டிலே வீரயுகத்திலே யே பெரு வழக்குற்றது என்று கருத இடமுண்டு. வீரயுகம் என்பது போர்களின் மத்தியிலே தனி உடைமையினடிப்படையில் தலைவரும் அரசு களும் தோன்றும் காலம் எனலாம். எமது பழைய சான்றோர் செய்யுட்கள் இதனைக் குறிப்பிடு கின்றன. வீர வணக்கத்தின் இரு அம்சங்களைக் காண்கின்றோம். சடங்கு சம்பந்தமானது ஒன்று. நினைவுச் சின்னம் சம்பந்தமானது இரண்டாவது. சான்றோர் செய்யுட்களிலே காணப்படும் செய்தி களுக்குத் தத்துவ விளக்கம் காண்பது போல அமைந்துள்ளது. தொல்காப்பியச் சூத்திரம் புறத்திணையியலில் வெட்சித் திணைத் துறை களைக் கூறுமிடத்து,

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல் சீர்தகு சிறப்பிற் பெரும்படை, வாழ்த்தலென் நிருமூன்று வகையிற் கல்லொடு புணரச் சொல்லப்பட்ட வெழு மூன்று துறைத்தே" என்று நடுகல் அமைப் பதற்குரிய வினையமைதிகள் ஆறனையும் ஆசிரியர் கூறுவர். யாவற்றிற்கும் வரம்புகட்டி இலக்கணம் அமைத்த தொல்காப்பியர் பழந் தமிழரிடையே பெருவழக்காயிருந்த இவ் வழி பாட்டு முறைக்கும் இலக்கணம் வகுத்ததில் வியப் பெதுவுமில்லை.

1. காட்சி – போரில் இறந்த வீரனுக்கு நடுதற்கேற்ற கல்லைத் தெரிந்தெடுத்தல்.
2. கால்கோள் – அவ்வாறு தெரிந்தெடுத்த கல்லை எடுத்துவரலும், நடுதற்குரிய நாள் நிமித்தம் பார்த்தலும்
3. நீர்ப்படை – எடுத்துவந்த கல்லினை நீரிலே கழுவுதல்.
4. நடுதல் – வீரன் வீழ்ந்துபட்ட இடத்திலோ அன்றி வேறிடத்திலோ கல்லினை நடுதல்.

5. பெரும்படை – கல்லிலே வீரனது பீடு பொறிப்பதும், மடை கொடுப்பதும் முதலியனவும்.
6. வாழ்த்துதல் – கல்லினைத் தொழுதல்.

நடுகல் வழிபாடு தோன்றியதைப் போன்று கோயிற் கட்டடக் கலையும் இழவு வினைகளை ஒட்டியே வளர்ந்திருக்கலாம் என அறிஞர் கருதுவர். ***(Srinivasan, P.R., Beginings of the Traditions of South Indian Temple Architecture,*** P.6) நடுகல் வழிபாட்டு வினையமைதிகளான கற் கோள், நீர்ப்படை முதலியன வீரர்க்கே மட்டு மன்றிப் பிற்காலத்தில் பிறருக்கும் ஏற்புடைய தாயிற்றென்பது கண்ணகி வரலாற்றானும் உணரப்படும். கற்புக்கடம் பூண்ட பொற்புடைத் தெய்வத்தின் படிவம் அமைத்தற் பொருட்டுக் கற் கொள்ளுதலை விரும்பியே, வடபேரிமயத்தை நோக்கிப் படை செலுத்தினன் சேரமன்னன் என்று ***பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம்*** முதலாய இலக் கியங்கள் கூறும்.

"கங்கைப் பேர்யாற்றுக் கரையகம் புகுந்து
பாற்படு மரபிற் பத்தினிக் கடவுளை
நூற்றிறன் மாக்களி னீர்ப்படை செய்து."

சிறப்புற்றதைச் ***சிலப்பதிகாரம்*** வருணிக்கும். எனவே வழிபாடு, வழிபடுமிடம் முதலியவற்றின் பரிணாம வளர்ச்சியில் கல்நட்டுப் பரவுதல் எத் தகைய பங்கை வகித்தது என்பதனை நாம் ஒரு வாறறியலாம்.

இனி, நடுகல் வழிபாட்டினைச் சிறிது விரிவாக நோக்குவோம். தொல்காப்பியர் கூறியவற்றைப் பார்க்கும்பொழுது, இவ்வழிபாட்டு முறையைச் சில விதிகளுக்கேற்பவே கடைப்பிடித்தனர் என்பது தெளிவு. தொல்காப்பியரது வருணனையானது

பழங்குடி மக்களிடத்து இன்றுங் கண்ணாரக் காணப் படும் நடுகல் வழிபாட்டு முறையை ஒத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாம். அஸ்ஸாம் மாகாணத்துக் காஸி மக்கட் கூட்டத்தினரிடையே காணப்படும் நடுகல் முறை இதற்குச் சிறந்த உதாரணமாகும்."[6] (David Roy, The Megalithic Culture of the khasis Anthropos, Viii.p. 3-54)

பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை கண்ணகையம்மன் வழிபாட்டு மரபு முறைகள் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்.

"பெரும்பாலும் கண்ணகையம்மன் பொங்கல் வைகாசி மாதத்திலே நடக்கும். பொங்கலுக்குச் சில நாட்களுக்கு முன் கோயில் திறந்து கண்ணகையம்மன் கதை படிப்பர். அன்றே மக்கள் தங்கள் குடும்பங்களோடு கோயிலுக்கு வந்து புதுச்சட்டி யானையிலே பொங்கல் பொங்குவர். காவடிகளும் பாற் செம்புகளும் தொகை தொகையாகக் கோயிலுக்கு வந்து சேரும். பின்னர் பூசை நடக்கும். கண்நோயுற்றோர் அது மாறுவதற்றாகக் நேர்த்திக் கடன் பண்ணி வெள்ளியால் கண்மடல் செய்து கொடுப்பர். இக் கோயில்களிலும் பறை மேளம் அடிக்கப்படும். மட்டக் களப்புப் பகுதியில் கண்ணகை கோயிற் பூசை மிகச் சிறப்பாக நடக்கும். அங்கு பூசை நாட்களிற் கடலோட்டு கதை படித்து, பொங்கிப் பின் குளிர்த்தியும் போடுவர். ஆண்டுக்கொருமுறையே கண்ணகை கோயில்கள் இப்பகுதியில் திறக்கப்படும்."[7]

**தமிழ் இலக்கிய வரலாறு** எழுதிய எம்.ஆர். அடைக்கல சாமி *சிலப்பதிகாரக்* காவியத்தின் பரிமாணமே "**கண்ணகியின் படிப்படியான பத்தினித் தெய்வ வளர்ச்சியைப் பாராட்டி உரைப்பதே**" யாகும் என்று விமர்சிக்கின்றார். அவரது விமர்சனம் வருமாறு:

> "மண்ணக மகளிருள் ஒருத்தியாகப் புகார்க் காண்டத்திலே விளங்கி, மனித நிலையைக் கடந்தவளாக மதுரைக் காண்டத்திலே தோற றந்தந்து, வானவர் தொழுதேத்தும் பத்தினித் தெய்வமாகி வஞ்சிக் காண்டத்தில் காட்சி தரும் கதைத் தலைவியாகிய கண்ணகியின் படிப்படியான பத்தினித் தெய்வ வளர்ச்சி யைப் பாராட்டி உரைப்பதே இச் செந்தமிழ்க் காவியத்தின் சீரிய குறிக்கோளாகும். இவ்வாறு பெண்ணின் பெருமையை முதன் முதலாகக் காவிய வடிவில் உலகிற்கு உணர்த்திய பெருமையும் இக் காவியத் தையே சாரும்."[8]

கண்ணகி வழிபாடு அரச பாரம்பரியத்துடன் தொடர்புடைய தென்பது உண்மை வரலாறு. இத் தொடர்பில் நாகர்களுடன் தொடர்புபட்ட வரலாறு பலவழிகளிலேயும் மிகவும் உண்மைத் தன்மை கொண்டதாய் அமைவதனை இன்றும் பிரத்தி யட்சமாகக் காணுகிறோம். நயினாதீவு தான் 'நாகதீபம்', 'மணி பல்லவம்' என்னும் கருத்தைத் தெய்வத் திருவருளே மெய்ப் பித்து அஞ்ஞானங் கொண்ட ஆய்வாளர்க்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தி யுள்ளது. நடைமுறை யதார்த்தமும், நம்பிக்கையும், வழிபாட்டு மேன்மையும், நம்பகத் தன்மையும், அற்புதங்களும், அதிசயங்களும் மணி பல்லவத்தின் - நயினாதீவின் மகத்துவத்தை ஒளிவீசச் செய்து கொண்டுள்ளமையை இனி எவருமே நிராகரிக்க முடியாது. எனவே 'உண்மையறிவே உலகிற்கு நல்வழி காட்ட வல்லது' எனின் பொய்யர்களும், நாஸ்திகர்களும் சொல்லாலும், எழுத்தாலும், கருத்தாலும் நல்வழிப்படுவதே இனிச் செய்யத்தக்கது. சுயவிமர்சனம் வேண்டும். உண்மை புனிதமானது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே இந்நூலாசிரியரோடு உடன் கற்ற மாணவரும், விரிவுரையாள நண்பரும், வரலாற் றறிஞருமான கலாநிதி செ.கிருஷ்ணராசா எழுதிய ***இலங்கை வரலாறு, பாகம் I*** என்னும் நூலிலே 'நாகவம்சமும் அரசபதவியும்

எனும் தலைப்பிலே இடம்பெறும் பின்வரும் கருத்துக்கள் மனங் கொள்ளத்தக்கன.

> "அண்மைக்கால வரலாற்றுக்கு முற்பட்ட ஆய்வின் முடிபுகள் இலங்கையில் அமானுஷ்யர் களாகக் கருதப்பட்டு வந்த நாகர்களை அரச வம்சத்தவர்களாகக் கொள்ள வைத்துள்ளது. சிரான் தெரணிய கலவின் *வரலாற்றுக்கு முற்பட்ட கால இலங்கை, பாகம் I பாகம் II* நூல்களில் இக்கருத்து மிகவும் ஆணித்தரமாகத் தொல்லியல் அடிப்படையில் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. 'இலங்கையில் குறுணிக்கற் கால யுகத்தினை முடித்து வைத்து, வரலாற்று யுகத் தினை ஆரம்பித்து என்று சிரான் தெரணியகல தனது நூலில் குறிப்பிட்டிருப்பது இலங்கையின் கோன்மை பற்றிய வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தினை ஏற்படுத்தியுள்ளது.""[9]

இனி *சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோயில் வரலாறு* (1986) என்னும் நூலை எழுதிய திரு.த.காசிநாதர் பின்வரும் கருத்துக்களை எடுத்து மொழிகிறார். வட இலங்கையில் கண்ணகை வழிபாடு இராஜராஜேஸ்வரி, புவனேஸ்வரி, முத்துமாரி வழிபாடு களுடன் இணைந்து சங்கமமாகி இன்று ஸ்ரீ நாகராஜேஸ்வரி, நாகபூஷணி என்று பிரபல்யம் பெற்றுள்ளது என்பதே பரிணாமமாகத் தோன்று கின்றது. இக்கருத்து மேலும் ஆய்வுக்குரியது.

"இலங்கையில் பத்தினி வழிபாட்டிற்கெனக் கட்டப்பட்ட ஆலயங்களுள் மிகப் பழைமை வாய்ந்தது கந்தரோடைக்கு அருகிலுள்ள கயற்கண்ணி என்னும் பத்தினி கோயிலாகும். கந்த ரோடைப் பாங்கரில் அமைந்துள்ள இக் கோயில்களைப் போலவே முல்லைத்தீவில் உள்ள வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோயிலும் சிறப்புவாய்ந்தது.

> "சீற்றம் தணியாத கண்ணகி மதுரையைத் தீக் கிரையாக்கினாள். தன்னை ஐந்தலை நாகமாக

மாற்றி மதுரை மா நகரைத் துறந்து தெற்கு நோக்கிச் சென்று முதலில் நயினாதீவில் தங்கினாள். பின்பு, சுருவில் வட்டுக் கோட்டைப் பாங்கரில் உள்ள சுருட்டுப்பனை வழியாக நவாலி, களுவோடை, சுதுமலை, சீரணி, அங்கணாமைக் கடவை, அளவெட்டி, வற்றாப் பளை முதலான இடங்களில் தங்கினாள். என்ப தாகக் கர்ணபரம்பரைக் கதை கூறுகின்றது.

கண்ணகி ஐந்தலை நாகமாக மாறிச் சுதுமலைக் கிராமத்திற்கு வந்து களை தீர்ந்த இடத்தில் சுது மலை மக்கள் கொட்டில் கோயிலொன்று அமைத்துத் 'தங்கு சங்களை' எனப் பெயரிட்டு வணங்கி வந்தார்கள். இக் கொட்டில் கோவில் அமைந்த நிலம் சேர். இராமநாதனின் தந்தை பொன்னம்பல முதலியார் அவர்களினால் கொடுக்கப்பட்டதாக சேர். பொன்னம்பலம் இராம நாதனின் வாழ்க்கை' வரலாறு என்னும் ஆங்கில நூல் வாயிலாக அறிகின்றோம். அந்நூலில் இச் செய்தி ஆங்கிலத்திற் பின்வருமாறு குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆங்கில வாசகங்கள் வருமாறு: "Dharmavan Ponnambalam restored and largely endow the ancient temple dedicate to Bhuvaneswаre at Suthumalai which is between manipay and Anaikkoddai. The descendants of the officers whom he appointed to the temple are still doing service in return for the land held by – them" (Vythilingam, M., (1971), The life of Sir Ponnambalam Ramanathan, Colombo, P.31).

இக் கொட்டிற் கோயிலில் ஆரம்பத்தில் கண்ணகி சிலை வைத்து வணங்கப்பட்டதாக ஒரு சிலரும், சிறிய கல் ஒன்று மாத்திரமே வைத்து வணங்கப் பட்டதாக வேறு சிலரும் முரண்பட்ட கருத்துக்

களைத் தெரிவிக்கின்றனர். எது எப்படி இருப்பினும் இவ் விடத்தில் '**தங்கு சங்களை**' என்னும் பெய ருடன் கண்ணகியை நினைவு கூர்ந்து சுதுமலை மக்கள் வணங்கிவந்தனர் என்பதற்குச் சான்றாகி இன்னும் இவ் வாலயத்தில் பெரிய ஆலயக் கரைக் கிடையில் ஒரு அரசமரத்தின் கீழ் கல்லால் அமைக்கப்பட்ட ஒரு சிறுகோயிலில் கண்ணகி அம்மன் காட்சி தருகின்றாள். இச்சிறு கோவிலில் மூன்று அழகான புதிய சிற்பங்கள் இருக்கின்றன. இக் கோவிலின் முன்பாக ஒரு கடப்பமரம் நிற் கின்றது.

ஈழத்தில் கண்ணகி வழிபாடு அழியாத ஒரு வழி பாடாக நிலைத்துவிட்டாலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரும் அவரது வழி வந்தோரும் கண்ணகி வழிபாட்டினை ஆதரிக்கவில்லை. இதன் காரண மாகக் கண்ணகி கோயில்கள், இராஜராஜேஸ்வரி அம்மன் கோவில்களாக, புவனேஸ்வரி அம்மன் கோவில்களாக மாற்றப்பட்டதாக அறிய முடி கின்றது. எனவே இன்றைய சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோயிலானது ஆரம்பத்தில் கண்ணகி கோவிலாகவே இருந்திருக்க வேண்டு மென்ற முடிவுக்கு வரலாம்." 10.

குடும்ப வாழ்விலே உயர்ந்து மிளிரும் பெண்கள் தெய்வ நிலைக்கு உயர்த்தப்பட்டமை குறித்த ஆய்வுகள் தமிழிலக்கிய நோக்கிலே விரிவாகவே வெளியிடப்பட்டுள்ளன. அன்பெனும் இணைப்பினாலே ஆண் பெண் எனும் இயற்கை இணைவே குடும்பம் எனப்பட்டது. இன்றும் இக்கொள்கையே மகோன்னதமான தென்பதனை உலகம் உணர்த்தி நிற்கிறது. எனவே மதவழிப்பட்ட நோக்கில் இந்துமதம், சைவம் ஒன்று தான் '**பெண்ணில் நல்லா ளொடும்**' இருந்த பெருந்தகையை முதன் முதலிலே காட்டியது. பௌத்தம், சமணம் என்ற மதங்களிலே துறவும் போதனைகளுமே முதன்மையிடம் பெறுகின்றன; பெண் வெறுப்பு வலியுறுத்தப்பட்டன.

எனவே காலத் தால் முற்பட்ட, பெண்ணை மிகவுயர் தகைமை களுடன் கௌரவித்து மதித்து வழிபட்ட இனமாகத் தமிழரினமே விளங்குகின்றது என்பதுவும் பிறமதத்தவர்க்கில்லாத பெருமையெனல் நமக்கு மட்டுமே உரிமையாயமைவது.

பேராசிரியர், டாக்டர் மு.வரதராசன், கண்ணகியின் குடும்ப வாழ்வைப் பின்வருமாறு விளக்கி விமர்சிக்கின்றார். இன்றைய இளஞ் சமுதாயத்தினர்க்கு இக் கருத்துக்கள் பெரிதும் பயனுடைய வையாகும். போராட்டம் தான் வாழ்க்கை. ஆனால் பெண்ணின் போராட்டம் **'எல்லை வரையறை'** கொண்டதென்பதனை உணர்ந் தால் நாடும் வீடும் வாழும். கணவரையே தூஷிக்கும் பெண்களும் கடவுட்பண்பை ஏன் பெறமாட்டார்கள்? என்று விவாதிக்கும் பெண் களும் இன்றுள்ளனர். எனவே தான் இலக்கியப்படிப்பினைகள் இக் கட்டுரையிலே பயனும், பண்பும், பணிவும் உண்டாகவென எழுதப் பட்டுள்ளன. அவ்வளவு தான். **கருத்தினை ஏற்பதும் விடுவதும் அவரவர் தகைமை.**

டாக்டர் மு.வரதராசன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"இயல்பால் மென்மையும் கொள்கையால்
திண்மையும் கொண்டு துன்பம் பொறுத்துக்
கண்ணகி வாழ்ந்த தவவாழ்வு பெரியது.
மிகப்பெரியது. கணவனுக்காகவே வாழ்ந்த
வாழ்வில் அவர் மேற்கொண்ட, இல்லறத்
தவம் கணவன் திருந்துமாறு செய்தது.
கண்ணகியின் தவம் பலித்தது. கோவலன்
திருந்தினான்."[11]

இங்கு தெய்வத்தன்மை என்பது உலக இயற்கையான ஆண்- பெண் - குடும்பம் எனும் நோக்கில் மிகவும் முக்கியத்துவம் பெறு கிறதல்லவா? மென்மையும் கொள்கைத் திண்மையும் என்பது கவனித்தற்குரியன. கற்பின் பெருமையே கண்ணகி வழிபாட்டின் விழுமிய கருத்து. (கற்பு என்றதும் இன்னுஞ் சிலர் காறியுமிழ்வர். **'கற்பாம் கற்பு"** என்ற நோக்குநிலைக் கேவலம் சிலரின் உதிரத்திலே உறைந்து இடர்விளைவித்த வண்ணமே உள்ளது.)

சோக்கிரட்டீஸ், யேசுநாதர், காந்தியடிகள் முதலான சான்றோர்களின் வீரம் ஒரு வீட்டின் மூலையில் வாழ்ந்த கண்ணகிக்கு எவ்வாறு அமைந்தது என்று வியப்புறலாம். அதுவே கற்பின் பெருமை. உயர்ந்த ஒருவரை மதித்து நம்பிக்கை கொண்டு அவரை வழிபட்டால் அவர் பெற்ற உயர்வை நாமும் எளிதில் பெறமுடியும். அவரிடம் குறை சில இருப்பினும் வழிபடுவோர் அந்தக் குறையும் நீங்கி உயர்வுபெற முடியும். இதுவே சமயத் துறையில் குருவழிபாடு எனப்படுவது. குருவழிபாடு என்பது குருவின் உடம்பையோ படத்தையோ வழிபடுவது அன்று. குருவின் கொள்கை யை வழிபடுவதே உண்மையான குருவழிபாடு ஆகும். உடம்பையும் படத்தையும் வழிபடுவோர் பயன்பெறுவர். அதிசயமுறுவர் ; ஆனந் திப்பர். உயர்வு பெறுவர். சமயத் துறையிலும் மற்றத் துறைகளிலும் வீர வழிபாடே உள்ளது. வீர வழிபாட்டில் கொள்கையை மட்டும் வழிபடும் உண்மை இருப்பின் உயர்வு பெறுவது உறுதி. குரு வழிபாடாக, வீரவழிபாடாக மற்றத் துறைகளில் விளங்கும் இதுவே குடும்பத்துறையில் கற்பு என்னும் பெயர் பெற்று விளங்கு கிறது. உண்மையும் தூய்மையும் கொண்டு கணவனை வழிபடும் மனைவி யின் நெறியே கற்புநெறி. அதனால் உயர்வுபெற முடியும் என்பதற்குக் கண்ணகி போன்ற கற்புடை, மகளிர் எல்லா நாடு களிலும் சான்றாக விளங்குகின்றனர்.

*சிலப்பதிகாரம்* பெண்ணின் பெருமையைக் கூறுகிறது. ஒரு பக்கம் கண்ணகி; மற்றொரு பக்கம் அவருடைய பெருமையைப் போற்றி வணங்குவோர். இவர்களையே *சிலப்பதிகாரம்* காட்டுகிறது என்ற கருத்தைப் பெரிதும் சிலாகித்தும் மேற்கோளாகவும் காட்டு கின்றனர் பேராசிரியர்கள் வரதராசனும் கைலாசபதியும்.

# இயல் இரண்டு

## கற்பின் சீற்றமும் கடலின் சீற்றமும் சுனாமிப் பேரலைகள்

**(கி.பி 2 ஆம் நூற்றாண்டில் எழுந்த கண்ணகியின் சீற்றமும் 21 ஆம் நூற்றாண்டில் (டிசம்பர் 2004, 26 ஆம் திகதி) சுனாமிப் பேரலை ஆழிக்கடலின் சீற்றமும் - ஓர் ஒப்பீட்டாய்வு.)**

**- இலக்கியவழி *தமிழரச நீதியின் மேன்மையும் வாழ்வுச் செம்மையும்* -**

மனைவியின் சிலம்பொன்றினை விற்கச் சென்ற கோவலன், மன்னனது மனைவியின் சிலம்பினைத் திருடியவன் என்று சிரச்சேதஞ் செய்யப்படுகின்றான். காதல் வாழ்வில் எதிர்பாராத இன்னல் நேர்ந்த போதும் முன்னொரு போதும் அறியாத துன்பந் தரும் கொலைப் பயணத்தை மேற் கொண்டபோதும், உடலும் உளமும் வருந்தி னாலும் சீற்றமுறாத அச்சேயிழை நல்லாள் தன் கணவன் கள்வ னெனக் கொலை செய்யப்பட்டான் என்ற செய்தியறிந்ததும் கொதித் தெழுகிறாள்; குமுறுகிறாள். என் ஆருயிர்த் துணைவரா கள்வர்? என்னே அநீதி? என அழுதரற்றுகிறாள். பொங்கியெழுஞ் சீற்றம் புயலாகி, கனலாகி அவையே கண்ணகியாகிவிட்ட நிலையில் மன்னனைக் கண்டு நீதி கேட்கப் புறப்படுகின்றாள். கண்ணகியின் சீற்றத்தின் வெளிப்பாட்டை முதன் முறையாக அங்கே தான் தரிசிக்கின்றோம்.

இளங்கோவடிகளின் சமய நோக்கும் குடும்ப நோக்கும் ***சிலப்பதிகாரத்தின்*** கதையினூடும் பாத்திர வார்ப்பினூடும் துலக்கம் பெறுவதனை இன்னும் பல்லூழிக் காலம் தமிழர் சமுதாயம் போற்றியே தீரும் என்பதுறுதி. செந்தமிழ்க் காப்பியம் முத்தமிழ்க் காப்பியம் எனப் புகழப்படும் ***சிலப்பதிகாரம்*** தமிழர் தம் வாழ்வின் பேரியல்பையும் குடும்பத் தலைவியரின் கற்புடைமையின் வலிமை

யையும் வண்மையையும் எப்பொழுதுமே பறை சாற்றி நிற்கும் என்பதுறுதி. 'பண்பாடு' எப்பொழுதும் பெண்மையையும் பெண் களையும் செம்மைபெறவே வைக்கும் என்பதனைப் பல பெண்கள் உணருவதாயில்லை என்று குறை கூறுவோரும் உளர். பண்பாட்டுக் கெதிரான பெண்களின் கோஷம் தமிழர் சமுதாயத்தின் ஆணி வேரையே ஆட்டங்காணச் செய்யும்.

'நீதியே தெய்வம்' என்பதை நிலைநாட்டிய கண்ணகியின் செம்மைசேர் சீற்றம் பாண்டியனின் நீதிமாண்பு. அன்று சிலம்பு தெறித்தது, இன்று ஆழிப்பேரலை கடற்கோள் - சுனாமி – எழுந்தது. அறநீதி உண்டுகொல்! அறநீதி உண்டுகொல்?!

அன்று (சிலம்பின்படி) நிலத்துடன் மன்னனின் அரசவையிலே காற்சிலம்பு நிலத்திலே மோதி உடைந்ததால் அரசநீதி சரிந்தது. இன்று ஆழிப்பேரலை (– சுனாமி – பொங்கியெழுந்து வீடுகளை அழித்ததாலும், பாதுகாப்பு தமிழரினத்துக்கு எப்பொழுதுமே விரோத மாயும் குரோதமாயும் குரூரமாயும் கொலைப்பாண்மைக் கொள்கை யுடன் செயற்படுவதாலும் நீதி கடும் சோதனைக் குள்ளாகியுள்ளது. அறமும், நீதியும் பிழைத்துள்ளமையினாலேயே இன்றும் நிலத்துடன் நீர் (பேரலை) மோதியது. அன்று சிலம்பு - இன்று இயற்கையின் சோதனை. தெய்வசங்கற்பம். அன்று பெண்ணின் காற்சிலம்பு – கொலைக்கு நீதி கேட்கத் துணிந்தது. இன்று கடலே எழுந்து குடியிருப்புக்கு நிலமும், வீடும் - இருப்பும் கேட்டு நீதி கோரியுள்ளது. அன்று கொலைக்கு நீதிகேட்டமையால் அரசே அழிந்தது. இன்று நிலத்திற்கு நீதி கேட்பதால் அழிவே.... ஆக, வாழிடம் தான் இனத்தின் காப்பரண். இலக்கியத்தின் உண்மை சிந்திக்கற்பாலது.

தவறிழைத்தவன் தானெனத் தெரிந்ததுவும், கண்ணகி நின்ற நிலையுமே பாண்டியனுயிரைக் குடித்தன. முடியுடை மன்னன் ஒருவனது சனநாயகப் பண்பு இது என்றால் உண்மையில் மக்களாட்சி மலர்ந்த இக்காலத்தில் எத்தகைய உயர்ந்த சனநாயகம் நிலவ வேண்டும்? யதார்த்தமாக உலகுக்கு இன்றுள்ள நிலையிலும் பார்க்க அன்று மேலான சனநாயகம் நிலவியதென்றே கூற வேண்டும். இன்றேல் வணிகுலத்து மகளொருத்தி மன்னனவை

சென்று நீதிகேட்டு நீதி தவறிய மன்னன் மாழ, கண்டோரேத்தும் கற்பின் தெய்வமாக மாறமுடியுமா? அன்று முடிந்தது. அன்றைய செங்கோன்மையும் சனநாயகப் பண்பும் தெய்வத்தமிழ்ப் பெண்மையின் கற்புமே அவற்றுக்குக் காரணங்களாக அமைந்தன.

> "சிலப்பதிகாரத்துக் கண்ணகிவழி தமிழினம் தன் வாழ்க்கையை அமைக்க வேண்டும் என்பதற்காகவே கண்ணகி வழிபாடு புங்குடுதீவு, மட்டக்களப்பு யாழ்ப்பாணத்திலே தொடங்கப் பட்டிருக்க வேண்டும். நீதியறமும், கற்புடைமையும், பெண்மையின் மென்மையும் தான் கருத்தியல் நோக்கில் கண்ணகி வழிபாட்டின் உச்சம் எனலாம். சமுதாய வாழ்வில் பண்பாடு காக்கவேண்டும். ஒழுக்கத்தை ஓம்பவேண்டும். தமிழ்ப் பெண்மையின் தனி மரபை வாழ்விக்க வேண்டும். அன்றைய இலக்கிய பெருமையை இன்றைய வாழ்வுக்கும் நாளைய சமுதாயத்தின் வளத்துக்கும் பயன்படுத்த வேண்டும். அதற்கான வழிகளும், நெறிகளும் *சிலப்பதிகார*மெங்கும் செறிந்து விளங்குகின்றன."[12]

**ஊழின் பெருவலியும் வாழ்வும்**

இன்றும் கண்ணகி வழிபாட்டில் கருத்து நிலை அம்சமான "ஊழின்பெருவலி' உள்ளீடாக விளங்குகின்றது. டாக்டர் வ.சுப. மாணிக்கம் பின்வருமாறு விளக்குகின்றார்.

> "(*சிலப்பதிகாரமும் மணிமேகலையும்*) எல்லாம் ஊழினால் நடப்பது என்று கூறும். ஆனால் *சிலப்பதிகாரம்* முழுவதும் ஊழின் அதிகாரம் தலைவிரித்தாடுகிறது. கண்ணகி முதலான எல்லா மாந்தர்களும் ஊழ்வயப்படுகின்றனர். நல்வினை, தீவினை எனவினை இரண்டிருந்தாலும் நம் *சிலப்பதிகாரம்* உருத்துவந்தூட்டும் தீவினை

> யையே – ஊழின் ஒருபக்கத்தையே நமக்கு வலியுறுத்திச் செல்கின்றது." [13]

இங்கு நாம் மிகவும் கூர்மையாக ஒருவிடயத்தினைக் கவனித்தல் அவசியம். அதாவது தீவினையை நாம் மனிதர்கள் செய்வதற்கு அஞ்ச வேண்டும் என்பதே போதனை. எப்படி வாழ வேண்டும், எவ்வெவற்றைச் செய்யக் கூடாது என்பதனை வலியுறுத்த எழுந்ததே *சிலப்பதிகாரம்.* நல்லது செய்யாவிட்டாலும் நல்ல தல்லாததைச் செய்யக் கூசவேண்டும் எனும் போதனை இன்றும் ஏற்புடைமையானதல்லவா? இது வழிபாட்டிலே மிகவும் முக்கியம் என்பதனையும்,சமயவாழ்வு, நீதி, அறவாழ்வு என்பது என்ன வென்பதற்குமான பெருவிளக்கமாகவே இதுவிடயம் அமைகின்றது எனலாம். எஸ்.இராமகிருஷ்ணன் பின்வருமாறு கூறுவர்.

> "கொங்கை ஒன்றால் கூடற்பதியை அழித்த கண்ணகி, சேர நாட்டுத் திருச்செங்குன்று சென்று வேங்கைமர நிழலில் நின்றாளென்பது *சிலப்பதிகாரச்* செய்தி"[14].

**"இவள் துர்க்கையாகவே பிறந்தாள்"** என்று *சிலப்பதிகாரம்* கருதாத ஒன்றை அதன் அரும்பத உரையாசிரியர் (வேட்டுவ வரியில்) கூறுவார். பின்னாளில் காளி அம்சமாகவே கண்ணகி கருதப்பட்டாளென்பதை அதிலிருந்து அறியலாம். தன்னை வழிபடு வதற்குத் தடை விதித்த பாண்டியனைப் பழிவாங்கவே காளி கண்ணகியாகப் பிறந்தாளென்றும் அவள் ஐந்துவயதில் கோவலனுக்கு மாலையிட்டாளென்றும், திருமணக் கொண் டாட்டத்தில் சதிராட வந்த மாதவி கோவல்னை மயக்கித் தன்னோடு இட்டுச் சென்றாளென்றும், மாதவியைப் பிரிந்து வந்து கோவலன் கண்ணகியோடு மதுரை சென்ற போதும் இருவரும் தம்பதியாக வாழவில்லையென்றும் கதையை நடத்தி அன்னை பராசக்தியின் அவதாரத்துக்குரிய தூய்மையைப் பாதுகாக்கிறது. கண்ணகி இறுதி யில் திருவொற்றியூரை யடைந்து வட்டபுரி அம்மனாக வழிபாட்டுக்கு உரியவளானாள் என்று கதையை முடிக்கிறது கோவலன் கதை.

கண்ணகி வழிபாடு காளி வழிபாட்டோடு இரண்டறக் கலந்ததை இதிலிருந்து அறியலாம்.”[15].

> “கண்ணகி என்ற பெயரும் சங்க காலத்துக்கும் புதியதன்று. குறுநில மன்னனான பேகனுடைய மனைவி கண்ணகியே. அவன் அவளை மறந்து நல்லூரில் ஒரு பரத்தையோடு வாழ்ந்த போது, கபிலர், பரணர் முதலியோர் அவனுக்கு அறிவுரை கூறி நல்வழிப்படுத்த முயன்றனர். இதனைப் *புறநானூற்றுப்* பாடல்களால் (143,144,145,146,147) அறியலாம். கண்ணகி என்ற பெயரோடு கணவன் பரத்தமையில் படர்ந்ததால் துன்புற்றதிலும் கோவலன் மனைவிக்கும் பேகன் மனைவிக்கும் ஒற்றுமை உண்டு. வெவ் வேறான பல கதைக் கூறுகள் காப்பியக் கதையில் ஒன்றிவிடுவதும் இயல்பே. ஆயினும் பேகனும் பரணரும் செங் குட்டுவனும் சம காலத்தவர் என்பதால், செங் குட்டுவன் காலத்தில் பத்தினித் தெய்வக் கதையில் பேகன் மனைவி பற்றிய செய்தி இடம் பெற்றிருக்க முடியாது.”[16]

என்கிறார் டாக்டர். எஸ். இராமகிருஷ்ணன். இன்னும் விளக்கந் தரும் இராமகிருஷ்ணன்,

> “முற்பிறப்பின் வினைப்பயனை மறுபிறப்பில் நுகர் ந்தாகி வேண்டுமென்பது, இந்தியநாட்டுச் சமயங் களுக்குப் பொதுவான கொள்கையே. ஆயினும் இந்தக் கொள்கையை வற்புறுத்துவதில் சமணர் களே சிறப்பாக ஈடுபட்டனர். ஜைனரான இளங்கோவும் இந்நெறியிலேயே செல்கிறார். வினைக் கொள்கைக்கு அரண் செய்யும் வகையில் முற்பிறப்புக் கதையை அமைத்துக் கொள்வதிலும் பௌத்தரைப் போலவே சமணரும் மிகுந்த ஆர்வம்

காட்டினர். அனைத்துச் சமயங்களையும் அரவணைக்கும் பெருந்தகையாக இளங்கோவடிகள் விளங்குகிறார். 'பிறவா யாக்கைப் பெரியோன்' (5:169) என்று சிவபெருமானைப் போற்றுகிறது அவரது சால்பு உள்ளம். திருமால், முருகன் முதலான பல தெய்வங்களையும் நன் மதிப்போடு குறிப்பிடுகிறார் அவர்.

எல்லாச் சமயங்களுக்கும் ஏற்றம் தந்து அனைத்துக்கும் பொதுவாகப் பத்தினித்தெய்வ வழிபாட்டை நிறுவுவதே *சிலப்பதிகாரத்தின்* சிறப்புக்களில் ஒன்றாம். சைவனாகிய செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுப்பிக்கிறான். பாண்டியனும் வட நாட்டு வேந்தரும் இலங்கை அரசனும் தத்தம் நாட்டில் கண்ணகி எழுந்தருளுவதற்கு வரம் வேண்டிப் பெறுகின்றனர். அட்டவாதி என்று சொல்லத் தகும் அளவுக்கு ஜைன மதத்தில் பற்று மிக்க கவுந்தி அடிகள், முன்பே, "கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்" (***சிலப்***,35: 143-144) என்று போற்றிவிட்டார். திரு மாலை வழிபடும் ஆயர்குலக் கன்னியான ஐயை கண்ணகி கோயிலுக்கு வந்து வழிபடுகிறாள். கடவுளாம் சாத்தனைக் கொழுநனாகக் கொண்ட தேவந்தியோ கண்ணகித் தெய்வத்துக்கு நாள் தோறும் பூசை செய்யும் பொறுப்பு ஏற்கிறார். ஆக பன்மையில் ஒருமை காணும் வாய்ப்பாகப் பத்தினித் தெய்வ வழிபாடு அமைகிறது." [17]

என்னும் கருத்துக்கள் இன்றும் ஏற்புடையனவன்றோ?

"வள்ளன்மையில் வான் மேகத்துக்கு நிகரான வணிகன் மாநாய்கனது மகள் கண்ணகி, போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்

தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும் மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக் காத லாள் பெயர் மன்னும் கண்ணகி என்பான் - மன்னோ" (26-29) அழகெலாம் ஒருங்கே அமை யப் பெற்று அரவிந்த மலரில் வாழ்வாள் திரு மகள். அவளது வடிவ வனப்புக் கண்ணகிக்கு வாய்த்திருந்தது. பொற்பினுக்கு அணியெனப் பொலிந்த அவள், கற்பினுக்க அணியாகவும் விளங்கினாள்." [18]

கண்ணகி மூட்டிய எரி அறவோர் பக்கம் பரவாது தீயோர் பக்கம் சேரியிலேயே பாய்ந்து மிகுந்தது. 'பையவே சென்று பாண்டியற்காகவே' என்பது சம்பந்தர் திருமுறை. 'கண்ணகியிட்ட தீ', 'சமணர் கொழுவிய தீ', தென்னிலங்கை இட்ட தீ, 'சுனாமி இட்ட நீர்' இவை தமிழர் தம் வரலாற்றிலே பன்முனை ஒப்பீடுகளாய் ஆழமாக ஆராயத்தக்கன. சொத்துகளையும், சுகங்களையும், இருப் பிடங்களையும், உயிர்ச் சேதங்களையும் இலக்கிய நோக்கிலே அலசி ஆராயத்தக்க அமைப்பை ஏற்படுத்தி மேலும் பல விளக்கங் கள் சிந்தனைக்கும் அனுபவத்துக்கும் விருந்தாக அமைக்க யார் தான் முன்வருவார்களோ?!

"கண்ணகியை விண்ணவர் தொழுதேத்தி
அழைத்துச் சென்றதைக் கண்டகுறவர்
இவள் போலும் நம் குலக்கோர்
இருந்தெய்வம் இல்லை, ஆதலின்
சிறுகுடியீரே! சிறுகுடியீரே!
தெய்வம் கொள்ளுமின், சிறுகுடியீரே!"

(சிலப்.24:10-12)

என்று ஆவேசமாகப் பாடி அவள் பொருட்டுக் குரவைக் கூத்து நிகழ்த்துகின்றனர். அகப்பொருட்சுவை அமைந்த குரவைப் பாட்டுக் களில் தம் குலதெய்வமான முருகனைப் போலவே கண்கண்ட புதுமைத் தெய்வமான கண்ணகியையும் துதிக்கின்றனர்.

“பாடுகம் வாவாழிதோழியாம் பாடுகம்
கோமுறை நீங்கக் கொடிமாடக் கூடலைத்
தீமுறை செய்தாளை ஏத்தியாம் பாடுகம்
பாமலை வெற்பன் மணஅணி வேண்டுதுமே.”

(சில.24:22)

வேண்மாள் பத்தினிக் கடவுளாகவே கண்ணகியைக் காண் கிறான்.

நாநலத்தால் வேந்தனை வென்றும், கற்பின் கனலால் தீயோரை அழித்தும் அருள் நோக்கால் நல்லோரைக் காத்தும், பரத்தமை ஒழிந்த சமுதாயத்தில் பத்தினிகள் வாழ்வாங்கு வாழ் வதற்கு வழி செய்தான். எனவே கண்ணகியைப் பத்தினிக் கடவுளாக வழிபடவேண்டுமென்று கணவன் வினாவுக்கு விடை தந்தான் வேண்மாள்.

“இப் பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டுமென”

(சிலப், 25: 107-108)

செங்குட்டுவன்,

மடவதின் மாண்ட மாபெரும்
பத்தினிக் கடவுள்”

(சிலப்,129-130)

என்றே கண்ணகியைப் புகழ்கிறான். அவன் அந்தக் கடவுளுக்கு வடிவமைக்க இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டி வஞ்சியிலே கோயில் கட்டுகிறான். கோயிலில் எழுந் தருளுவதற்குமுன் செங்குட்டுவன் எதிரே காட்சி தருகிறாள் கண்ணகி. பொன்னில் செய்ததோடும், வளையும், மேகலையும், சிலம்பும், பிற அணிகளும் தரித்தது மன்றிக் கொடியாக வானத் திடை தோன்றிய தெய்வத்தைக் கண்டு வியந்து இறும்பூதெய்து கின்றான் சேரன்.

“என்னே இ·.தென்னே இ·.தென்னே இ·.தென்னே
பொன்னஞ் சிலம்பின் புனைமேகலை, வளைக்கை கொல்
நல்வயிரப் பொற்றோட்டு நாவலம் பொன்னிழை சேர்
மின்னுக் கொடி யொன்று மீ விசும்பில் தோன்றுமால்”

(சிலப், 29:9)

“தமிழ்த்தாயின் தவப்பயனாக கண்ணகியின் சிலை இமயத்தில் பிறந்து, கங்கையில் புனலாடி வஞ்சியில் வழிபடப் பெறுவதால், அவள் இந்திய ஒருமைப்பாட்டுக்கு விளக்கமாகவும் அமைகிறாள். இறுதியில் ஆரியமன்னர் முதலாகி இலங்கைக் கயவாகு வேந்தன் ஈறாக, அனைத்து அரசர்களும் தத்தமது நாட்டில் வந்தருளுமாறு கண்ணகியை வணங்கி வேண்ட அவ்வாறே ‘தந்தேன்வரம்’ என்று அசரீரி இயம்ப, இந்திய இலங்கை ஒருமைப்பாட்டுக்கும் ஒற்றுமைக்கும், பண்பாட்டுப் பெருவிளக்கமாகக் கண்ணகி ஒளிரும் நிலையில் காப்பியம் நிறைவு பெறுகிறது.”[19]

“பழந்தமிழர் வாழ்வினையும் பண்பாட்டையும் அறிந்துகொள்வதற்குச் *சிலப்பதிகாரம்* மூல ஆதார நூலாகவுள்ளது. பெண்மைக்குப் பல்லாண்டு பாடும் காப்பியம். கண்ணிக்குக் கற்சிலை வடிக்க விரும்பிய செங்குட்டுவன் இமயத்திலிருந்து கல்லெடுத்து வந்தான் என்ற கதையை **அன்று நிகழ்ந்த இனப்போராகக் கொண்டு தமிழினத்தின் வரலாற்றுக் காப்பியமாகச் சிலப்பதிகாரத்தைப் பலர் போற்றி வருகின்றனர்.** நம்பிக்கை தமிழ் மக்கள் உள்ளத்தில் ஆழப்பதிந்திருக்கிறது. தென்னிந்தியாவிலும் ஈழத்தில் சில பகுதிகளிலும் கண்ணகி வழிபாடு பெருவழக்காயிருதிருக்கிறது. *சிலப்பதிகாரத்தி*லேயே இதற்கு ஆதாரம் உண்டு. ‘உரைபெறு கட்டுரை’ இச் செய்தியைக் குறிப்பிடுகிறது.

அன்று தொட்டுப் பாண்டியனோடு மழை வறங் கூர்ந்த வறுமை யொய்தி வெப்புநொயும் குருவும் தொடரக் கொற்கையிலிருந்து வெற்றி வேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர்

ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழா வொடு சாந்தி செய்ய நாடு மலிய மழை பெய்து நோயும் துன்பமும் நீங்கியது.” [20]

கலாநிதி க. கைலாசபதி இத்தொடர்பில் மேலும் விளக்கு வதாவது,

“ஆராயாமல் தீர்ப்புக் கூறிக்கோவலனது மரணத் துக்குக் காரணமான நெடுஞ்செழியன் இறந்ததன் பின் பாண்டி நாட்டிற் பல வருடங்கள் மழை பெய்யவில்லை. மக்கள் வறுமையுற்று வருந்தினர். நாட்டில் வெப்புக் கொதியும் வசூரி முதலிய கொப் புளங்களும் நோய்களும் பரவின. இது கண்ட பாண்டிய மன்னன் கற்பின் - கலையின் சீற்றமே இப்பேரிடருக்குக் காரணமென்று கருதுகிறான். கருதி வஞ்சப் பொய் சொன்ன பொற்கொல்லன் பிழைக்கு ஈடுசெய்வது போல ஆயிரம் பொற் கொல்லர்களைப் பலியிட்டுக் கண்ணகிக்குச் சாந்தி செய்து விழாவெடுக்கிறான். எடுக்கவும் நாட்டிலே பருவமழை பொழிந்தது. நோயும் அவலமும் அகன்றன. இவையே ‘உரைபெறு கட்டுரை’ கூறுந் தகவல்கள். பாண்டியன் இவ்வாறு செய்து நன்மை யடைந்ததைக் கேள்வியுற்ற கொங்கு மண்ட லத்துக் கோசரும் கடல் தம் இலங்கைக் கயவாகு வேந்தனும் சோழமன்னன் பெருநற் கிள்ளியுந் தத்தம் நாடுகளிற் பத்தினித் தெய்வத்துக்குப் பல விதமாக விழாவெடுத்தனர் என்பர். உரைபெறு கட்டுரையின் பிறபகுதி கூறுஞ் செய்திகள். கண்ணகியின் பிறபகுதி கூறுஞ் செய்திகள்; கண்ணகியின் சீற்றத்தால் கொடிய நோய்கள் உண்டாயின என்பதும் அவற்றை நீக்குவதற்கும் மழையைப் பெய்வித்தற்கும் சாந்தி செய்யப்பட்டது என்றும் பலியிடப்பட்டது என்றும் உரைபெறு கட்டுரை கூறுவது உற்றுநோக்கத்தக்கது. மழை

யில்லாமல் கடும் வரட்சியும் அதன் காரணமாய்த் தொற்று நோய்களும் உண்டாகிப் பரவுவது இன்றும் நாம் காண்பதொன்று. இதற்கும் கண்ணகிக்கும் தொடர்பு கற்பிக்கப்பட்டதால், சாதாரண மக்கள் தொன்று தொட்டுத் தமது நல் வாழ்க்கைக்காகக் கண்ணகி அம்மனை வழி பட்டு வருவாராயினர். ஈழத்திலே மட்டக்களப்பு மாவட்டத்திலே கண்ணகியின் சீற்றம் சம்பந்தமான நம்பிக்கையும் அது பற்றிய இலக்கியமும் இன்றும் வழக்கிலிருக்கின்றன. மட்டக்களப்புத் தமிழத்திலே குளுத்திப்பாடல் இன்றும் பாடப் பெறுகின்றது. மதுரையை எரிசெய்த கண்ணகி தேவியின் கோர மானது தணிந்து மனம் குளிருமாறு அவ்வன்னை யை வேண்டுதல் செய்யும் பான்மையில் அப்பாடல் அமைந்தது. 'குளிர்' என்ற சொல் அப்பிரதேசப் பேச்சு வழக்கில் குளுமை என்று வழங்குவது. குளுமையின் அடியாகப் பிறந்தது 'குளுத்தி'! ஈழத்திலே கண்ணகை அம்மன் வழிபாடு பிற தெய்வ வழிபாட்டில் இருந்து வேறுபட்டது." [21]

கலாநிதி க. கைலாசபதியின் பின்வரும் கருத்துக்கள் கண்ணகி வழிபாட்டுத் தொடர்பில் ஆழமாக மனங்கொள்ளத்தக்கன.

"இலங்கையில் தமிழர் மட்டுமன்றிச் சிங்களவரும் கண்ணகி யைக் காவல் தெய்வமாகப் போற்றுகின்றனர். தென்னகத்திலே கண்ணகித் தெய்வத்துக்குக் கோவில்கள் இல்லையாயினும் 'மாரியம்மன்" என்ற மாற்றுப் பெயரால் கண்ணகிக்குக் கோயில்கள் இருக்கின்றன. மாரியம்மன் வழிபாடு கண்ணகி வழிபாட்டிலிருந்தே வந்தது எனப்பல சான்றுகள் காட்டி நிறுவ முயற்றிருக்கிறார் டாக்டர் மு.ஆரோக்கியசாமி. 'மாரி' என்றால் மழை எனப் பொருள் படும். மாரியம்மன் மழைத்தெய்வம். ***சிலப்பதி***காரக் காப்பியத்தின்படி ஆடி மாதத்திலே கயவாகுமன்னன் கண்ணகிக்கு விழா எடுத்தான். ஆனால் பிற்காலத்தில் வைகாசி நிறைமதிக் காலத்திலேயே மட்டக் களப்பில் இவ்விழா நடைபெறுகிறது. கமத்தொழிலுக்கு ஏற்றபடி

விழாக்காலத்தைப் பொதுமக்கள் மற்றிய மைத்தனர் எனக்கருதுதல் பொருந்தும். இலங்கையிலிருந்து *ஆங்கிலேயர் எடுத்துச் சென்று இப்போது இலண்டன் நூதனசாலையில் வைக்கப்பட்டிருக்கும் பெண் தெய்வச்சிலை கண்ணகி தேவியினுடையது என்பது பலரது கருத்தாகும்.*

மண்ணையும், மாரியையும் நம்பி வாழும் மக்கள் - வரண்ட பிரதேசங்களில் வாழும் மக்கள் - உயிர்வாழ்வதற்கு உணவும் உடலுழைப்புக்கு நோய் நொடியில்லாத வரமும் வேண்டிக் கண்ணகி அம்மனை வழிபட்டு வந்துள்ளனர். இன்றும் வழிபட்டு வருகின்றனர்." என்று விவரிக்கின்றார் கலாநிதி க.கைலாசபதி.

இனி, *மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும்* என்னும் தமது நூலிலே மாத்தளை பெ.வடிவேலன் பின்வரும் குறிப்புக் களைத் தந்துள்ளார். அவர் சிங்கள மக்கள் வழிபடும் பத்தினி தெய்யோ பற்றியும் இணைத்து முழு இலங்கைக்குமுரிய வழி பாடுகளாகவே '**பத்தினிவழிபாடு**', '**சத்பத்தினி வழிபாடு**' உள்ளன என்பதனை அழுத்தியுள்ளார்.

"*பத்தினி வழிபாடு*" *சிலப்பதி*காரத்தில் சுட்டப்படுகிறது. பத்தினி வழிபாடே கண்ணகி வழிபாடாகும். கண்ணகியின் காற்சிலம்பினை விற்க வந்த கோவலன் கள்வன் எனக் கருதப்பட்டுப் பாண்டியனால் கொலை செய்யப்பட, கண்ணகி பாண்டியன் அவைக் களத்தில் நீதி கேட்டு நெறிகாத்துக் கற்பின் தெய்வமாகிறாள். சேரன் செங் குட்டுவன் இமயத்திலே கல்லெடுத்துக் கங்கையிலே நீராட்டிக் கோயில் எடுக்கிறான். இவ்விழாவில் கடல் சூழ் இலங்கையிலிருந்து கயவாகு மன்னனும் கலந்துகொண்டதாக வரலாறு கூறுகின்றது.

இலங்கையின் சிங்களப் பகுதிகளிலும் கற்புத் தெய்வ வழிபாடான பத்தினிவழிபாடு தோன்றி வேரூன்றி வளர்ந்ததாகத் தெரியவருகிறது. பௌத்தர்கள் இன்று மாரியம்மனைப் "பத்தினி தெய்யோ' என்றே வழிபடுகின்றனர். கிழக்கிலங்கையில் சிறந்து விளங்கும் கண்ணகையம்மன் வழிபாடு மலையகத் தோட்டத் துறை யிலும் உண்டு. மாலிபொடை டபார் தோட்டத்தில் கண்ணகி ஆலயங்கள் உள்ளன. கன்னத்தோட்ட "**காத்மத்**" தோட்டத்தில்

புத்தினி ஆலயமும், மொனராகல' படால்கும்புரையில் ஸ்ரீ பத்தினி தேவாலயமும் மத்துகம மத்துக தோட்டத்தில் ஸ்ரீ பத்தினி அம்மன் கோயிலும் உள்ளன. புத்தளத்திலும் ஸ்ரீ பத்தினி அம்மன் ஆலயம் உள்ளது.

> "குருநாகல் நகருக்குச் சமீபமாக அமைந்துள்ள 'வில்பாய' என்னும் ஊரில் பத்தினி ஆலயம் ஒன்று உள்ளது. இங்கு காற் சிலம்பினை வைத்தே வழிபாடு செய்கின்றனர். அம்பேபுச நகரிலிருந்து இரண்டு கல் தொலைவில் பத்தினி கோயில் ஒன்றும் உள்ளது. வில்பாவ பத்தினி கோயிலில் வருடந்தோறும் "பெரஹெரா' எடுக்கப் பட்டுக் குருநாகல் கதிரேசன் ஆலயத்திற்குச் சென்று வழிபாடு புரியும் வழக்கம் உள்ளது." [22.]

'*சிலம்பின்செய்தி*' என்னும் நூலிலே 'ஊழ்' பற்றி எழுதிய பொன். தெய்வேந்திரன் பின்வருமாறு கூறுவர்.

> "செயல், வினை, கன்மம் ஆகியவை ஒருபொருட் சொற்களே. ஊழ் அல்லது வினைப் பயன் மிக வலிமை உள்ளது என்று சிலம்பு விளம்பு கின்றது." 'ஊழ்' என்பதற்குப் பரிமேலழகர் தரும் வியாக்கியானம் வருமாறு: அதாவது இரு வினைப்பயன் செய்தவனையே சென்று அடை வதற்கு ஏது வாகிய நியதி. ஊழ், பால் முறை, உண்மை, தெய்வம், விதி என்பன ஒரு பொருட் கிளவி. இது பொருள் இன்பங்கள் இரண்டிற்கும் பொது வால் ஒன்றனுள் வைக்கப்பட்டமையாலும் மேற்கூறிய அறத்தோடு இயல்புடைமை யானும் அதனது இறுதிக்கண் வைக்கப்பட்டுள்ளது என்ற வாறு ஊழ், எனவே வினையின் தன்மை உணர்ந்து மக்கள் வாழ்ந்தால் இன்பமே சூழும். எல்லோரும் நல்லவராக வாழலாம்."[23]

“மணிமேகலையின்படி கோவலனுக்கும் கண்ணகிக்கும் அங்கே படிமம் இருந்ததாகவும், மணிமேகலையும் அங்கு சென்று வழிபட்டாள் என்றும் கூறப்படுகின்றது. கண்ணகி தன் மகளுக்குத் தன்முற்பிறவி வரலாறும் கூறி, மதுரையை எரித்த தீச்செயலின் பயனானதால் பிறவிகள் பல எடுக்க நேரிட்டதாகவும், பிறவிகளில் உழன்று இறுதியில் கபிலவஸ்துவில் போதி மாதவனின் போதனை யால் பிறவி அறுக்கும் பெருநிலைப் பெறுபெற வழிதேடுவதாகவும் கூறினள் என்று சில உரையாசிரியர்கள் எழுதியுள்ளனர். **ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்** என்பதற்கு இது பொருந்துகின்றது. எனினும் கற்பெனும் திண்மையுள்ளவருக்கு இதுவும் முடியாதா என எண்ணவும் தோன்றுகிறது. கோவலன் தந்தை மாசாத்துவான் இவ் வண்ணமே மணிமேகலைக்குக் கூறியதாகச் சிலம்பின் பிறசேர்க்கை விளம்புகின்றது. எது எதுவாயினும் வாழ்க்கை வாழ்வதற்கே எனும் சிந்தனையை நோக்கின் ‘தருமமே வெல்லும்’ என்பதற்குச் சார்பாக உள்ளனவற்றையே எடுத்துக் கொள்ளல் வேண்டும். தருமம் தவறின் கறுமம் சூழும் என்றும் அது கறும்புதல் செய்யும் என்றும் நினைமின்.

இறுதியில் தொகுத்துப் பார்க்கும்போது சேர சோழ, பாண்டிய ராக மூவேந்தர்க்கும் பார்தொழுது ஏத்தும் பத்தினியான கண்ணகி யாள் பலவற்றை விட்டுச் சென்றாள். கற்புறு மகளிரைக் கலங்கச் செய்து புறம் போகும் ஆடவரைக் தகைத்து முறை செய்யும் கடமையினை அரசர் பேணாவிடத்து நாட்டிலே கற்புச் சிறவாது என்று கூறும் பொன். தெய்வேந்திரன் மேலும் சில கூறுவார்.

> “செங்கோல் வழுவுதலை உணர்ந்தால் அந் நிலையே உயிர் வாழாமையை ஆட்சித் தலை வனின் பண்பாதல் வேண்டும்” எனும் நீதியைத் தென்னவனுக்குப் போதித்தாள். “வஞ்சினம் வாய்த்த பின் அல்லாது யாவதும் வெஞ்சினம் விளியார் தமிழ் வேந்தர்” எனும் சீரைப் பார் புகழும் சேரமான் மூலம் உணர்த்தினாள். ‘அடக்க நினைப்பின் அடங்கிப்போகும் நிலை ஏற்படும்’

> என்பது புலப்படு கின்றது. தமிழர் சால்பும் தெளி வாகின்றது. விஞ்ஞானயுகத்தில், நாகரிகம் தலை விரித்தாடும் நிலையில் சிக்கித் தவிக்கும் மக்களுக்குச் சிலம்பை அறிவது நலம் பல தரும் என்பதும் உணரப்படுகின்றது".[24]

## நல்லுரைகள்

"வளப்பம் பொருந்திய பெரிய இவ்வுலகத்தில் வாழும் மக்களே! அல்லல் தொல்லைகளிலிருந்து நீங்கி இருங்கள். கவலைப் படாதீர்கள். தெய்வம் உண்டு என்பதைத் தெரியுங்கள். அப்படித் தெளிந்தவர்களைப் போற்றுங்கள். பொய் கூறுவதற்கு அஞ்சுங்கள். பிறர் இல்லாத காலத்து அவர்களைத் தூற்றுந்தன்மை உங்களிடம் ஏற்படாதவாறு உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். மாமிச உணவை நீக்குங்கள். உயிர்களைக் கொலை செய்யாதீர்கள். தானம், தவம் இவற்றைச் செய்யுங்கள். பிறர் செய்த நன்மையை மறவாதீர்கள். தீயோர் நட்பை நீக்குங்கள். பொய்ச் சாட்சி சொல்லா தீர்கள். பெரியோர் புத்திமதிகளை விரும்பிக் கேளுங்கள். நீதி வழியில் நடக்காதவர்களுடைய கூட்டத்தை விட்டு நீங்கித் தப்பிப் போங்கள். பிறர் மனைவியை விரும்பாதீர்கள். துன்பம் அடைந்தவர் களைச் சாந்தப்படுத்திக் காப்பாற்றுங்கள். இல்லறத்தைப் போற் றுங்கள். தீயசெயல்களை நீக்குங்கள். கள், களவு, காமம், கொலை, பயனில்லாத சொற்களைக் கூறும் கூட்டம் இவற்றை நீக்குங்கள். இளமை, செல்வம், உடல் இவையாவும் நிலைக்கமாட்டாதவை.

விதிக்கப்பட்டுள்ள வாழ் நாட்கள் எல்லை கடவா. பொருந் துதற்குரிய இன்ப துன்பங்கள் பொருந்தாமல் போகா. ஆதலால் மறுமையில் நன்மை அடைவதற்குச் சிறந்த துணையாயுள்ள வற்றைத் தேடுங்கள். எனவே இவ்வுலகை நீத்துச் செல்லும் மறுமைக்கு உற்ற துணை நிற்கும் நல்லறத்தை - நல்லறச் செல்வத்தை இங்கேயே இப்பிறவியிலேயே தேடிக்கொள்ளுங்கள். வளமிக்க இவ்வுலகில் வாழ்கின்றீர்கள். ஈங்கு மேற் சொன்ன முறைப் படி வாழ்ந்தால் நன்மையும் மேன்மையும் பெறுவீர். 'வாழ்க.'

ஆரிய மன்னன் முதல் சகலரும் பாரிய முறையில் பத்தினித் தெய்வ வழிபாடியற்றி அவர்களுடன் கருணை மேலீட்டாலும் கடவுள் சிந்தனையினாலும், அசரீரியாய் எழுந்த வான் குரல் கேட்டதினாலும் கயவாகு மன்னன் மனதிலே, பத்தினிக்கு வந்தனை வழிபாடுகள் ஈழமணித் திருநாட்டிலும் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் திண்ணமாக உதயமானதின் பயனாக, அன்றும் இன்றும் என்றும் சிங்களவர், தமிழர் என்ற பேதமின்றி ஒற்றுமையுடன் பத்தினித் தெய்வத்துக்கு வெற்றி விழாக் கொண்டாடுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அன்றைய கால கட்டத்தில் பாரதத்திற்கும் ஈழ நாட்டுக்கு மிடையில் இருந்த உறவுப்பாலமும் இதனால் காட்டப் படுகின்றது.

*சிலப்பதிகாரம்* இல்லையேல் ஈழத்தில் பத்தினி வழிபாட்டிற்கு வாய்ப்பின்றியே போயிருக்கும். இங்கு பத்தினி வழிபாடு தோன்றச் சிலம்பே காரணமாயிற்று. கயவாகு மன்னன் நாட்டிய பத்தினி வழிபாடு வைகாசிமாதம் பிறந்ததும் ஒரு புத்துணர்ச்சியை மக்கள் மனதில் காட்டிநிற்பதோடு பத்தினித் தெய்வவழிபாடு புகழீட்டியும் வருகின்றது.

> "கண்டி இராச்சியத்தில் கண்ணகிக்கு விழா எடுத்த காலத்தில் சிங்கள மக்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர் என்றும் பேசப்படுகின்றது. இதனைச் சார்ந்து பெரஹெரா விழாவும் கொண்டாடப் பட்டது என்றும் அறியமுடிகின்றது. ***கண்டி தலதா மாளிகை யிலும் கண்ணகிக்குச் சிலையுண்டு.*** இச் சிலையும் கயவாகு மன்னால் கொண்டு வரப் பட்டது என்று சொல்லப்படுகின்றது. கண்டியை யாண்ட கடைசிமன்னன் கண்ணகி வழிபாட்டுக்கும் புத்தூக்கம் கொடுத்து வழிபாடு இயற்றி வந்த தென்பதும் வரலாறு. சிங்கள மக்கள் பத்தினித் தெய்யோ என்றும் தமிழ் மக்கள் **கண்ணகி அம்மன், பத்தினி அம்மன்** என்னும் திருநாமங் களுடன் ஆலயங்கள் அமைத்து வழிபடு கின்றார்கள்.

முதலாம் இராஜசிங்கன் 48 கண்ணகி கோயில்கள் கட்டுவித்தானாம்."[25]

வடகீழ் மாகாணங்களில் கண்ணகிக்குப் பெருவிழா எடுத்துப் பொங்கல், படையல், தணல்நடை ஆகிய நேர்த்திக் கடன்கள் நிகழ்த்திக் கண்ணகி கதை படித்து விழாவை முடித்துக் கொள்ளும் பழைமையான வழமை இன்றும் காப்பாற்றப்பட்டு வருவதையும் காண்கிறோம். கிழக்கிலங்கையில் வைகாசி மாதம் பிறந்ததும், கண்ணகி விழாவுக்கான ஆரம்பங்கள் தொடங்குகின்றன. பறை யொலியும், குழலொலியும் முறையாகவும் உண்டு. மட்டுநகரில் மகரதோரணங்கள் தொங்கவிட்டு, வீதிகளும் அலங்கரிக்கப்படு வதுண்டு. பாமரமக்கள் மனதில் பக்திப் பரவசம் எழுந்து உடுக்கு இசையுடன் பாடி மக்களை வசப்படுத்தி ஆடவைக்கும் செயல் இருக்கின்றதே! ஆது *சிலம்பில் தேவந்தி* சாமியாடியதை நினை வூட்டும்.

பத்தினித் தெய்வத்தையே ஒரு தாயாகக் கொண்டு "தாய றிவாள் தாயறிவாள் பால் கொடம்மா, பத்துமாதம் சுமந்தவளே பத்தினி அம்மா. இந்தப்பாலகனைக் காத்திடம்மா பத்தினியம்மா எத்தனிநாள் காத்திருந்தோம் பத்தினியம்மா! வைகாசி பொறந்தாச்சு வரமெல்லாம் தத்திடுவாய் என்றெல்லாம் காதலாகிக் கசிந்துருகி நெகிழ்ந்து பாடுவதுடன் ஆடுவதும் பார்த்தோரைப் பரவசப்படுத்தும். வாய்மையும் தூய்மையும் இக்காலங்களில் கடுமையாகப் பேணப் படும். கிழக்கிலங்கையில் ***காரைதீவு, வீரமுனை, தம்பிலுவில், பட்டிநகர், செட்டிபாளையும், ஆரையம்பதி, துறைநிலாவணை, சித்தாண்டி***, சேனைக் குடியிருப்புப் போன்ற இடங்களில் கண்ணகி ஆலயங்கள் உள்ளன. சுவாமி விபுலானந்த அடிகளாரும் கண்ணகி மீது பாடல்கள் யாத்துள்ளார்.

***வடபால் மயிலிட்டி, புன்னாலைக் கட்டுவன் உடுவில், கோப்பாய், சுழிபுரம், தீவுப்*** பகுதிகளிலும் கண்ணகிக்குக் கோயில்களுண்டு. இங்கு பொங்கல் செய்து மடைபரப்பித் தங்கள் நேத்திகளை உற்சாகமாகக் கொண்டாடுவார்கள். உவர்மலைக் கண்ணகி அம்மன் கோயில் மிகப்பழைமை வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

போர்த்துக்கேயர் படையெடுப்பின் போது பக்தர்களால் மறைத்து வைக்கப்பட்ட அம்மன் சிலை பின்னர் கண்ணகிபுரம் எனும் தலப்பெயருடன் மீண்டும் சிறு ஆலயமாக்கி வழிபட்டு வரு கின்றனர். வண்ணாங்குளம் கண்ணகி அம்மனும் போர்த்துக்கேயர் வரமுந்திய காலந்தொட்டு மக்களால் வழிபட்டு வந்ததெனக் கூறப்படு கின்றது. வன்னி மண்ணின் சக்திவழிபாட்டுத் தலங்களில் வற்றாப் பளைக் கண்ணகி அம்மன் கோயில் ஈழத்திலேயே மிகப் பிரசித்தி பெற்ற கண்ணகியம்மன் ஆலயமாகும். கூடல் மதுரையை எரித்தபின் நாடு கடந்து காட்டு வழி வந்து சினம் தணிந்து, களைப்பு நீங்கி பத்தாவது இடமாகிய பத்தாப்பளையில் இளைப்பாறி இருந்தாள் என்று செவிவழிச் செய்தியாகக் கூறுகின்றனர்.'பத்தாப்பளை' என்பதே காலப்போக்கில் 'வற்றாப்பளை' என மருவியதாகவும் கூறுகின்றனர்.

> 'ஒல்லாந்தர் படையுடன் இங்கு நடைபோட முன்னர் வற்றாப்பளைக் கண்ணகையம்மன் திருத் தலம் இருந்ததாகவும் அங்கு தலவிருட்சமாகப் பெரிய **பனிச்சை மரம்** இருந்ததாகவும், ஒல்லாந்தர் படை ஆலயத்தை அழிக்க வழிதேடு கையில் பனிச்சைமரம் தனது பல்கிப்பெருகிய காய்களை வீசி அவர்களைக் கதி கலங்கச் செய்து, ஆலயத்தை அழிக்கவிடாமல் தடுத்தது என்றும் சொல்லப்படுகிறது. வேறு எங்கனும் இல்லாத தனிச்சிறப்பு ஒன்று இங்கு உண்டு. கடல்நீரைக் கலசத்தில் எடுத்துவந்து அன்னையின் சந்நிதியில் திரியிட்டுத் தீபமேற்றும் பழக்கம் ஆகும். கால் நடையாக யாழில் இருந்து கதிர்காமம் செல்லும் பக்தர்கள் இங்கு வந்து தங்கிப் போவதும் ஒரு வழமை.வைகாசிப் பூரணையில் இங்கு பொங்கல் வைத்து வழிபடுவர். இவ்வாறாகக் கயவாகு மன்னன் எடுத்த பெரு முயற்சியால் பத்தினித் தெய்வ வழிபாடு ஈழத்திற் பரவிய தெனலாம்."[26]

"இலக்கியம், இசை, நாடகம் சார்ந்த வழிபாட்டு நிலைமை களைச் சற்று விரிவாக ஆராய்வாம்.

"கண்ணகி கோவலன் கதை, வழக்குரை காதை என்பன முக்கியமான இடங்களிலும் ஆலயம் சார்ந்த இடங்களிலும் உற்சவ காலங்களிலும் வேறு காலங்களிலும் கூத்தாகவும், நாடகமாகவும் நாட்டுக் கூத்தாகவும் அண்ணாவி மார்களால் பயிற்றுவிக்கப்பட்டு, வயது முதிர்ந்தோராலும் நடித்துக் காட்டப்பட்ட தென்பதும் வரலாறு. நீண்ட காலமாக ஒரே பாத்திர மேற்று நடித்தவர்களின் பெயர்களின் முன்னர் பாத்திரப் பெயரைக் கொண் டிருந்ததையும் அறியமுடிகிறது. கண்ணகி கோவலன் கதை துன்பியல் நாடகமாதலால் இதைப் பார்த்த அக்காலப் பெண்மணிகள் விடிய விடிய அழுது கொண்டிருந்ததையும் வயது முதிர்ந்தோர் கூறினர். இரவுமுழுவதும் நாடகம் நடைபெறும். அரங்க ஒப்பனை தத்ரூபமாக அமை வதாகவும் கூறுவர்."[27]

*வட இலங்கை நாட்டார் அரங்கு* என்னும் ஆய்வு நூலில் கலாநிதி காரை. செ.சுந்தரம்பிள்ளை தரும் அரங்கியல், சடங்கியல், நாடகவியல் தொடர்பான செய்திகளை நோக்கலாம். ***சத்பத்தினி வழிபாடு:* (Sat Pathini Cult).**

"சிங்கள மக்களிடையே காணப்படும் சத் பத்தினி (ஏழுபத்தினி) வழிபாடு சப்த கன்னியர் வழிபாட்டையொத்ததாக வுள்ளது. பத்தினித் தெய்வமாகிய கண்ணகி யே சத்பத்தினி எனவும் அழைக்கப்படு கின்றாள். இத்தெய்வம் மாங்கனி, நீர், பூ,காய், தீ,துப்பட்டி, தந்தம் ஆகிய பொருள் களிலிருந்து தோன்றிய காரணத்தால்

முறையே அப்பத்தினி ஜலபத்தினி, மல் பத்தினி, சிரிமா பத்தினி, கினிபத்தினி, ஒறுமலாபத்தினி, தெதபத்தினி என்ற பெயர் களைப் பெறுகின்றாள் எனும் ஐதிகம் சிங்கள பௌத்தர்களிடையே நிலவுகிறது. (Raghavan, 196 : 125 – 126).நோய்களைக் குணப்படுத்தும் தெய்வமாக சிறப்பாகத் தொற்று நோய்களைத் தடுக்கும் தெய்வ மாகவே சத்பத்தினி கருதப்படுகின்றார்கள். அதனால் தொற்று நோய்கள் பரவுங் காலங் களிலும் எசல பண்டிகையின் போதும் சத்பத்தினி வழிபாடு பெருவிழாவாக இரவு முழுவதும் கொண்டாடப்படுகிறது. 'பத்தினி ஹாமி' எனப்படும் பெண் வேடமிட்ட பூசாரி (கப்புறாளை) இவ் விழாவை நாடக பாணியில் நடத்துவது வழக்கம்.

சப்த கன்னியர் வழிபாட்டில் 7 பெண்கள் அலங்கரித்து அழைத்து வருவது போல, சத்பத்தினி விழாவிலும் ஏழு இளம் பெண் களைச் சத்பத்தினிகளாக வேடமிட்டு கிரி அப்பு எனும் முதியவர் அழைத்து வருவார். இவ்வாறு அழைத்து வரப்படும் பெண்கள் கிரி அம்மாமார் எனப்படுவர். பத்தினி வராமி, கிரி அப்பு, கிரி அம்மாமார். ஆகிய அனைவரும் பத்தினி பேரில் தெய்வ அருள் வேண்டிப் பாடி ஆடுவர். (Raghavan, 1967: 132) பாடி ஆடும் போது மத்தளமே முக்கிய வாத்தியமாகப் பயன்படுத்தப்படுகிறது.

பத்தினிவழிபாடு தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு கயவாகு எனும் இலங்கை மன்னனால் எடுத்துவரப்பட்டது. (சிலம்பு: வரந்தருகாதை, வரி, 160 – 164). இந்து

மதத் தொடர்புடைய கண்ணகி வழி பாட்டுடன் சம்பந்தப்பட்ட சத்பத்தினி வழி பாட்டுக்கும் சப்தகன்னியர் வழிபாட்டுக்கும் நெருங்கிய தொடர்பிருக்கிற தென்பது இதனாற் பெறப்படுகிறது.

ஏர்பூட்டுவிழாவும், வேட்டுவவரியும் அவ்வக் குழுவினது தொழிற்போக்குப் பற்றியன. ஏர் பூட்டு விழாவைச் செய்வதன் மூலம் சப்த கன்னியரின் அருளைப் பெறலாமென்றும் அவ்வாறு செய்யத் தவறின் வளங்குன்று மென்றும் வட்டுவாசல் விவசாயிகள் நம்பினர்.(அவ்வாறே வேட்டுவக் குடியினரும்) கொற்றவைக்குரிய கடனைச் செலுத்தாத விடத்து வில்லிற்குரிய வெற்றியை அவள் ஈயாளென நம்பினர். ஆதனால் வேடுவர் அனைவரும் கூடித் தங்கள் பழங் குடிப் பிறந்த இளம் பெண்ணொருத்தி யைக் கொற்றவையாக ஒப்பனை செய்து பல வகைப் படையல்களையும் வாசனைப் பொருள்களையும் பணி செய்யும் மறப் பெண்கள் ஏந்தியவாறு பின்தொடர, பறையும் கொம்பும், முழவும் மணியும் ஒலிப்பச் சென்று கொற்றவை (ஐயை) கோயில் முன் அக் குமரியை நிறுத்தித் தொழுதேத்தினர். (சிலம்பு, வேட்டுவவரி, 16-44) எயினர் எடுத்த இவ் விழாவில் நாடக அம்சங்கள் பல இருக்கக் காணலாம்."[28]

கலாநிதி காரை.செ.சுந்தரம்பிள்ளை மேலும் சில கருத்துக் களை முன்வைத்துள்ளார். அவை வருமாறு,

"நவாலி வடக்கில் ஒரு கண்ணகியம்மன் கோவிலுள்ளது. இங்கே நீண்ட காலமாகக் கண்ணகி கதை உடுக்கடி கதையாகச் சொல்லப்பட்டு வந்தது. 1930 அல்லது 1935 அளவில் உடுக்கடிக் கதைக்குப் பதிலாகக் கோவலன் கூத்து ஆடப்படலாயிற்று. தற்போது இவை ஒன்றும் இல்லை என்று கூறுகிறார் நவாலி முருகேசு ஆசிரியர்."[29.]

**சுட்டிபுரமும் கண்ணகி கதையும்** என்பது குறித்துப் பின்வருமாறு எழுதியுள்ளார் கலாநிதி காரை.செ.சுந்தரம்பிள்ளை.

சுட்டிபுரம் அம்மன் கோவிலிலும் நுணாவில் கண்ணகி அம்மன் கோவிலிலும், வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோவிலிலும் கண்ணகியம்மன் கதையை உடுக்கடித்துப் பாடி வந்தனர். பின்னர் உடுக்கடி கதையும் கோவலன் கூத்தும் ஆடிவந்தனர். இப்பொழுதும் நுணாவிலிலும் வற்றாப்பளையிலும் கண்ணகி கதை பாடப்பட்டு வருவதைக் காணலாம் என்பார் கவிஞர் ஐயாத்துரை.

வடஇலங்கை முழுவதிலு மிகுந்த கண்ணகியம்மன் கோவில்கள் தோறும் கண்ணகியின் வரலாறு நீண்ட காலமாகப் பாடப்பட்டு வந்தது. ஆறுமுகநாவலர் கண்ணகி வழிபாட்டை விரும்பவில்லை. கண்ணகி ஒரு மானிடப் பெண். அவளை வணங்கக் கூடாததென்பது அவருடைய கருத்தாகும். (ஆறுமுகநாவலர் : 1967, 68) அதனால் **நாவலரைப் பின்பற்றிய பலர் கண்ணகி அம்மன் கோவில்களை முத்து மாரியம்மன் கோயில்களாகி மாற்றிவிட்டனரெனலாம்.** உதாரணமாக அல்வாய் முத்துமாரியம்மன் கோயில், காரைநகர் பாலாவோடை முத்துமாரியம்மன் கோயில் என்பவற்றைக் கூறலாம். இதனால் கண்ணகியின் கதையைப் பாடுவது வடக்கில் அருகி விட்டது.

"சத்பத்தினி வழிபாடு, கிரி அம்மையார் வழிபாடு என்பன மட்டுமன்றி ரத்னாவளி வழிபாடு (Raghavan, 1967: 130 – 131) அமராவதி வழிபாடு (Obeysekera, 1984: 300) என்பனவும் பத்தினி

வழிபாட்டுடன் தொடர்புடையனவாகவுள்ளன. கண்ணகி வழக்குரை, கோவலன் கதை என்பன உடுக்கடி கதைகளாக ஈழத்து இந்துக் களிடையே நிலவி வருவது போலவே பௌத்த சிங்கள மக்களிடையே சத்பத்தினி கவி (Obeysekera, 1984, 121 : 122) ரத்னாவளி கவி (Raghvan, 1967 ; 130 – 131) என்பன பத்தினி வழி பாட்டின் போது பாடப்பட்டும் ஆடப்பட்டும் வருகின்றன. சொக்கரி எனும் சிங்களக் கூத்தும் பத்தினி வழிபாட்டுடன் தொடர்புடையதாகக் காணப்படுகிறதென்பர் சரத்சந்திரா (1964 : 84).”[30]

பத்தினித் தெய்வம் மாங்கனியிலிருந்து பிறந்தவள் எனும் ஐதிகம் சிங்கள மக்களிடையே இருப்பது போலக் கண்ணகியும் மாங்கனியிலிருந்து பிறந்தவள் எனும் ஐதிகம் ஈழத்து இந்துக் களிடையே உண்டு. (*கண்ணகி வழக்குரை*, (1968 ,10 - 18).

தமிழகத்திலாடப்படும் கோவலன் நாடகத்திலும் (1975) ஈழத் திலிடம் பெறும் கோவலன் நாட்டார் கூத்திலும் கண்ணகி காளியாக அவதாரமாகச் சொல்லப்படுகின்றனர். ரத்னாவளி கவியில் ரத்னாவளி பத்தினித் தெய்வத்தைப் போன்றவளாக வருணிக்கப்படும் அதே வேளையில் காளிதேவியை யொத்தவளாகவும் விபரிக்கப்படுகின்றாள். இவ்வருணனை கேரளத்தில் வணங்கப்பெறும் பகவதியை ஒத்த தாகவுமுள்ளதென்பர் இராகவன் (1967:131).

எனக்குக் கற்பித்த பேராசிரியர், கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி பின்வருமாறு முடிவான கருத்துக்களைத் தெரிவித் துள்ளார். ***வட இலங்கை நாட்டார் அங்கு*** என்ற நூலில்,

“கண்ணகை அம்மன் வழிபாடு யாழ்ப்பாணம், வன்னியிலும் உண்டு. கண்ணகை அம்மன் வழிபாட்டையும், பத்தினி வழிபாட்டையும் பிரித்து நோக்குகின்ற ஆராய்ச்சியாளர்களும் உள்ளனர். கண்ணகை அம்மன் பாண்டிநாடு வழியாக வந்த தென்றும், பத்தினி (கண்ணகி வழிபாடு) கேரள சோழநாடு வழியாக வந்ததென்றும் (அதனால்

சிவன் (முறைமைகளுடன்) தொடர் புடையது என்றும் கூறுவர் சிலர். திரௌபதி அம்மன் வழிபாடு மிக முக்கியமான ஒன்றாகும். இது தமிழ்நாட்டின் தென்பகுதியில் பிராமணரல்லாத வரிடையே பெரிதும் வழக்கிலுள்ளது. இந்த நம்பிக்கை பற்றி அண்மையில் அல்லைறற் றல்ஸல் என்பவர் மூன்று தொகுதி ஆராய்ச்சியை வெளியிட்டுள்ளார். பாண்டிருப்புத் திரௌபதி அம்மன் கோயிலில் நடைபெறும் வனவாசச் சடங்கில் பாண்டவரின் வனவாசச் செல்லுகை சடங்காக ஆற்றப்படுகிறது. இது மிகுந்த பய பக்தியான ஒரு சமயச் சடங்காகும். மட்டக் களப்பில் நடைபெறும் சடங்குகளுக்கு யாழ்ப்பாணத்தில் இப்பொழுது பல இடங்களில் நடைபெறும் மடைகளுக்கும் பொதுமையைக் காணலாம் என்று கூறுவர்."[31]

கயவாகு வேந்தன் சேரநாட்டிலிருந்து வந்த ஜம்புகோளத் துறையில் இறங்கினான் என்றும், அத்துறைமுகத்துக்கு அருகாமை யில் கந்தரோடைப் பக்கமாக அங்கணாமக் கடவை என்னும் இடத்தில் இலங்கையில் முதல் பத்தினி அம்மன் கோயிலை அவன் அமைத்தான் என்றும் நம்பப்படுகிறது. தொடர்ந்து ரஜரட்ட, உறுகுணைரட்டைப் பகுதிகளில் மாத்திரமன்றிப் பிற்காலத்தில் தலை நகரங்கள் மாற்றம் பெற்ற இடங்களிலெல்லாம் பத்தினித் தெய்யோ வுக்குக் கோயில்கள் அமைத்துச் சிங்கள மக்கள் போற்றி வந்தனர். இப் பத்தினித் தெய்யோ கோயில்களில் தெவிநுவர. அங்குரான் கெட்ட, குண்டசாலை முதலான இடங்களில் இருந்த கோயில்கள் சில காலப்போக்கில் கைவிடப்பட்டன என்று அறியக்கிடக்கின்றது.

தமிழ்ப்பிரதேசத்தில் *அங்கநாமக்கடவை* என்னும் இடத்தோடு, புளியங்குளம் என்னும் இடத்திலும் பத்தினி அம்மன் கோயில் அக் காலத்தில் அமைக்கப்பட்டதாக ஆர்.டபிள்யூ. ஐவேஸ் கூறுவார். மடுத்திருப்பதியும் முன் பத்தினியம்மன் கோயில் இருந்த இடமே

என்பது பத்தினித் தெய்வக் கோயில் அமைக்கப்பட்டிருந்ததாக எஸ்.குமாரசாமி குறிப்பிடுகின்றார். திருகோணமலை மாவட்டத்தில் பறையன் குளம், பாலம் போட்டாறு, நிலாப்பழை, மலைமுந்தல், கந்தளாய் என்னும் இடங்களிலெல்லாம் பழைய பத்தினி அம்மன் கோயில்கள் இருந்தன.

மட்டக்களப்பு மாநிலத்தில் நாகரிகம் அடையாத நிலையில் நாகர் இனத்தைச் சேர்ந்த திராவிட ஆதிக்குடிகள் வாழ்ந்து வந்தன ரெனலாம். இவர்கள் மத்தியிலும் பத்தினித் தெய்வ வழிபாடு பரவியது. பணாமை, களுவன் கேணி, திகிரிவட்டை என்னும் இடங்களிலெல்லாம் பத்தினியம்மன் வழிபாட்டிடங்கள் இருந்து வந்தன. கோரா வெளியில் இருந்த பண்டைய பத்தினியம்மன் காலப்போக்கில் "வேடப்பெண் கோயில்" என்றும், பின் 'வள்ளிநாச்சி கோயில்' என்றும் மாற்றம் பெற்று, அண்மைக் காலத்தில் கண்ணகை யம்மன் கோயிலாக உருப்பெற்றுள்ளது. இத்தோடு புளியந்தீவு, பாலமீன்மடு, நாணமடு ஆகிய கண்ணகை யம்மன் கோயில்கள் பண்டைய முறைப்படி இன்றும் பத்தினியம்மன் கோயில்கள் என்றே அழைக்கப்பட்டு வருகின்றன. புளியந்தீவிலே இருந்த பத்தினியம்மன் கோயில் 1978 ஆம் ஆண்டு வீசிய சூறாவளி யால் அழிக்கப்பட்டு மீளத் தொடங்கப்படாத நிலையில் உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. சிங்கள மக்கள் மத்தியில் ***சிலம்புக்கதா, பத்தினி படிமா*** என்னும் நூல்களும் வேறு சில பத்ததிகளும் பத்தினித் தெய்யோ வழிபாட்டு முறையைக் கூறுவதாக அறியமுடிகின்றது. பத்தினித் தெய்யோ துர்க்கையின் அவதாரம் என்றும், எட்டுக் காளிகளினால் அவள் சூழப்பட்டிருக்கின்றாள் என்றும் இவர்கள் நம்பினர். பத்தினித் தெய்யோ கோயில்களில் உயிர்ப்பலி கொடுத்தல், தெய்வம் ஆடுதல் என்பன வருடாந்த பூசையில் முக்கிய நிகழ்ச்சிகளாக இடம் பெற்று வந்தன. இப் பூசையைக் கொண்டு நடத்துபவர் கப்புறாளை அல்லது கப்புகனார் என்றழைக்கப்பட்டார்.

> "சிங்களமக்கள் மத்தியில் காணப்பட்ட பத்தினித் தெய்வ வழிபாட்டில் இருந்து மட்டக்களப்பு ஆதிக் குடிகள் நடத்திய பத்தினித் தெய்வ வழிபாடு வேறு பட்ட தன்மைகள் கொண்டதாக இருந்ததென நம்ப

இடமுண்டு. இதற்குப் பாணமை, திருகோணமலை மாவட்டத்திலுள்ள மலைமுந்தல் ஆகிய பத்தினி யம்மன் வழிபாடுகள் சான்றாக உ_ள்ளன. இவற்றில் கொம்பு முறித்தல் முக்கிய அம்சமாக இருந்து வந்துள்ளது. இவ்வழிபாட்டின்போது வெற்றிபெற்ற குழுவினர் நிர்வாணமாக நின்று ஆடுவது இங்கு வாழ்ந்தோர் நாகரிகம் அடைய முன்னராக இவ் வழிபாடு வந்து புகுந்தமையை எடுத்துக் காட்டு கின்றது எனலாம். கந்தளாய் குளக்கட்டம்மன் கோயிலில் மழை வேண்டிச் செய்யும் மரபு வழி யான நிகழ்ச்சியிலும் கப்புகனார் நிர்வாணமாக நிற்பதும் அறியக் கிடக்கின்றது. இவைபற்றிய விரிவான ஆய்வு செய்வது அவசியமாகும். பண்டைய நாளில் பத்தினித் தெய்வ வழிபாடு நோய்பிணி நீக்கம் வேண்டியும், மழை வேண்டியும் செய்யப்பட்டு வந்துள்ளது என்பதும் இங்கு குறிப் பிடத்தக்கது."[33]

# இயல் மூன்று

## மட்டக்களப்பில் கண்ணகையம்மன் வழிபாடு

மட்டக்களப்பில் கண்ணகியைக் 'கண்ணகை' என்று அழைப்பது ஒரு சிறப்பம்சமாகும். கண்ணகை என்றால் ***கண்ணுக்கு ஒளியைக்*** கொடுப்பவள் என்றும், ***பார்ப்பதற்கு அழகு பொருந்தியவள்*** என்றும் பொருள்படும் எனக் கண்ணகி இலக்கியங்கள் பற்றி ஆய்வு செய்த எம்.சற்குணம் குறிப்பிடுவார்.

பத்தினித் தெய்வமும் இக் கண்ணகை அம்மனும் காவிரிப்பூம் பட்டினத்தில் தோன்றி, மதுரையில் தன் கற்புத் திறத்தைக் காட்டிய கண்ணகியேயாகும். எனினும் தெய்வமெனக் கொண்டாடும் நிலையில் இவற்றுள் வேறுபாடு கருதி இங்கு தனித்தனி ஆராய்வாம். பத்தினியம்மன் சேரநாட்டிலிருந்து கி.பி.2 ஆம் நூற்றாண்டில் கொண்டுவரப்பட்டுக் காலப்போக்கில் பௌத்தச் செல்வாக்குக்கு உட்படுவதையும் கண்ணகி அம்மன் பாண்டிய நாட்டிலிருந்து கி.பி. 8 ஆம் நூற்றாண்டுக்குப் பின் இங்கு தமிழரால் கொண்டுவரப்பட்டுக் காலப் போக்கில் இந்துசமய சக்தியாக மாற்றம் பெற்றதையும் காணமுடிகிறது. இவ்விரண்டு வழிபாடுகளுக்கும் இடையேயும் மட்டக்களப்பில் பல தொடர்புகள் ஏற்பட்டமையையும் அறியலாம். காரைதீவு, பட்டிமேடு முதலான கண்ணகையம்மன் கோயில்கள் பூசகரைக் கப்புகண் எனக்கூறும் வழக்கம் பத்தினித் தெய்வ வழிபாட்டின் தொடர்பால் தோன்றிய ஒன்றேயாகும்.

நாடு காட்டு பரவணிக் கல்வெட்டிலிருந்து பட்டி மேட்டுக் கண்ணகியம்மன் கோயிலில் சிங்களக் கட்டாடி சிங்களப் பத்ததி கொண்டு பூசை செய்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தோடு தமிழ்ப் பகுதிகளில் பண்டைய பத்தினியம்மன் கோயில்கள் சில கண்ணகை யம்மன் கோயில்களாக மாறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் கண்ணகை வாழ்க்கை வரலாறு *சிலப்பதிகாரம்* கூறுவதிலிருந்து சில வகைகளில் வேறுபட்டதாக உள்ளது. இங்கு கண்ணகையின் வாழ்க்கை வரலாற்றை கூறுவது ***கண்ணகை வழக்குரை காவியம்*** என்னும் பெருநூலாகும். இந்நூல் வற்றாப் பளையில் பாடப்படும்.

***குளித்திப்பாடல், ஊர்சுற்றுக் காவியம், மழைக்காவியம்,*** கண்ணகி அம்மன் கோயில்கள் குறித்து எழுந்த பக்திப்பாடல்கள், வசந்தன் பாடல்கள் முதலியவையெல்லாம் கண்ணகை பற்றி இங்கு அறிய உதவும் இலக்கியங்களாக உள்ளன.

> "மட்டக்களப்புக் கண்ணகி பற்றிய இலக்கியங்கள் இவளைச் சிவபெருமானோடு பெரிதும் தொடர்பு படுத்த முயற்சிப்பதையும் காணலாம். பராசர முனிவரின் மகளாகிய நாகமங்கலை என்பாள் சிவபெருமான் வரத்தினால் மாங்கனியாகிப் பின் கண்ணகையாகினாள் என்று கூறப்படுவதோடு, சிவனருளினாலேயே பொன் ஊசியும், நூலும் பெற்றுக் கண்ணகை கோவலனை எழுப்பினாள் என்றும் இறுதியாகக் ***கோபமாறிய கண்ணகை சிவ□சை செய்தாளென்றும் வழக்குரையின் ஏனைய பாடல்களும் எடுத்துக் கூறுகின்றன.*** இலங்கையில் கண்ணகை வரலாற்றோடு நாகம் தொடர்பு படுத்தப்படுவதும் இங்கு அவதானிக்கத் தக்கஒன்று. நாகமங்கலையே கண்ணகையாகப் பிறந்தாள் என்பதோடு நாகமணி கொண்டே அவள் காற் சிலம்பு செய்யப்பட்டது என்றும் கூறுவர். மதுரையை எரித்த கண்ணகை ஐந்துதலை நாகவடிவில் யாழ்ப்பாணத்தை வந்து சேர்ந்தாள் என்பது ஐதிகம்."[34]

மட்டக்களப்பு மண்முனைப் பகுதியிலும் பண்டாரியா வெளி யிலும் எழுந்தருளியுள்ள நாகத்தின் உடன் பிறப்பாகிய கொம்பி,

கண்ணகி ஆலய ஸ்தாபகராகவும் கூறப்படுகின்றாள். மகிழடித் தீவு கண்ணகை யம்மன் கோயில் இக் கொம்பி அம்மையினாலேயே ஸ்தாபிக்கப்பட்டது என்பது மரபுவழியான செய்தியாகும். இவ்வாறே கண்ணகை யம்மன் நாகத்துடன் தொடர்புபடுத்தப்படுவது கண்ணகை வழிபாடு இங்கு வரும் போது நாகவழிபாட்டுக்கு இங்கிருந்த செல்வாக்கைக் காட்டுவதோடு அன்றைய காலத்தில் நாகர் குல மக்களின் செல்வாக்கிற்கும் ஓர் எடுத்துக் காட்டாக அமைகிறது எனலாம். மட்டக் களப்பில் கி.பி.8 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் கண்ணகி வழிபாடு தோன்றி வளர்ந்தமைக்குப் பின்வரும் காரணங்களை முக்கியமாகக் குறிப்பிடுகின்றார் மகேஸ்வரலிங்கம் (1966).

**I.** இரண்டாவது பாண்டியப் பேரரசின் காலத்தில் திருக்கோயிலைச் சூழவுள்ள பிரதேசங்களில் பாண்டியக் குடியேற்றங்களும், கலாசாரச் செல்வாக்கும் ஏற்பட்டன. திருக்கோயில் சித்திர வேலாயுத சுவாமி கோயில், கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீஸ்வரர் கோயில் என்பன பாண்டிய கட்டிடச் செல்வாக்கில் உருவாகியமையைக் ***கலாநிதி கார்த்திகேசு இந்திரபாலா*** எடுத்துக்காட்டுகிறார். பாண்டிய நாட்டு மக்கள் கண்ணகையின் சாபத்தால் தமது நாட்டில் அடிக்கடி மழை பெய்வதில்லை என்றும், அதற்காகக் கண்ணகியை வழிபட வேண்டுமென்றும் நம்பியவர்கள். இந் நம்பிக்கையோடு இங்கு வந்தவர்கள் பட்டிமேடு, தம்பிலுவில், வீரமுனை முதலான இடங்களில் கண்ணகி கோயில்களை உருவாக்கினர்.

**II.** இலங்கையில், குறிப்பாக வட இலங்கையில் முக்குகர் செல் வாக்கைப் பெற்றிருந்த போது கண்ணகி வழிபாடு செய்யும் பாண்டிய கரையார் வட இலங்கையில் குடியேறினர். இதனால் இவ்விரு இனங்களிடையே மனக் கசப்பு உருவானது எனலாம். இதனை எடுத்துக் காட்டுவதே ***மட்டக்களப்பு வழக்குரை காவியம்*** கூறும் மீகாமன் வெடியரசன் போர் எனலாம். கண்ணகி வழிபாட்டுக் குரியவர்களை எதிர்த்ததால் காலப்போக்கில் கரையாரோடு முற் குகரும் கண்ணகி வழிபாட்டை மேற்கொள்ளத் தொடங்கினர். வட இலங்கையில் ஏற்பட்ட இம்மாற்றம் மட்டக்களப்பையும்

பாதித்தது எனலாம். (இப்பண்பின் பல்வேறு பரிமாணங்கள் இன்றும் பெரும் பாதிப்பினையும் தாக்கல்களையும் ஏற்படுத்திவருவது நிதர்சனம்.)

**III.** ***மட்டக்களப்பு மான்மியத்***தின்படி 16 ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியில் விமலதர்ம சூரியன் கண்டியிலிருந்து ஆட்சிசெய்த போது யாழ்ப்பாணத்து ஒத்துக்குடா என்னும் இடத்திலிருந்து கந்தரென்பவர் செம்பி, மயிலி என்னும் இரு தங்கையர்களோடு 7 கண்ணகி சிலைகளோடும் மண்முனையை அடுத்துள்ள புதுக்குடியிருப்பு என்னும் இடத்தில் குடியேறினர். ஒற்றனென்ற சந்தேகத்தால் கந்தரும் அவர் இரு சகோதரிகளும் கொல்லப்பட நேர்ந்தது. இதனால் கண்ணகையின் பழிக்கு அஞ்சி மண்முனைப் பிரதேசத்தில் இவ் வழிபாடு தோற்றம் பெற்று வளர்ந்தது.

**IV.** மட்டக்களப்பில் அடிக்கடி மழை பெய்யாமை கண்ணகை வழிபாட்டை மென்மேலும் ஊக்கப்படுத்திற்று. இவ்வகைகளில் தோற்றம் பெற்று வளர்ந்த இவ்வழிபாடு 18ஆம் நூற்றாண்டில் அறுமக்குட்டி போடியார் காலத்தில் பல கண்ணகையம்மன் கோயில்களைக் கொண்டிருந்தது. இதனை அக்காலத்திலெழுந்த ஊர்சுற்றுக் காவியம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"பட்டிநகர் தம்பிலுவில் வீரமுனை காரைநகர்
பவுசுபெறு கல்முனை கல்லாறெரிவில் மகிழூர்
செட்டிபாளையும் புதுக் குடியிருப்பு
செல்வமுறு மகிழடித்தீவு முதலைக்குடி
அட்டதிக்கும் கண்ணகை புகழும் வந்தாறுமுலை நகர்
ஆங்காங்கு நித்திய கலியாணியாய் அமரும்
மனதில் நினைக்க வினைமாறி ஓடிடுமே."

இதனையடுத்துத் தோன்றிய ***மழைக்காவியத்***திலும், 'கூவா குயில்" வசந்தன் பாடல்களிலும், துறைநீலாவணை, பாண்டிருப்பு, எருவில், கொக்கட்டிச்சோலை, கன்னன்குடா, ஈச்சந்தீவு முதலான இடங்களும் கண்ணகிகோயில் கொண்ட இடங்களைாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

19ஆம் நூற்றாண்டிலும், 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலும் யாழ்ப்பாணத்தில் கண்ணகியம்மன் கோயில்கள் அருகிக் கொண்டிருந்த இக்காலத்தில் மட்டக்களப்பில் பல கண்ணகையம்மன் கோயில்கள் மேலும் உருப்பெற்றமையை அறிய முடிகின்றது. இன்று 46க்கும் மேற்பட்ட கண்ணகையம்மன் கோயில்கள் மட்டக் களப்பு மாநிலத்திலமைத்திருப்பதைக் காணலாம்.

மட்டக்களப்புப் போலவே வட இலங்கையிலும் கண்ணகி யம்மன் கோயில்கள் பல தோற்றம் பெற்றிருந்தன. புங்குடுதீவு, புலோலியூர், மந்திகை, கரம்பன், செட்டிகுளம், வற்றாப்பளை, பொறிக்கடவை, சங்குவயல் முதலான இடங்களில் கண்ணகி கோயில்கள் எழுச்சியுற்றிருந்தன. இக்கோயில்கள் சில இராஜராஜேஸ்வரி, புவனேஸ்வரி, மனோன்மணி, நாகேஸ்வரி, நாக பூஷணி என்னும் பெயர்கள் கொண்ட சக்தி கோயில்களாக மாற்றம் பெற்றன.

மட்டக்களப்பு மக்கள் நோய்களிலிருந்து விடுதலை பெறவும், மழை வளம் வேண்டியும் கண்ணகையை முக்கியமாக வழிபட்டனர். கண்ணகையின் கோபத்துக்கு ஆளாகினால் வைசூரி, குக்கல், வெப்பு, சின்னம்மை, வயிற்றுக் கடுப்பு, கண்ணோய், பெருஞ்சுரம் முதலிய நோய்களுக்கு ஆளாகவேண்டி வரும் என அஞ்சினர். இந்நோய்கள் தோன்றினால் அவற்றை விலக்கித் தருமாறு கண்ணகையை வேண்டி நின்றனர்.

> "நாடு செழித்து நன்மழை பெய்து செந்நெல்
> விழைந்து தேசம் தழைத்து மனுநீதி செழித்து
> மன்னர் அரசு செங்கோல் ஓங்கிச் சிறப்புடன் மனுக்
> குலம் இந்திரன் போல இருந்து வாழ்வரே" என்னும்

இலக்கை நோக்கியும் கண்ணகியை வழிபட்டு வந்தனர்.

இடைச்சேரியில் பாலமுதம் அருந்தியும் கொம்பு முறி விளையாட்டுப் பார்த்தும் கண்ணகி கோப

மாறினாள் என்பது ஐதிகம். இதற்கமைய இவ் விரண்டும் கண்ணகி வழிபாட்டில் முக்கியம் பெற்று வருகின்றன. கப்புகன் முறையோடு முக்கியமாகக் கட்டாடி முறையிலும் கண்ணகி வழிபாடு இங்கு செயற்பட்டு வந்தது. சில இடங் களில் கண்ணகி கோயில்களில் தெய்வமாடுவதில்லை. வேறு தெய்வங்கள் ஆடினாலும் கண்ணகையாக உருக் கொண்டு ஆடுவது வழக்கமில்லை. கண்ணகிக்கு உரிய சடங்கு வைகாசி மாதம் பூரணையில் அல்லது பூரணையை அடுத்த திங்கட்கிழமையை குளுத்தி, நாளாகக் கொண்டு செய்யப்பட்டு வருவது வழமையாகும்."[35]

ஆய்வாளர் மகேஸ்வரலிங்கம், மட்டக்களப்பிலுள்ள கண்ணகையம்மன் கோயில்கள் உள்ள இடங்களின் விபரங்களைத் தந்துள்ளார்[36]. ஊர்ப்பெயர்கள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | அமிர்தகளி | 2. | ஆரையம்பதி |
| 3. | ஈச்சந்தீவு | 4. | உன்னிச்சை |
| 5. | எருவில் | 6. | கதிரவெளி |
| 7. | கல்முனை I | 8. | கல்முனை – 3 |
| 9. | கல்லாறு | 10. | கன்னன்குடா |
| 11. | களுதாவளை | 12. | களுவாஞ்சிக்குடி |
| 13. | கருவேப்பங்கேணி | 14. | காரை தீவு |
| 15. | கிரான் குளம் | 16. | குருக்கள் மடம் |
| 17. | கொக்கட்டிச் சோலை | 18. | கோராவெளி |
| 19. | கோட்டைக் கல்லாறு | 20. | கோயில் போரதீவு |
| 21. | சத்துருக் கொண்டான் | 22. | சக்திவெளி |
| 23. | செட்டிபாளையம் | 24. | நாவற்கேணி |
| 25. | நான்காங்கிராமம் | 26. | தம்பிலுவில் |
| 27. | தாளங்குடா | 28. | தாண்டவன் வெளி |
| 29. | துறைநீலாவணை | 30. | தும்பங்கேணி |
| 31. | பதினான்காங் கிராமம் | 32. | பதினைந்தாங் கிராமம் |
| 33. | கள்ளியடித் தோட்டம் | 34. | கரையாகன் தீவு |

35. கற்குடா 36. காரைதீவு
37. காஞ்சிரங்குடா 38. கிரான்
39. கிரான் குளம் 40. கொக்குவில்
41. குறிஞ்சாமுனை 42.
பாவக்கொடிச்சேனை
43. புதுக்குடியிருப்பு 44. புன்னைச் சோலை
45. பெரியபோரதீவு 46. மகிழவெட்டுவான்
47. மிலாத்துச் சேனை 48. முகத்துவாரம்
49. தாண்டியடி 50.
தாளையடித்தெரு
51. தேற்றாத்தீவு 52. பழுகாமம்
53. பதினோராங்கிராமம் 54. பட்டியடிச் சோலை
55. பாண்டிருப்பு 56. பாலமீன் மடு
57. முனைக்காடு 58. முறக கொட்டான்
சேனை
59. வவுணதீவு 60. வ ா த க
கல்மடு
61. வாழைச் சேனை 62. விடுதிக்கல்
63. வீரமுனை

"பெண் சக்திகளுட் பெரும்பாலானவை ஆண் தொடர்புடன் தான் விளங்குகின்றன வென்பதும் மனங்கொள்ள வேண்டிய அம்ச மாகும்." [37]

| | | |
|---|---|---|
| பிரம்மா | – | பிராம்மி |
| மகேசன் | – | மகேஸ்வரி |
| குமரன் | – | கௌமாரி |
| வராகன் (அரி) | – | வராஹி |
| சிவன் | – | உமை |
| விஷ்ணு | – | வைஷ்ணவி |
| உருத்திரன் | – | ரௌத்திரி |
| இந்திரன் | – | இந்திராணி |

ஏகாம்பரநாதர் (காஞ்சி) – காமாட்சி
சிதம்பர நடேசர் (தில்லை) – தில்லைக்காளி, சிவகாமசுந்தரி
சோமசுந்தரர் (மதுரை) – மினாட்சி
விஸ்வநாதர் (காசி) – விசாலாட்சி என்பன கவனித்தற்குரியன.

கண்ணகி வழிபாட்டோடு ***இனவரலாறும்*** பிணைந்துள்ளமையையும் சுட்டுதல் அவசியம். ***சிலப்பதிகாரத்திற்கு*** முற்பட்ட வரலாறு நாக அரசு களின் வரலாறு என்பர் ஆய்வறிஞர்கள். எனவே நயினாதீவில் நிலவும் நாகபூஷணியம்மன் வழிபாடு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து வரலாறு என்பதனை வரலாற்றுப் பேராசிரியர்கள் நிறுவியுள்ளனர். பேராசிரியர்கள் க.கணபதிப்பிள்ளை, சி.பத்மநாதன் கா.இந்திரபாலா, சி.க.சிற்றம்பலம், வி. சிவசாமி ; க.சத்தியசீலன், பொ.இரகுபதி; கலாநிதி க.குணராசா, செ.குணசிங்கம், மா.வேதநாதன், செ.கிருஷ்ணராசா, பரமு. புஷ்பரத்தினம், திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கம் போன்றோர் தக்கபடி சான்றாதாரங்களோடு நிறுவியுள்ளனர்.

> "நாகர்கள் என்ற திராவிடர்கள் உலகிற் பல பாகங்களிலும் வாழ்ந்தார்கள் என்பதைப் பாம்பு வழிபாடு என்னும் நூலை எழுதிய கலாநிதி ப. அறவாணன் உறுதி செய்கிறார். இலங்கை, இந்தியா, அமெரிக்கா, மத்திய தரைக்கடல் பிரதேசம், ஆபிரிக்கா தென் கிழக்காசியா ஆகிய பகுதிகளில் நாகர்கள் வாழ்ந்தார்கள் வளர்ந்தார்கள், ஆண்டார்கள், அனுபவித்தார்கள் என்ற வரலாற்றின் எச்சங்கள் இந் நாடுகளில் ஏராளமாக இன்றும் உண்டு. அமெரிக்காவில் தனிநாடு கேட்டுப் போராடும் மயோரிஸ் மக்கள் நாகர்கள். இந்தியாவில் நாகநாடு கோரிப் போராடுபவர்கள் நாகர்கள். யப்பானிலுள்ள ஆட்களின் பெயர்கள் கூட நாக என்ற மூலத்திலிருந்து வந்தவை.

மத்திய தரைக் கடற்பிரதேசத்தில் உள்ள அரபு என்ற சொல் அராம் என்ற சொல்லில் இருந்து

பிறந்தது என அறிஞர்கள் கூறுகிறார்கள். அரவம் என்றால் பாம்பு. அரவர் என்றால் பாம்பை வழிபடு பவர்கள். தமிழருக்கு அரவர் என்றும் பெயர் உண்டு. அரவர்கள் வாழுமிடம் அரேபியாவானது எனக் கூறப்படுகிறது. எனவே இன்றைய **அரேபியா** அன்று பாம்பை வழிபட்ட நாகர்கள் வாழ்ந்த பிரதேசம் என்பதில் ஐயமில்லை. அது போல, **எகிப்தில் நாகவழிபாடு செய்யப்பட்டது. அசோக மன்னன் பௌத்த மதத்தைப் பரப்ப எகிப்திற்குத் தேரர்களை அனுப்பினான்** எனக் கலாநிதி ப. அறவாணன் தன் **பாம்புவழிபாடு** என்னும் நூலில் கூறியுள்ளார்". [38]

விஜயன் நாகபரம்பரையைச் சேர்ந்தவன் என *மட்டக்களப்பு மான்மியம்* கூறுகிறது. இலங்கைக்குப் புத்த சமயத்தைக் கொண்டு வந்த தேவநம்பியதீசன் ஒரு நாகன். இவனின் தாய் மாந்தையை ஆண்ட ஓவியராக இளவரசியாகும். துட்டகைமுனு கல்யாணபுரத்து நாக அரசபரம்பரையைச் சேர்ந்தவன். அவனின் தாயான விகார(ம்) மாதேவி கல்யாணி நாக அரச பரம்பரையைச் சேர்ந்த களனி தீசனின் மகள். ஆகையால் துட்டகைமுனு விஜயனின் அரச பரம்பரையுடன் தொடர்பு அற்றவன் என்பது தெளிவு. (கன்னங்கரா, *யாப்னா அன்ட்த சிங்கள ஹெரிட்டேஜ்*, (1988), கொழும்பு. ப.3). எனவே *பௌத்த மதம் நாகர்களால் உருவாக்கப்பட்டு நாகர்களால் ஆதரிக்கப்பட்டு வேரூன்றிய மதமாகும்.*" [39]

இக்கருத்தை வலியுறுத்தும் சான்றுகளை இன்றும் வட இலங்கையிலே நயினாதீவு, யாழ்ப்பாணம், கந்தரோடைப் பிரதேசங் களிலே காணலாம். *மணிமேகலையில்* வரும் பீடம் நயினாதீவே என்பதுவும் அங்கு நாக அரசே நிலவியதென்பதும் மிகமிக அண்மை யிலே கலாநிதி பரமு.புஷ்பரத்தினம் எனும் வரலாற்றறிஞரினால் நிறுவப்பட்டுள்ளது என்பதும் மனங்கொள்ளத்தக்கது. கலாநிதி பரமு புஷ்பரத்தினம் பின்வருமாறு நிறுவுகிறார்.

"நாகதீபத்தின் வரலாற்றைப் பின்நோக்கிப் பார்க்கும்போது அங்கு ஒரு அரசு தோன்றியதற் கான சூழ்நிலையே காணப்படுகிறது." [40]

என்று கூறுவார்.

கண்ணகி வழிபாடும் இராஜராஜேஸ்வரி வழிபாடும் ஸ்ரீ நாகபூஷணி வழிபாடும் இராச பாரம்பரியத்தின் - அரசவம்ச பாரம் பரியத்தின் - வழியாகவே இன்றும் இயல்வது குறித்து நாம் அதிக கவனம் செலுத்தியாராய்வது மிகப்பெரும் பயனை - நன்மையை அளிக்கவல்லதாகும். வேந்தர் தம் தெய்வங்களே இவையெனல் மிக்க பொருத்தமுடைத்தாகும். ***சோழப்பெருமன்னர் காலத்து இராஜராஜேஸ்வரி அம்மனின்*** திருவுருவங்கள் **பற்றியும் சிற்பக்கலை வரலாறு கூறும்.** மிகவும் நேர்த்தியான இராஜராஜேஸ்வரியின் படிமங்கள் இன்றும் பல ஆலயங்களிலே உண்டு. கொழும்பில் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவ சுப்பிரமணியசுவாமி கோவிலுள்ள ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மனின் கலையழகு உள்ளத்தைக் கொள்ளை கொள்ளத்தக்க தாயுள்ளமையைக் காணலாம். **புங்குடுதீவுக் கண்ணகையம்மன் எனப்படும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரியின் கலைமாண்பு சிறப்புடன் காணத் தக்கது.** ஈர்ப்பும், **ஜீவகளையும் வனப்புங் கொண்ட** விக்கிரகங்களிவை. இவ்விடத்தில் மணிமேகலைக் காப்பியத்துடன் தொடர்புடைய வரலாற்றைக் கொண்டமையும் **64 சக்திபீடங்களுளொன்றென மிளிரும் நயினை ஸ்ரீ நாக□ஷணி அம்பாளின் வழிபாடும் மகிமையும் நீள நினைத் தற்குரியது.**

*மட்டக்களப்புச் சைவக்கோவில்கள்* (1983), என்னும் நூலை எழுதிய பண்டிதர் வீ.சீ கந்தையா தமது நூலின் ஆறாவது இயலில், **அம்மன் கோவில்கள்** எனப் பகுத்து அதிலே, காரைதீவுக் கண்ணகி யம்மன் கோவில் குறித்தும், களுவாஞ்சிக் குடி கண்ணகியம்மன் கோவில் பற்றியும் எழுதியுள்ளவை இப்பொழுது யாழ்ப்பாணத்திலும், புங்குடுதீவிலும், யாழ் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும், தீவுப் பகுதிகளிலும் வாழுகின்ற தமிழ் பேசும் பெருங்குடி மக்களுக் காகவும் இங்கு தரப்படுகின்றது. மிகவும் விரிவான பண்பாட்டுப் பரம்பல் தமிழருக்கு மதரீதியாகவும், வழிபாடு ரீதியாகவும், அரச

பாரம்பரியத்தின் வழியாகவும் உள்ளன வென்பதனை மீள வலி யுறுத்தி அமைவது வரலாற்றுத் தேவையுமாகும். **பேணல்முறை இனியாயினும்** பேணப்பட்டுப் - பின்பற்றப்படுதல் விரும்பத்தக்கது. முக்கியமாக, சக்திவழிபாட்டு மரபுகள் மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், தீவகம், வன்னிப் பிரதேசங்களிலும் மத்தியமலையத்திலும் ஒருமைப்பாடும் ஒற்றுமையுங் கொண்டன வாகவே இன்றும் நிலைபேறு கொண்டுள்ளன என்ற கருத்துக்கு மாற்றுக்கருத்திருக்கமுடியாது. இப்பிரதேச இணைப்பென்பது தெய்விகத்துவமும் நிலைபேறும் உடையதாகும். வெறும் அரசியல் நோக்கு நிலையால் மட்டும் இணையவில்லை.

தமிழ்ப் பேராசிரியரும், விஞ்ஞான மேதையுமான ***யாழ்நூலின்*** ஆசிரியர் **முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள்** அவதரித்த மட்டக்களப்புக் காரைதீவில் உள்ள கண்ணகி அம்மன் வன்னிமை யின் மனைவிக்குக் கண்கள் கொடுத்த அம்மனாகவும், பட்டத்து யானை தரித்துப் பின் பூசையிலே வைத்த தீர்த்தம் தெளிக்கப்பட்ட பின்னரே அந்தப்பட்டத்துயானையில் வன்னிமை ஊர்சுற்றிய வரலாறும் இவ்வாலயப் புதுமைகள் என்று எடுத்துக் காட்டியுள்ளார் பண்டிதர் வீ.சீ. கந்தையா. இன்றைய நிலைபற்றிக் கூறும் பண்டிதர் வீ.சீ.கந்தையா,

> "இக்காலத்தில் அம்மன் அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியாகி இராஜராஜேஸ்வரியாகி எழுந்தருளித் திருவீதி உலா வருதலும் அடியவர்கள் பத்தியோடும் அம்பாளை வேண்டி நின்று உருகும் தன்மையும் கண் கொள்ளாக் காட்சியாக அமையும். இங்கு நாவலரின் கருத்தே இன்று பின்பற்றப்பட்டு வருவதனை இக்கூற்று எடுத்துணர்த்துகிறது. கருத்துநிலையில் புதிய சித்தாந்த தத்துவம் சுவாமி விபுலானந்தர் பிறந்த மண்ணில் வேரூன்றுவதும் கவனித்தற்குரியது. இப் பரிணாமம் பெருநலன் பயப்பதாகும். அதாவது வழி பாட்டுமரபின் திருந்திய வடிவத்தை ஏற்று அனுசரிக்கும் மட்டக்

களப்புத் தமிழக மக்களின் சக்தி வழிபாட்டு மேன்மை போற்றத்தகுந்ததாகும்."[43]

களுவாஞ்சிக்குடி கண்ணகியம்மன் கோவில் பற்றிய கட்டுரை யிலே மிகப்பிரதானமானது எனப் பண்டிதர் வீ.சீ.கந்தையா தரும் விடயம் அங்கு காணப்பட்ட கண்ணகி அம்மனின் அழகுமிகு சிலையாகும். பேராசிரியர் கைலாசபதியும், பண்டிதர் வீ.சீ. கந்தை யாதவும் இச் சிலைபற்றிச் சிலாகித்து எழுதியுள்ளனர். பண்டிதர் வீ.சீ.கந்தையா பின்வருமாறு கருதுகிறார்.

> "பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ளதும் மட்டக் களப்பில் இருந்து கொண்டு செல்லப்பட்டதுமான கண்ணகி சிலை. இவ்வுருவச்சிலை களுவாஞ்சிக் குடியில் இருந்து பிரிட்டிஷ்காரரால் கொண்டு போகப் பெற்றிருத்தல் வேண்டும் என்று எனது ஊகம் வலுவடையத் தக்கதாய் இருக்கிறது."[44]

இன்று (2005 ஆம் ஆண்டு முற்கூறில்) களுவாஞ்சிக்குடிக் கண்ணகி அம்மனின் ஈர்ப்பினாலேயே இலண்டன் பிரதமர் பிளேயரும் அண்மையில் சுனாமியைச் சாட்டாகக் கொண்டு மட்டக்களப்புப் பிரதேசத்து விஜயம் மேற்கொண்டு ஆலய வழிபாடுகளிலும் கலந்து கொண்டமையின் விசித்திரம் எதையுணர்த்துவதாயுள்ளது? மேலும் எவ்வெவற்றைத் தாம் (இலண்டனுக்குக் கொண்டு செல்ல முடியும் என்பதை நோட்டமிடுவதே குறிக்கோள்) கொண்டு செல்லலாம். எனும் சுரண்டற் புத்தி என்பதனை இரண்டாந்தரம் பயிலும் தமிழ்க் குழந்தையும் அறியும். இலண்டன் பிளேயர் வந்தது அரசியலுமல்ல; அனுதாபமுமல்ல. தன் மதம் இப்பொழுது எந்தளவு தூரம் தமிழ்ப் பிரதேசங்களில் குறிப்பாக மட்டக்களப்பில் வேரூன்றியுள்ளது என்பதனை அளந்தறிய வேண்டியும், தனது செம்மைமிகு சிலுவை யை யார் யாரெல்லாம் நெஞ்சிலே கட்டிவைத்துக் கும்பிட்டு மண்டி யிடுகிறார்கள் என்பதையறியும் இராஜதந்திரமுமே என்பதை

யுணராதவர்கள் நன்றியும் தெரிவித்துள்ளமை தான் உலக அதிசயம். இவற்றிலிருந்து கண்ணகி–சக்தி வழிபாட்டின் மாண்புகள் ஒளி பெறுகின்றனவல்லவா? தமிழர் பெருமைப்படத்தக்க சமயமாகவே இன்றும் இந்துமதம் மிளிருகின்றது. மதங்கள் வாழ்க. மதமாற்றம் நிஷ்டூரமே!

அன்பர்களே,

இன்றைய நடைமுறைகள் முற்றுமுழுதான சக்தியின் அருளாலே நிகழ்வன என்பதையும் இணைத்து நோக்கித் திருவருட் சிறப்பையும் தெய்வம் நின்று சாதிக்கும் பெருமைமிகு சமய நம்பிக்கையையும் இன்னும் வேறென்ன சான்றுகள் கொண்டு விளக்க வேண்டும்? போதுமிவை. தமிழர்பூமி, தாயகம் - பிரதேசம் தெய்விகம் வாய்ந்த சிவபூமி (சக்தி அத்துவிதம்) என்பது தெளிவு. செம்மைமிகு சிலுவைகள் பூமிக்குப் பாரம்; இயற்கையே வெகுண்டது. நயவஞ்சகத்துடன் இந்துமதத்தைச் துவம்சம் செய்யும் நரிக் குள்ளத்தன இராஜதந்திரம் பற்றியும் உரக்கச் சிந்திப்பது எதிர்காலத்தில் நலம் பயப்பதாகும். இன்னும் இந்நூல் அரச பாரம்பரிய – அரசர்கள் வழிபாட்டிலிடம் பெற்ற தெய்வங்கள் பற்றியதாகவே அமைய வேண்டும் என்பதும் நமது மேலான குறிக்கோளாகும். ஒருண்மை இது, நம்மை (இந்துக்களை) முட்டாள்களாக்கி நமது வளங்களையும், விக்கிரகங்களையும், உழைப்பையும் சுரண்டிச் சென்றமை தான் இன்றைய எமது இனத்தின் மீளமுடியாத நலிவுகள்ளனைத்திற்கும் மூலகாரணமென்று விசனிக்கத் தோன்றுகின்றதல்லவா? எம்மைத் தமது பிரித்தாளும் இராஜதந்திரத்தினாலே அடக்கியொடுக்கியவர்களையே இன்று இலண்டனிலுள்ள முருகனும், களுவாஞ்சிக்குடிக் கணணகியம்மனும் திருவருள் புரிந்து (அங்கு கோயில் கொண்டு) ஆண்டு வருகின்றனர் என்று அமைதி காணபதே நமது இந்துமத வழிபாட்டின் ***தாற்பரியம்.*** "அன்றொரு நாளெம்மை அடிமை கொண்டார்." அவரையும் சேர்த்து இன்று அடிமை கொண்டார். 'இலண்டன் முருகன்' என்ற சீர்காழியின் பாடல் வரிகளே என் மனக்கண் முன் நிழலாடுகின்றன.

# இயல் நான்கு

## அம்மன் படிமங்களும் பிரதிமாலட்சணங்களும்

சிலைகள், திருமேனிகள், படிமங்கள், சமயச் சான்றோர் வழிபாடு, பத்தினிவழிபாடு, நடுகற்கள் குறித்து டாக்டர் ஏ.ஏகாம்பர நாதன் குறிப்பிடும் கருத்துக்களை நோக்கலாம்.

> "சோழர் காலத்திலேயே அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகியோருடைய செப்புத்திருமேனிகள் செய்யப் பட்டிருக்கின்றன. திருச்சுற்றினுள் வரிசையாக அறுபத்து மூன்று நாயன்மார்கள் சிற்பம் நிறுவும் வழக்கம் ஏற்பட்டது. திருவிழாக்களில் உலோகத் திருமேனிகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லும் வழக்கம் இன்றளவும் நிலவி வருகிறது. சமயச் சான்றோருக்கும் வழிபாடு நடத்தியுள்ளமை அறியற்பாலதாகும். காவியத் தலைவியாகிய கண்ணகிக்கு இமயப்பெருவரையிலிருந்து கொணர்ந்த கல்லில் தெய்வப்படிமம் சமைத்து நிறுவியதோடு கோயில்கட்டி விழாவெடுத்தான் சேர மன்னன் செங்குட்டுவன். *சிலப்பதிகார* காலத்தில் தோன்றிய கண்ணகி வழிபாடு காலப்போக்கில் பல்வேறு மாறுதல்களுக்குள்ளாகிச் சிறு தெய்வ வணக்கமாக மாறியுள்ளது. கணவனிறந்த பின் தம்முயிரைத் தீயுட் புகுந்து மாய்த்துக் கொள் ளுதல் பண்டைக்கால வழக்கமாகும். இவ்வாறு மாய்ந்த மகளிரின் நினைவாக எடுக்கப்பட்ட சிற்பங்கள் 'மாசதிக்கற்கள்" எனப்படும். நடுகற் கண் வழிபாடு சங்க காலத்திலுண்டு. சோழர், விஜய நகர அரசர்கள் காலத்திலும் மாண்ட வீரர்களின் நினைவாக நடு கற்கள் எழுப்பப்பட்ட மைக்குப் பல சான்றுகள் உள்ளன. தமிழ் மக்கள்

தன்னலங் கருதாதமையைச் சான்றோருக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்பி வழிபாடு நடத்தி யமை பெருமைக்குரிய ஒன்றாகும். சிற்பங்களிலிருந்து மக்களின் வீர உணர்ச்சியினை நன்கு அறியலாம்."[44]

[குறிப்பு: இன்றும் தமிழர் சமுதாயம் மாவீரர் வழிபாட்டைக் கொண்டு ள்ளமை பெருமையுடன் கருதத்தக்கது.]

## பத்தினியின் படிமங்கள்

பேராசிரியர், கலாநிதி சி.பத்மநாதன் பின்வருமாறு எழுதுகிறார்.

"ஜேதவனராமத்து அருங்காட்சியகத்திலே காணப் படும் இரண்டு படிமங்கள் இலங்கையின் சமய வரலாறு தொடர்பான சில விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கு உதவக்கூடியனவாகும். அந்நிறுவத்திலுள்ள விற்பன்னர்கள் இவற்றை அர்த்தநாரி வடிவங்களென்று அடையாளங் கண்டுள்ளனர். அப்படிமங்கள் இரண்டும் பெண் களின் பிரதிமைகள் என்பது தொட்டத் தெளி வாகவே தெரிகின்றது. அவற்றுக்கு ஆதாரமாகப் பீடம் எதுவுமில்லை. உருவத்தின் கால்களின் கீழ் ஒரு சிறிய உலோகத்தகடு அமைந்துள்ளது. அவை இரண்டும் ஓரளவிலான உயரங் கொண்டவை. அவற்றின் கனமும் சமமானது. ஏனைய அம்சங்களில் அவற்றின் பிரதிமால ஷணங்கள் வேறுபடுகின்றன. அவையிரண்டும் வெவ்வேறு காலங்களில் உருவாக்கபட்டவை என்பதிலும் எதுவித ஐயமும் இல்லை.

இப்படிமங்கள் ஸ்தானக நிலையிலுள்ளன. அவற்றின் அங்கலஷணங்கள் மனிதருக்கு உரியனவற்றைப் போன்றனவாகும். உலோகத் தகட்டின் மேல் நிற்கும் வண்ணமாய் உள்ளது. வலது கரம் சற்று உயர்ந்த கோலத்தில் அபய ஹஸ்தம் போல அமைந்துள்ளது. படிமத்தின் பிரதிமாலஷணங்களிலே தனங்கள் இரண்டினதும் கோலமே சிறப்பம்சமானது. இடப்பாகத்திலுள்ள தனம் முகையற்றதாகி வெட்டிய கோலத்தில் உள்ளது. இக்கோலம் பத்தினித் தெய்வத்திற்கே உரியதால் இப்படிமத்தைப் பத்தினியின் படிமம் என்று அடையாளங் காண முடிகின்றது. பத்தினி யாகிய கண்ணகியினைப் பற்றிச் *சிலப்பதிகாரம்* கூறுவனவற்றை இங்கு குறிப்பிடுவது பொருத்த மானதாகும். அந்நூல் மேல்வருமாறு செப்பு கின்றது.

பட்டாங்கியானுமோர் பத்தினியேயாமாகில்
ஒட்டேனரசோ டொழிப்பேன் மதுரையுமென்
பட்டிமையுங் காண்குறலாய் நீ யென்னாவிட்ட
கல நான்மாடக் கூடல் மகளிரு மைந்தரும்
வானக் கடவுளரு மாதவருங் கேட்டி மின்யானமர்
காதலன் றன்னைத் தவறி ழைத்த கோநகர்
சீறினேன் குற்றமிலேன்யாளென்றிடமுலை
கையாற் றிருகி மதுரை வலமுறை மும்முறை
வாரா வலம்வந்து மட்டார் மறுகின் மேனி
முலையை வட்டித்து விட்டாளெறிந்தாள் விலங்
கிழையாள்" (சிலப்திகாரமூலமும் அரும்பதவு ரையும் அடியார்க்கு நல்லாருரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். நிழற்பதிவு, 1985, வஞ்சினமாலைவரிகள் 36-46, பக். 486 – 487)

> கணவனாகிய கோவலனுக்கு நேர்ந்த அநீதியால் ஆவேச முற்ற பத்தினியான கண்ணகி பாண்டியனின் அரசோடு மதுரை மாநகரையும் ஒழிப்பேனெனச் சபதமிட்டாள். நான்மாடக் கூடல் மாந்தரையும் வானவரையும் விழித்துக் கதறினாள். நகரினை மும்முறை வலம் வந்து தன் மார்பகத்து இடமுலையினைத் திருகிப் பெயர்த்து வீதியிற் சபித்து எறிந்தாள். பத்தினி கூறிய வெஞ்சினம் பலிக்குமென்பதை உணர்த்த அக்கினி தேவன் வந்தான். அந்தணன் உருவிற் செந்தமிழ் கொணர்ந்து எரியூட்டினான். காவற் தெய்வங்கள் தென்னவன் மாநகரை விட்டு நீங்கலாயின. அரசியல் பிழைத்தோருக்கு அறங் கூற்றுவனாகியது. **கோல்கோடின் கோனொடு சுற்றமும் நாடும் கேடுறும் என்பது மனுவின் மொழியுமாகும்.** உரைசால் பத்தினி என்னும் பெற்றியினைக் கண்ணகி பெற்றாள். கோவலன், கண்ணகி ஆகிய இருவரையும் வானவர் விண்ணுலகிற்கு அழைத்துச் சென்றனர் என்பது கதை. சோழரும், தென்னவரும், கொங்கரும், சேரலரும், சிங்களரும், பத்தினிக்குக் கோயில மைத்து வழிபாடாற்றினர் என்பது உரைபெறு கட்டுரைக் குறிப்பாகும்.

ஒருமுலையிழந்த வடிவில் பத்தினியையன்றி வேறெத் தெய்வத்தையும் உருவகப்படுத்தும் வழக்கமில்லை. அர்த்தநாரியின் கோலம் வேறுவிதமானது. அதில் வலப்பாகத்தில் ஆணுக்குரிய அங்கமாலஷணங்கள் உண்டு. இடப்பாகத்திற் பெண்ணுக்குரிய அங்கமாலஷணங்கள் அமைந்திருக்கும். ஜேதவனராமத்து அருங் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள படிமத்தில் இந்த வித்தியாசமான உறுப்புக்கள் கிடைக்கவில்லை. பத்தினியாகிய கண்ணகி தனது இடமுலையினைத் திருகி எறிந்தாள் என்று *சிலப்பதிகாரம்* கூறும். ஆயினும் அநுராதபுரத்துத்துப் படிமமானது வலது முலையினை

இழந்த பெண்ணின் வடிவமாகவே உள்ளது. இதன் காரணமாக அது பத்தினியின் வடிவமன்று எனக் கொள்ளுதல் தவறாகும். பத்தினியின் பிரதிமாலஷணங்கள் சிற்ப சாத்திரங்களிலே வர்ணிக்கப் படவில்லை. சிலப்பதிகாரத்தின் ஏடுகளைப் பார்த்துப் படிக்கும் வாய்ப்பு சிற்பிகள் எல்லோருக்கும் கிடைத்திருக்கும் என்று கொள் வதற்கில்லை. விளையாட்டாக வேனும் அக்காவியத்தைக் கேட்டி ராதார்கள் பத்தினியின் உருவத்தைப் படைக்குமிடத்துச் சிலப்பதிகார வர்ணனைக்கு அமையப் பத்தினியின் படிமத்தை வார்த்து பெண் என்று கருத முடியாது. 'ஒருமுலை யிழந்தாளோர் பத்தினி என்பதுவே கண்ணகி பற்றி அவர்கள் மனதிற் பதிந்துள்ள கருத்து எனக் கருத முடிகின்றது. பத்தினியின் படிவமும் *சிலப்பதிகாரம்* கூறுவதற்கு ஒவ்வாத வண்ணம் கலைஞரால் வடிக்கப் பெற்றுள்ளது. அது வியப்பிற்குரியதன்று.

வரலாற்றுப் பேரறிஞர், பேராசிரியர் கலாநிதி சி. பத்மநாதன் ஆய்வு செய்து விவரிக்கும் பாங்கு மேலும் காணத்தக்கது.

> "பத்தினியின் படிமத்திலே கண்கள் ஓரளவிற்கு மூடிய நிலையிலே தெரிகின்றன. முகபாவம் உக்கிரத் தோற்றமானது காதணிகள் அகன்ற, கனதியான தோடுகள், பதக்கம் தொங்கும் தங்க மாலை, இரத்தினம் பதித்த அம்மல், தோள் வளையம், உதரபந்தனம், சிலம்பு முதலானவை பிற ஆபரணங்களாகும். வஸ்திரம் இடுப்பிலிருந்து கணைக் கால் வரை சுற்றிக் கட்டிய மடிப்புகள் பொருந்திய சேலையாகும். அலங்காரத் தோற்றங் கொண்ட வஸ்திரமானது சமகாலத்து உமாதேவி யாரின் படிமங்களில் உள்ளவற்றைப் போன்றது. தலையில் ஒரு வகையான கீரீடமுண்டு. பிரதி மாலஷணங்களின் அடிப்படையில் இப்படிமம் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு உரியதென்று கொள்ளலாம்.

இரண்டாவது படிமம் அங்கலஷணங்களைப் பொறுத்த வரையிலே முன்னதைக் காட்டிலும் பெரிதும் வேறுபட்டுக் காணப்படுகிறது. அகன்று பெருத்த இடை, கனத்த, உதரம், கீழே தொங்கும் கரங்கள், இயல்பான மானிடத் தோற்றம் என்பன அதன் பிரதான அம்சங்களாகும். ஆபரணங்கள் குறைவாகவே உள்ளன. காதணிகள் இரண்டும் வெவ்வேறான கோலங் கொண்டவை. இடது காதிலுள்ள காதணி சிறிதாகத் தோன்றுகின்றது. வலதுபுறத்துக் காதணி நீண்டு தொங்கும் நிலையிற் சித்திரித்துக் காட்டப்பட்டுள்ளது. கிரீடம் சடாமகுடம் போன்றது.

வஸ்திரம் இடுப்பிலிருந்து கீழ்நோக்கிக் கணைக் கால் வரை சுற்றிக் கட்டப்பட்டுள்ளது. அது பௌத்த சமயச் சார்புடைய படிமங்களில் உள்ள வற்றைப் போன்றது. அதன் பிரதிமாலÑifisg; பொறுத்த வரையில் ஒரு அம்சம் மட்டுமே பிரதி மாலÑணங்களுள் அசாதாரணமானது. மானிடத் தோற்றத்திற்குப் புறம்பானது.

தனங்கள் இரண்டும் அமைக்கப்பட்டுள்ள கோலத்தின் அடிப்படையில் மட்டுமே இப்படிமம் பத்தினித் தெய்வத்தின் பிரதிமையானது எனக் கொள்ளமுடிகின்றது. வலப்புறத்தில் அமைந்துள்ள தனம்திரட்சி பொருந்தியதாக அமைக்கப்பட்டு ள்ளது. இடப்புறத்திலே அது மிகச் சிறிதாகவே உள்ளது. அதுவும் அதிலே முகையின் அடை யாளம் எதுவும் இல்லை. எனவே இப் படிமத் தையும் ஒருமுலையிழந்தாளோர் பத்தினித் தெய்வ மதன் பிரதிமையென்று கொள்ள முடிகின்றது.

> முன்னைய படிமத்திலே தனமொன்று வெட்டிய கோலத்தில் அமைக்கப்பட்டிருக்கையில் இப் படிமத்திலே தனமொன்று முகையற்ற கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அவையிரண்டும் வெவ்வேறு காலத்துக்குரியன என்பதனாலும் அவற்றை உருவாக்கியோர் இருவேறு கலைஞர் என்பதாலும் இவ்விருபடிமங்களின் அங்கஷணங்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இரண்டாவது படிமத்தின் காலம் எட்டாவது அல்லது ஒன்பதாவது நூற்றாண்டாகலாம்."[46]

இலங்கையிலுள்ள பத்தினி வழிபாட்டின் வரலாற்றைப் பொறுத்தவரையில் ஜேதவனராமத்தில் படிமங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. அவ்வழிபாடு தொடர்பான கால நிர்ணயம், அதற்கும் பௌத்த சமயத்திற்கும் இடையிலான தொடர்பு என்பன பற்றிய விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கு இவை பயன்படுகின்றன. மேலும் *சிலப்பதிகாரம், மணிமேகலை* ஆகிய நூல்களின் கால எல்லைகள் பற்றிய ஆராய்ச்சிகளுக்கும் இப்படிமங்கள் உதவக்கூடியனவாயுள்ளன.

இப்படிமங்கள் ஜேவனராமத்துக்கு அண்மையிற் காணப்பட்டதால் அநுராதபுரத்திலே பத்தினி வழிபாடு நிலவியதென்று கருதலாம். புதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதிக்குப்பின் அநுராதபுரத்திலே எதுவிதமான கட்டடங்களோ கோயில்களோ புதிதாக அமைக்கப்படவில்லை. பன்னிரண்டாம் நூற்றாண்டின் பின் சமயநிலையங்கள் அமைக்கப்பெற்றமை குறித்து *மகாவம்சம்* முதலான நூல்களில் எதுவிதமான குறிப்புகளும் இடம்பெறவில்லை. மாகனது ஆட்சிக் காலம் முதலாக அநுராதபுரத்து அட்டமஸ்தானங்கள் போன்ற அமைப்புகள் யாவும் கைவிடப்பட்ட நிலையில் இருந்தன. காலப் போக்கிலே காடுகள் படர்ந்து அவற்றை மூடி மறைத்தன. அவை இயல்பாகவே பாழடைந்து இடிந்து வீழ்ந்து மண்மேடுகளாகின. எனவே பத்தினியின் படிமங்கள் அநுராதபுரத்திலே சனசஞ்சாரமுள்ள ஒரு காலப் பகுதியில் குறிப்பாகப் 13 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட

காலத்திலே, வழிபாட்டு நிலைமொன்றில் வைக்கப் பட்டிருந்தன என்று கொள்ளலாம்.

பத்தினியின் படிமங்கள் சில ஆனந்தகுமாரசுவாமியால் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுளொன்று திருகோணமலை மாவட்டத்திலுள்ள திரியாய் என்றும் ஊரிற் கண்டெடுக்கப்பெற்றது. அது 144 சென்ரிமீற்றர் உயரங் கொண்ட மிகப்பெரிய செப்புப்படிமமாகும். உயரமான அதன் மகுடத்தில் அமைந்திருந்த மணி காணமற் போய் விட்டது. வலக்கரம் வரதஹஸ்தமாயுள்ளது. இடது கரம் விதர்க்க முத்திரையில் அமைந்துள்ளது. (Memoirs of the colombo musume edited by Joseph pearson series A no 1 bronzes from ceylon, chiefly in the colombo museum by Ananda coomaraswamy, oxford, 1914, reprinted 1978 at the department of government printing srilanka. P.12) அம்மனின் தோற்றம் ஸ்தானக நிலையில் உள்ளது. வஸ்திரத்தின் மடிப்புகள் மத்திய காலத்து இலங்கைச் சிற்பங்களில் உள்ளவற்றை நிகர்த்தனவாகும். ஜேதவன ராமத்து வளாகத்திலிருந்து கிடைத்த பத்தினியின் படிமங்களில் ஒன்று இப்படிமத்தைப் பெரிதும் ஒத்துள்ளது. கரங்களின் கோலத்தில் மட்டுமே குறிப்பிடத் தகுந்த வேறுபாடுகள் உண்டு. சிறியபடிமத்திலே கடவுட் படிமங்களுக்குரிய முத்திரைகள் காணப்படவில்லை. அதிலே கரங்கள் தொங்கும் நிலையில் உள்ளன. தனங்களின் கோலத்தைக் கொண்டே இதனை பத்தினியின் படிமமென்று அடையாளங் காண முடிகிறது. இப் படிமம் பற்றிய எமது கருத்து திரியாய்ப்படிமம் பத்தினியின் உருவம் என்ற ஆனந்தகுமாரசுவாமியின் கருத்தினை உறுதிப்படுத்துவதாய் அமைகின்றது. பத்தினியைப் பற்றி ஆனந்த குமாரசுவாமி மேல்வருமாறு கூறுவார்.

(She was subsequently cononised, and is regarded as a manifestation of sakti her special attributes are jewelled anklets and the mango. She is goddess of chastity and controller of deseases such as small pox measles, and catle murerain.)

ஜேதவனராமத்துப் படிமங்களில் ஒன்றின் வலக்கரத்திலே சிலம்பின் தோற்றங் காணப்படுகின்றது. அதனைச் சிலர் மலர் மொட்டெனக் கொள்வர். ஆயினும் வட்டமானவோர் ஆபரணத்தின் கோலமாக அது தெரிகின்றது. அதனோரிடத்தில் வளையம் போன்ற தொரு வட்டந் தெரிகின்றது. அது மலர்மொட்டுக்கன்றி ஆபரணம் ஒன்றிற்குரிய அமைப்பிலேயே காணப்படுகின்றது.

> "பத்தினியைச் சக்தியின் வடிவமாகக் கொண்டனர் என்று ஆனந்த குமாரசுவாமி சொல்வது பொருத்த மானதன்று. பத்தினியை சக்திகளுள் ஒன்றாகக் கொள்ளும் மரபு பௌத்த சமயத்திலோ இந்து சமயத்திலே இருப்பதற்கு எதுவித அதாரமுங் கிடையாது. அதுமட்டுமன்றிச் சைவசமயத்திலே ஓரம்சமாகப் பத்தினி வழிபாட்டை ஒப்புக் கொள் வதில்லை. சைவாலயங்களிலும் பத்தினிக்குத் தனிக் கோட்டம் அமைக்கும் வழக்கமில்லை. தம்பலகாமம் ஆதிகோணேசர் கோயிலிற் காணப் படும் வழக்கம் பிரத்தியேகமானது. அது முற் காலங்களிலே திருகோணமலைப் பிராந்தியத்திலே கோணேஸ்வரம் பெற்றிருந்த முதன்மையான நிலையோடு தொடர்புடையது. அப்பிராந்தியத் திலுள்ள எல்லாச் சமய வழிபாட்டு முறை களுக்கும் அங்கீகாரமும் அரசமரியாதைகளும் வழங்குதல் மரபொன்றினைப் பிரதிபலிப்பது. பெரஹெரா நாட்களில் எல்லாக் கோயில்களும் வைபவ ரீதியாகக் கலந்து கொள்வதுங் குறிப் பிடத்தக்கது. ***சிலப்பதிகாரம், மணிமேகலை*** முதலிய வற்றிலே சொல்லப்படுகின்ற இந்திர விழா வானது நகரிலுள்ள எல்லாச் சமயத்தவரும் எல்லாக் கோயில்களுங் கலந்து கொள்ளுகின்ற பொது விழாவாகவே வர்ணிக்கப்பட்டுள்ளது."[47]

பத்தினிவழிபாடு இலங்கையில் எப்போது அறிமுகமாகிறது, அது எவ்வாறு அறிமுகமாகிப் பரவியது? என்பனவற்றைத் தெளிவு

படுத்துவது அவசியமாகின்றது. *சிலப்பதிகாரக்* குறிப்பை ஆதார மாகக் கொண்டு அது கயவாகு மன்னனின் காலத்தில் இலங்கையில் அறிமுகமாகியது என்று அண்மைக்காலம்வரை கருதப்பட்டுவந்தது. இக்கருத்தினையே 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற ராஜா வாலிய என்ற சிங்கள வரலாற்றுநூல் பிரதிபலித்தது. (According to the Sinhalese Rajavaliya and current tradition Gaya Bahu (2nd century AD.) in the course of his sucessful invasion of southern India, brought away the sacred from madura and established the worship of the goddess in ceylon, where she has remained to this day, our central figure of ea elaborate and varied cult, which include the national gone of ankeliya and rites of fire – walking" memories of the colombo museum series A, No.1 bronzes from ceylon, 1978, P.12)

ஆயினும் 14ஆம் நூற்றாண்டுவரை **பத்தினி வழிபாடு** பற்றிய சமகாலத்துச் சாசனக் குறிப்புகளோ, இலக்கியக் குறிப்புகளோ காணப்படவில்லை என்பதால் கயவாகு மன்னனோடு பத்தினி வழிபாட்டைத் தொடர்புபடுத்தும் ஐதிகங்கள் எல்லாம் **ஆதார மற்றவை** என்பார் சமூகவியல் விற்பன்னரான கணநாத் ஒபெயசேகர. இவ் விடயந் தொடர்பாகத் தொல்பொருட் சின்னங்களையுங் கவனித்தல் அவசியமாகின்றது. முன்னே கவனித்தவற்றிலிருந்து **கி.பி 800-1200 ஆகிய காலப்பகுதியில் இலங்கையின் சில பகுதியில் பத்தினியைத் தெய்வமாகப் போற்றும் வழக்கம் நிலவியதாகத் தெரிகின்றது.**

பிற்காலங்களிற் பத்தினி வழிபாடு இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் பரவியிருந்தது. தமிழரும் சிங்களவரும் பத்தினியைத் தெய்வமாகப் போற்றி வழிபடலாயினர். பத்தினிக்குக் கோயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. பதினான்காம். நூற்றாண்டு முதலாகப் பௌத்த மரபிலே பத்தினிக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டிருந்தது. (ஆயினும் 15 ஆம் நூற்றாண்டு வரை "இலங்கையின் நான்கு காவற் தெய்வங்கள்" என்ற குழுவிற் பத்தினி சேர்த்துக் கொள்ளப்பட வில்லை. 14ஆம் நூற்றாண்டிலே அதன் மூன்றாவது காற்பகுதி யிலே நிசங்க அழகக்கோனார் ஜயவர்த்தனக் கோட்டையினை நிர்மாணித்த பொழுது சமன், உபுல்வன், விபீஷண(ன்)

கந்தகுமார(ன்) ஆகிய காவற்தெய்வங்களான நால்வருக்கும் அங்கு கோயில்கள் அமைக்கப்பட்டதாக நிகாயசங்கிரஹ குறிப்பிடுகின்றது. பத்தினி பற்றி இவ்விடயந் தொடர்பான ஒன்றுங் கூறப்படவில்லை. (The Nikaya Sangraha being history of buddhism in India and Ceylon translated into english by C.M Fernando Revised and edited by Mudaliyar W.F Gunawardena (31 Pages), Colombo ,H.C Cottee, government Printer, 1908, P.26.).

காலப்போக்கிலே இலங்கையின் காவல் தெய்வங்கள் நான்கினுள் ஒன்றாகப் பத்தினியைப் போற்றிப் பரவினார்கள். இவ் வளர்ச்சிகள் எவ்வாறு ஏற்பட்டன என்பது பற்றி எவரும் தெளிவாகச் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

*சிலப்பதிகாரம்* எழுதப்பெற்ற பொழுது பத்தினிவழிபாடு வழமை யாகிவிட்டது என்பது அந்நூல் வாயிலாகத் தெரிகின்றது. பத்தினி யைத் தெய்வமென்று குறிப்பிடும் இளங்கோ பத்தினிக்குப் படிமம் அமைத்தமை பற்றியும் அதற்குக் கோட்டஞ் சமைத்துப் பெருவிழா எடுத்தமை பற்றியும் பாடியுள்ளனர். எனவே பத்தினி வழிபாடு இளங்கோவடிகள் காலத்திற்கு மிக முற்பட்ட காலத்தில் உருப்பெற்ற ஒன்றாகலாம். பத்தினி வழிபாடு வைதிக சமயமரபுடன் தொடர்புடைய தன்று. அது தமிழகத்தில் உற்பத்திகளாகிய ஒரு வழிபாட்டு முறை போலவே தெரிகின்றது. அதற்கு அடிப்படையான சிந்தனைகள் சில வைதிகப் பண்பாட்டு அம்சங்களும் சமண,பௌத்த சமய நெறிகளும் தமிழகச் சிந்தனை மரபிலே கலபுற்றதால் ஏற்பட்டதன் காரணமாக எழுந்தவை என்பதும் மறுக்கமுடியாத ஒன்றாகும். ஆகவே அவ்வழிபாடானது சமஸ்கிருத மொழியிலுள்ள நூல்களின் செல்வாக்கு தமிழகத்திற் பரவிய ஒரு காலப்பகுதியில் உருவாகி யிருத்தல் வேண்டும். அத்தகைய செல்வாக்குத் தொண்டை நாட்டிலே பல்லவரின் ஆட்சி நான்காம் நூற்றாண்டளவில் ஏற்பட்ட தன் பின்னரே வலுப்பெற்றது. கற்புடை மகளிரின் சிறப்பினைத் *திருக்குறளும்* வலியுறுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

பத்தினி வழிபாடு தோன்றியதும் *திருக்குறள்* எழுதப் பெற்றதும் ஒரே காலப் பகுதியாகலாம் என்பார் வரலாற்றுப் பேராசிரியர், கலாநிதி சி.பத்மநாதன்.

பத்தினி வழிபாட்டின் வளர்ச்சி பொருந்திய நிலையினைச் *சிலப்பதிகார*த்து உரைபெறு கட்டுரை உணர்த்துகின்றது. அது மேல்வருமாறு அமைந்துள்ளது.

1. அன்று தொட்டுப் பாண்டியனாடு மழை வறங்கூர்ந்து வறுமை யெய்தி வெப்பு நோயுங் குருவுந் தொடரக் கொற்கையிலிருந்து வெற்றிவேற் செழியன் நங்கைக்கும் பொற்கொல்லராயிரவரைக் கொன்று களவேள்வியால் விழாவொடு சாந்தி செய்ய நாடு மலிய மழை பெய்து நோயும் துன்(பமும் நீங்கியது.

2. அது கேட்டுக் கொங்கிளங் கோசர் தங்கண்ணாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய மழைத்தொழிலென்றும் மாறாதாயிற்று.

3. அது கேட்டுக் கடல்சூழிலங்கைக் கயவாகு என்பான், நங்கைக்கு நாட்பலி பீடிகை கோட்ட முந்துறுத் தாங்கு அரந்தை கெடுத்து வரந்தரு மிவறென ஆடித்திங் களவை யினாங்கோர் பாடி விழாக்கோற் பன்முறையெடுப்ப மழை வீற்றிருந்து வளம் பல பெருகிப் பிழையா விளையுண்டா யிற்று.

4. அது கேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோவிலமைத்து எத் திறத்தானும் வரந்தருமிவளோர் பத்தினிக் கடவுளாகுமென "நங்கைக்குப் பத்தினிக் கேட்டமுஞ் சமைத்து நித்தல் விழாவணி நிகழ்வித்தோனே."

(*மணிமேகலை,* உ.வே.சாமிநாததையர் பதிப்பு, சென்னை கபீர் அச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப் பெற்றது, 1965, வஞ்சிமாநகர் புக்க காதை, வரிகள், 1- 12, 62-67, ப- 292 – 4.)

பாண்டிநாடு, சோழநாடு, கொங்கு தேசம் ஈழநாடு ஆகிய வற்றிலே பத்தினி வழிபாடு நிலவியதென்பதை உரைபெறு கட்டுரை உணர்த்துகின்றது. அந் நாடுகளில் அரசரின் முயற்சியாற் பத்தினி வழிபாடு வழக்கில் வந்ததென்பது அதன் ஆசிரியரின் கருத்து மாகும். இக்குறிப்பினை உறுதி செய்வதற்கான சான்றுகள் கிடைக்க வில்லை. ஈழநாட்டிலே மட்டுமே பத்தினி வழிபாடு தொடர்ச்சி யாகப் பல நூற்றாண்டுகளாக நிலைபெற்று வந்துள்ளமை குறிப்பிடற் குரியதாகும். இலங்கையிலே பொதுமக்கள் மத்தியிற் பரவியமையின் பயனாகவே மேலோர் குழாத்தினரிடையே பத்தினி வழிபாடு அங்கீ காரம் பெற்றதென்று கருதுவதற்கான காரணங்கள் உண்டு.

சாந்தி செய்தல், பத்தினிக் கோட்டத்தில் விழாவெடுத்தல் முதலியன இவ்வழிபாட்டின் பிரதான அம்சங்களாக விளங்கின. பத்தினிக்குச் சாந்தி செய்து விழா எடுத்தலால் வெப்பு நோய் முதலான கொடிய நோய்களும் பசியும், பிணியும் நீங்கி மாரி வளம் சுரக்கும் என்ற கருத்தும் உரைபெறு கட்டுரையில் வலி யுறுத்தப்படுகின்றன. இன்றுவரை இவை பத்தினி வழிபாட்டின் பிரதான அம்சங்களாக உள்ளன. பத்தினி வழிபாட்டின் மிகவும் விருத்தி பெற்ற நிலையினையே உரைபெறு கட்டுரை பிரதிபலிக்கின்றதெனக் கொள்ளுதல் பொருத்தமாகும். ஆயினும் இப்பகுதியானது, சிலப்பதி காரத்தில் எப்போது சேர்த்துக் கொள்ளப்பட்டது? என்பது தெரிய வில்லை. உரைபெறு கட்டுரை இளங்கோடிகளினாலே புனையப் பெற்றதென்று கொள்ளுவதற்கான காரணம் எதுவும் இல்லை. உரைக்கு முன்னுரையாக எழுதப்பட்ட கட்டுரையினை உரைபெறு கட்டுரை என்று குறித்தனர் எனக் கருதலாம். அவ்வாறாகில் அதனை அடியார்க்கு நல்லார் எழுதியிருத்தல் வேண்டும். அவருக்குப் பிந்திய காலத்தில் ஏட்டினை எழுதியவர்கள் இக்கட்டுரையினை நூலிற் சேர்த்திருத்தலுங் கூடும். **இது எவ்வாறாயினும் இவ்விடயம் தொடர்பாக ஆராய்வது அவசியமாகின்றது.** வருங்காலத்தில் ஆராய்ச்சி களின் பயனாக இப்போது தெளிவற்றனவாயுள்ள அம்சங்களிற் சில தெளிவு பெறக்கூடும்.

ஒரு காலகட்டத்திற் பத்தனி வழிபாடு தமிழகத்திலே, பௌத்த சமயத்துடன் இணைந்துவிட்டது போலத் தெரிகிறது. ***மணிமேகலை*** எழுதப்பெற்ற காலத்தில் இந்தச் சங்கமம் ஏற்பட்டுவிட்டது. வஞ்சி மாநகரிலுள்ள பத்தினிக் கோட்டம் பற்றிச் சாத்தனார் பின்வருமாறு வர்ணிக்கின்றார்.

"அணியிழை யந்தர மாறாவெழுந்து தணியாக் காதற்றாய் கண்ணகியையும் கொடைகெழு தாதை கோவலன் தன்னையும் கடவுளெழுதிய படிமங்காணிய வேட்கை துரப்பக் கோட்டம் புகுந்து வணங்கி நின்று குணம் பல வேத்தி அற்புகக் கடனில்லாது நற்றவம் படராது கற்புக் கடன் பூண்டு நுங்கடன் முடித்தருளல் வேண் மென்றழுது முன்னிற்ப ஒரு பெரும் பத்தினிக் கடவுளாங் குரைப் போன எம்மிறைக்குற்ற விடுக்கண் பொறாது வெம்மையின் மதுரை வெவ்வழற்படுநாள் நறைகமழ் கூந்தனங்கை நீயும் முறைமையினிந்த மூதூரகத்தே அவர் சமயத்தறிபொருள் கேட்டு மெய்வனையின்மை நிலைக்கே விளங்கிய பின்னரலபடப் பெரியோன் பிடகநெறி கடவாய் இன்னதில் வியல்பெனத் தாயெடுத் துரைத்தலும்."

பைந்தொடியான மணிமேகலை ஆறாத்துயருடன் அருமை யான அன்புமிக்க தாயாகிய கண்ணகியையும் கொடையிற் சிறந்த வனாகிய தந்தை கோவலனையும் படிமக் கோலத்தினாற் பார்ப் பதற்கு அவர்க்கென அமைந்த கோயிலினுட் புகுந்தாள். அங்கு பத்தினியை வணங்கிப் பலவறாகப் போற்றிய வண்ணமாகி நின்று உடன்கட்டை யேறி எரியினிற் புகாதும் துறவறம் மேற்கொள்ளாதும் கற்புநெறி வழியே நின்று கடன் முடித்தவாற்றைச் சொல்லியருள வேண்டு மென்று வேண்டினாள். அதனைக் கேட்ட பத்தினித் தெய்வம் கணவனாகிய கோவலற்குற்ற துன்பம் ஆற்றாதவளாய் மதுரை மா நகரை எரிவாய்ப்படுத்திய விருத்தாந்தங்களை மணிமேகலை க்குச் சொல்லியது மேலும் தொன்மை சான்ற வஞ்சி மாநகரிலே சமயக் கணக்கரின் வாதங்களைக் கேட்டறிந்து போதிமாதவர் அருளிய திரிபிடகங்களிலே காணப்படும் தரும நெறியே சமயங்கள் எல்லாவற்றிலும் மேலானது என்றும் அதனால் அதன் வழிபடுவாய் என்றும், பத்தினித் தெய்வம் ***மணிமேகலை***க்கு அறிவுரைபகன்றது.

வஞ்சிமாநகரிலே பத்தினிக் கோட்டம் அமைந்திருந்தது என்பதும், பத்தினித் தெய்வம் உபாஸகரைத் தரும நெறியில் வழிப்படுத்தும் பான்மை கொண்டது என்பதும் அக்கோட்டம் பௌத்தர்களின் வழிபாட்டிற்குரிய தானம் என்றும் வஞ்சிமாநகர் புக்ககாதையிலுள்ள விருத்தாந்தங்களினால் உணரப்படும். பௌத்த சமயத்திலுள்ள தெய்வங்கள் உபாஸகரைப் பிடகநெறிக்கு ஆற்றுப் படுத்தும் பண்பினைக் கொண்டவை. மணிமேகலா தெய்வமும் பத்தினித் தெய்வமும் ***மணிமேகலை***யில் அவ்விதமான தெய்வங் களாகவே வர்ணிக்கப்பட்டுள்ளன. எனவே ***மணிமேகலை*** மூலமாகப் பத்தினித் தெய்வம் தமிழகத்திலே பௌத்தர்களிற் போற்றி வழிப்படப் பட்ட தெய்வம் என்பது தெளிவாகின்றது. இதனால் அநுராதபுரத் திலும் பிற தானங்களிலுமுள்ள பௌத்த பெரும் பள்ளிகள் காவிரிப்பூம்பட்டினம், காஞ்சிபுரம், வஞ்சிமாநகரம் போன்ற வற்றிலுள்ள சமய நிறுவனங்களோடு கொண்டிருந்த தொடர்புகளின் மூலமாகவே இலங்கையிற் பத்தினிவழிபாடு பரவியதென்று கருத வேண்டியுள்ளது. அத்தகைய தொடர்புகளின் காரணமாகவே அபயகிரி மகாகவியும், ஜேதவனராமய என்னுந் தலங்களிலிருந்து கிடைத்துள்ளன. இவை மகாயானச் செல்வாக்கு ஏற்பட்டுள்ள தலங்கள் என்றும், தென்னிந்தியத் தொடர்புகளைக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

பௌத்த சமயத் தொடர்பின் காரணமாகப் பத்தினி வழிபாடு இலங்கையிலே சிங்களவரிடையிலுந் தமிழரிடையிலும் பெருஞ் செல்வாக்கினைப் பெற்றதென்று கருதமுடிகின்றது. பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பு இலங்கையின் வடபகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் வாழ்ந்த தமிழரிற் கணிசமான தொகையினர் பௌத்தரா யிருந்தனர் என்பது அங்குள்ள சிலாசாசனங்களினாலும் பிற தொல் பொருட் சின்னங்களினாலும் அறியப்படும். அதற்குப் பிந்திய காலத்தில் சைவசமயத்தின் மேலோங்கிய செல்வாக்கின் காரணமாக அவர்கள் சைவராயினும் பத்தினி வழிபாடு பொதுமக்களின் வாழ்க்கையோடு உணர்ச்சிபூர்வமான தொடர்பினைக் கொண்டிருந் தமையால் அது நிலைபெறலாயிற்று. சைவசமயத்திற்கும் பத்தினி வழிபாட்டுக்கும் இடையிலே பொதுவழக்கில் முரண்பாடுகள் தென்பட

வில்லை. பிரதான சிவாலயங்களில் ஒன்றான தம்பலகாமம் அதி கோணநாதர் கோயிலிற் பத்தினிக்கு விழா எடுக்கும் வழக்கம் உண்டு. 17 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பெற்றது. அதற்கு முன் இத்தகைய மரபொன்று நிலவியமைக்கான சான்றில்லை.

**பேராசிரியர் கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை பின்வரும் கருத்துக்களைக் கூறுவர்.**

"சங்ககாலத் தமிழகத்திலே நிலவளித் தெய்வங் களை நானிலங்களுக்குக் குறிப்பிடுந் ***தொல் காப்பியம்*** அம்மைவழிபாடு எதனையும் குறிப்பிட வில்லை. மேற்கணக்கு நூல்களிலே கொற்றவை யைப் பற்றிச் சில கூற்றுக்கள் இடம் பெற்றுள்ளன. வெற்றித் தெய்வமான கொற்றவைக்கு ஐயை. காடுகிழாள் என்னும் பெயர்களும் இருந்தன வென்றும் முருகன் கொற்றவையின் மகனாகக் கருதப்பட்டானெனவும் ***திருமுருகாற்றுப்படை***, ***பரி பாடல்*** முதலிய இலக்கியங்களிலிருந்து தெரிய வருகின்றன. ***தொல்காப்பியத்திலே*** மலை நிலத்துத் தெய்வங் கூறப்பட்டமையாலும், வெற்றி பெற்று வாகை சூடும் வாகைத் திணையைப் பாலை நிலத்துக்குரிய புறத்திணையாகிய வாகைத் திணை எனப்படுவதாலும் கொற்றவை யைப் பாலை நிலத் தெய்வமென அறிஞர் சிலர் கொள்வர்.

**இந்த அம்மை வழிபாடுகளோடு தமிழ்நாட்டுக் கண்ணகி வழிபாடும் கலக்கின்றது.** போரிலே இறந்துபட்ட வீரர்களின் ஞாபகார்த்தமாக நடு கற்கள் எடுத்துவழிபடும் முறை திராவிடர் களுக்குச் சிறப்பாக உரிய பெருங்கற் பண் பாட்டுக் காலத்திலே தொடங்கி, தமிழ் நாட்டிலே வரலாற்றுக் காலத்திலும் தொடர்ந்தது. உடன்

கட்டை ஏறும்கற்புடை மாதர்களுக்கு சதிக்கல் எடுத்து வழிபடும் முறை தமிழ் நாட்டுக்கு அயலிலுள்ள கருநாடக திராவிடச் சகோதரர்களிடையே வழக்கிலிருந்து வந்திருக்கிறது.

கண்ணகி வழிபாட்டின் தோற்றத்திலே நடுகல் வழிபாடு, சதிக்கல் வழிபாடு என்னும் அம்சங் களும் கலந்து காணப்படுகின்றன. கண்ணகி வழிபாடு சேரநாடாகிய கேரளத்திலும், இலங்கை யிலும் இன்றைய தமிழ்நாட்டிலும் இந்தியாவின் ஏனைய சில பகுதிகளிலும் பரவியதாகச் *சிலப்பதிகாரத்*திலிருந்து தெரியவருகிறது.

இலங்கையில் மட்டுமே இப்போது கண்ணகி வழிபாடு தனித்து வத்துடன் காணப்படுகிறது. வடக்கிலும், கிழக்கிலும் கண்ணகையம்மன் என்ற பெயரிலே கண்ணகி வழிபடப்படுகிறாள். சிங்கள பௌத்த மக்களிடையே – சிறப்பாகக் கண்டியிலும் தென் மாகாணப் பகுதியிலும் கண்ணகி பத்தினித் தெய்வமாக வழிபடப்படுவதைக் காணலாம். இந்தியா விலே கண்ணகி வழிபாடு பிற தாய்த் தெய்வ வழிபாடுகளிலே மறைந்து விட்டது.

கேரளத்தின் கரையோரத்திலும் உட்பகுதிகளிலும் இன்று சிறப்புடன் விளங்கும் பகவதி வழிபாட்டிலே கண்ணகி வழிபாடு மறைந்துவிட்டது. சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு முதன் முதலிலே எடுத்த கோயில் கொடுங்கலூர்ப் பகவதி கோவிலாகி இன்று விளங்குவதாக ஆராய்ச்சியாளர் கூறுவர். இன்றைய தமிழ் நாடெங்கும் மழைத் தெய்வமான மாரியம்மன் கோயில்கள் பல பெற்றுத் திகழ்கின்றார்.

கண்ணகி வழிபாட்டிலே கண்ணகிக்குக் குளிர்ச்சி செய்து முக்கியமான சடங்காக நடைபெற்று வந்தமையாலும் வெப்பு நோய்களை விலக்கக் கூடியவள் என்ற நம்பிக்கையிலே கடும் வெய்யிற் காலத்திலே கண்ணகி வழிபாடு நடைபெற்று வந்தமையாலும் கண்ணகி மாரித் தெய்வத்துடன் சங்கமிப்பது சுலபமாகிவிட்டது.

சமணம், பௌத்தம் என்பது ஒருபுறமாகவும், சைவம், வைணவம் மறுபுறமாகவும் நின்று முட்டி மோதிய பல்லவர் காலம் சோழப்பெருமன்னர் கால முற்பகுதி என்பவற்றிலே அம்மை வழி பாட்டின் சுவடுகள் காணப்படுகின்ற போதிலும் ஆண் தெய்வ வழிபாடே தலைமைத்துவம் பெற்று விளங்கியது. கி.பி 16ஆம் நூற்றாண்டிலிருந்து ஒரு முக்கியமான மாற்றம் காணப்படுகிறது. சைவ வைணவக் கோயில்களிலே அம்மைக் கெனத் தனிச்சந்நிதி அமைக்கும் வழக்கம் தொடங்குகிறது. அச் சந்நிதி காமக் கோட்ட மெனப் பெயர் பெறுவதற்குச் சாசனச் சான்றுகள் பல உள. முழு முதற் தெய்வமாகத் தமிழ் நாட்டிலே கணிக்கப்பட்ட சிவபிரான், திருமால் முதலிய ஆண் தெய்வங்களின் சக்தியென அம்மை கருதப்பட்டதுவும் அம்மையின் முக்கியத்துவம் அதிகரிக்க இடம் வகுத்தது.

விஜயநகர நாயக்கர் ஆட்சிக் காலங்களிலே அம்மை வழிபாடு மேலும் சிறப்புறுகிறது. முஸ்லிம் படையெடுப்பினால் பாதிப்படைந்த வட இந்திய சக்தி உபாசகர்கள் பலர் தென்னிந்தியாவிலே பாதுகாப்புப் பெற்றுத் தம்முடைய நெறியை மக்களிடையே பரப்பினர். மன்னர்கள் சக்தி வழிபாட்டிலே பேரூக்கம் காட்டினர்.

நவராத்திரி தமிழ்நாட்டிலே முக்கிய பண்டிகை யாக மாறுகிறது. துர்க்கை,இலக்குமி, சரஸ்வதி யாகிய மூவரும் சக்தியின் மூன்று முக்கிய அம்ச மாகக் கருதப்பட்டு ஒவ்வொருவருக்கும் மும் மூன்று இரவுகள் பூசை பெறுகின்றனர். ‘சப்த மாதர்’ எனப்படும் ஏழு பெண் தெய்வங்கள் வழிபாடு பல்லவர் காலத்திலே சாளுக்கிய நாட்டி லிருந்து தமிழ்நாட்டுட் புகுந்தது. ஏழுபெண் தெய்வங்களை எவரெரெனப் பெயரிடும் முறை யில் வேறுபாடு காணப்படுகிறது. இவர்களைக் கன்னிமார் நாச்சிமார் எனவும் வழங்குவதுண்டு. நாயக்கமன்னன் காலத்திலே அம்மை வணக்கம் செல்வாக்குப் பெற்றதற்கு இன்னொரு காரணமு முண்டு. மன்னர்கள் பெரும்பாலும் வைணவர் களாகவும், தமிழர்கள் பெரும்பாலும் சைவர் களாகவும் இருந்ததனால் அம்மை இவர்களை இணைத்து வைக்கும் பாலமாக மாறிவிட்டாள். சிவபெருமானுக்குத் தேவியாகிய தம்மை திருமாலின் தங்கையாகக் குறிக்கப்படுவதைப் பல இடங்களிலே காணலாம்.

நாயக்க மன்னராட்சிக் காலத்திலே சக்திவழிபாடு மேம்பாடுற்றமையால் சக்திக்கு முதன்மை வழங்கும் போக்குக் காணப்படுகிறது. சிவபெரு மானுடைய சக்தி மூன்று முக்கியமான சிவத்தலங் களிலே கண்ணின் தன்மை கொண்டு மூன்று பெயர்கள் கொண்டு தமிழ் நாடெங்கும் பிரபல மெய்துவதை இக்காலத்திலே காணலாம். காசிவிசுவநாதரின் சக்தி விசாலாட்சியாகவும், காஞ்சிபுரம் ஏகாம்பர நாதரின் சக்தி காமாட்சி யாகவும் மதுரைச் சொக்கநாதரின் சக்தி மீனாட்சி யாகவும் போற்றப்படும் நிலை தோன்றுகிறது. முகமதியர் படையெடுப்பகளினால் ஏகாம்பரநாதர்

கோவிலும் சொக்க நாதரின் கோவிலும் அழிய நாயக்கர் காலத்தில் திருப்பிக்கட்டப்பட்ட புதிய கோயில்களிலே காமாட்சியும், மீனாட்சியும் முக்கிய தெய்வங்களாகின்றனர். கோவில்கள் தாமும் காஞ்சி காமாட்சி கோவினெவும், மதுரை மீனாட்சி கோவிலெனவும் புதுப்பெயர்கள் பெறு கின்றன. சிதம்பரத்து ஆடவல்லானாகிய சபா நாயகரது பிரியை சிவகாமி யெனச் சிலரால் பாராட்டப்பட்டபோதும் அக் கோவிலியே சிவ பிரானினுடைய முதன்மை பாதிக்கப்படவில்லை.

சோழரின் இராஜராஜேஸ்வரியைப் போலவே பாண்டியரும் தங்களுடைய மீனாட்சியைத் தாய்த் தெய்வமாக மதித்தனர். மீனாட்சி யைப் பாண்டிய அரசைத் தோற்றுவித்த தலைவி என்றும் கருதினர். மதுரைக் கோவிலுள்ள ஓவியத்தில் அங்கயற்கண்ணியான மீனாட்சியை வணங்கிச் செங்கோலைத் தேவியிடமிருந்து திருமலை நாயக்கர் பெற்றதாகக் காட்டப்பட்டிருப்பதைக் காணலாம்.” 48

## கண்ணகி வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

திராவிட மக்களின் தாய்த் தெய்வ வழிபாட்டில் ஒன்றாகவும் ஆரம்ப காலம் தொட்டே வளர்ந்து வந்த கிராமிய வழிபாட்டு முறைகளிலே சிறப்பிடம் பெறுவதாகவும் உள்ள கண்ணகி வழி பாட்டின் தொன்மையைச் சங்ககால இலக்கியங்களான *நற்றிணை* (216) *புறநானூற்றுப்* பாடல் சிலவற்றிலும் (144-145) காணலாம்.

ஈழத்தில் இவ்வழிபாட்டு முறை பரவியது பற்றிச் சிலப்பதிகார உரைபெறு கட்டுரையிலும் வரந்தரு காதையிலும் காணலாம். சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு விழா எடுத்தபோது ஈழத்து

கஜபாகு என்னும் வேந்தனும் அங்கு சென்று கலந்து பின் அதனை ஈழம் கொண்டு வந்தான் எனவும் அது பகருகின்றது.

ஈழத்து வரலாற்று நூல்களான *இராஜவலிய, இராஜரத்னாகர கஜபாகத்தாவ* என்னும் சிங்கள நூல்கள் இதனைக் கூறுகின்றது. கயவாகு மன்னன் பத்தினி பெண்ணின் சிலம்பு நான்கு சிலை ஆயதங்கள் சின்னங்கள் வரவழைக்கப்பட்டு வலகம்பாகு காலத்தில் புனித பாத்திரத்தையும் பெற்றுக் கொண்டு ஈழம் மீண்டான் எனக் கூறுகிறது. இதனைக் கோகிலசந்தேச நூலிலும் காணலாம்.

தொன்று தொட்டுத் தமிழர் கண்ணகியை '**கண்ணகி**' '**கண்ணகை அம்மன்**' என்றும், சிங்கள மக்கள் பத்தினி வழிபாடாகவும் வழிபடுகின்றனர். இதனால் சிங்கள நூல் பலவும் இத் தெய்வத்தை போற்றியே எழுந்தன. உதாரணமாக *பத்தினி ஹல்ல*, பத்தினி கத்தாவ என்பன பற்றி கொழும்புத்துறை ஈசன் குறிப்பிடும் செய்திகள் வருமாறு. பத்தினிபிளிம முதலிய நூல்களை நோக்கலாம்.

> "கயவாகு மன்னன் இத்தெய்வ வழிபாட்டைக் ஆடி மாதம் தோறும் தலைநகரில் பெருவிழா எடுத்தான். இன்றும் இவ்வழிபாடு சிங்களவரிடையே முக்கியம் பெற்றுள்ளதைக் காணலாம். ஈழத்தில் காவல் தெய்வமாக முக்கியம் பெறும் இவ் வழிபாடு நிலவியதற்கு நிக்கவெவக் குகையில் கண்டெடுக்கப்பட்ட உருவங்கள் கயவாகு காலத்தவை என ஹென்றி பார்க்கர் கூறுகின்றார்."[49]

நடுவபிட்டிய, குருணாகலை, கட்டுகம்பளைபற்று முதலிய பல இடங்களிலும் இன்றும் பல கோயில்கள் காணப்படுகின்றன. சிங்களமக்கள் பதினேழு நாட்கள் பத்தினிப் பெண்ணைப் பூசை செய்து வழிபடுவது வழக்கம். இதற்காகப் பல காவியங்களும் இயற்றப்பட்டு அதனை வரிசைக் கிரமமாக ஓதி, சிங்கள மக்கள் வழிபடுவார்கள். இதற்காக முப்பத்தைந்து நூல்கள் எழுதப் பட்டுள்ளன. இதனை பன்திஸ்கோன்முற என அழைப்பார்கள்.

புங்குடுதீவுக் கண்ணகையம்மன் எனப்படும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் மிகுந்ததலவரலாற்றுப் பெருமையையும் அற்புதங்களையும் கொண்டுள்ள திருத்தலமாகும் என்பதனை புங்குடுதீவு மக்கள் அடிக்கடி விவரித்துக் கூறுவர். நயினாதீவில் நிலவும் சக்திவழிபாட்டுக்கும் புங்குடுதீவில் அனலை தீவுகளிலே சக்தி வழிபாட்டுகளுக்கு தொடர்புகள் நிறையவே உள்ளன. 'சிவாகமஞானபானு' சிவஸ்ரீ ஐ.கைலாசநாதக் குருக்களின் பாரம் பரியக் குலதெய்வங்களே நயினாதீவு புங்குடுதீவுச் சக்திகள் எனக் இணைப்புக் கொள்வதே பொருந்துவதாகும். **புங்குடுதீவுக் கண்ணகையம்மன் தேர் வடம் கடலில் மிதந்துவந்ததென்ற அதிசயமும்** அவ்வூர் மக்களால் கூறப்படுவதுண்டு. புதிய திருப் பணிகள் பல நிறைவேற்றப்பட்டு எழில்மிகு சிற்பங்கள் நிரம்பிய சிங்காரக் கோயிலென விளங்கும் புங்குடுதீவுக் கண்ணகியம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மனை நினைந்து இவ்வரிய இலக்கிய நூலினை மனம் வைத்துக் கற்பவர்க் கெல்லாம் - வாசித் தவர்களுக் கெல்லாம் - நீடிய பேராயுளை, நீடாயுளை அம்பாள் நல்க வேண்டும் எனப் பிரார்த்தித்து '**ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அஷ்டகம்**' என்னும் தோத்திரப் பாடலைப் பாடித் துதிக்கிறோம். வடமொழி யிலமைந்துள்ள ஸ்லோகம் இது.

## ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அஷ்டகம்

1. அம்பாஸாம்பவி சந்ரமௌலிரபலாபர்ணா உமாபார்வதி
காளி ஹைமவதீ ஸ்ரீ வாதரி நயனீ காத்யாயணீ பைரவீ
ஸாவித்ரி நவயௌவனா ஸ்ரீ பகரீ ஸாம்ராஜ்ஜ லக்ஷ்மீப்ரதா
சித்ரூபி பரதேவதா பகவதீ ஸ்ரீ ராஜராஜேஸ்வரீ!

2. அம்பா மோஹினீ தேவதா த்ரிபுவனீ ஆனந்தஸந்தாயினீ
வாணீ பல்லவபாணீ வேணுமுரளி கானப்ரியா லோலி நீ
கல்யாணி உடுராஜ பிம்பவதனா தூம்ராக்ஷ ஸம்ஹாரிணீ
சித்ரூபி பரதேவதா பகவதி ஸ்ரீ ராஜராஜேஸ்வரீ!

3. அம்பா நூபுர ரத்ன கல்கனீ கேயூர யூ ஹாராவளீ ஜதீகம்பக
வைஜந்திலஹரீ க்ரைவேயகை ரஞ்சிதா! வீணாவேணு
வினோத மண்டிதகரா விராஸனா ஸம்ஸ்திதா
சித்ரூபி பரதேவதா பகவதீ ஸ்ரீ ராஜராஜேஸ்வரீ!

4. அம்பா ரௌத்ரிணி பத்ரகாளி பகளாஜ்வாலாமுகீ வைஷ்ணவீ
ப்ரவத்மாணீ த்ரிபுராந்தகீ ஸுரநுதா தேகீப்ய மானோஜ் வவா
சாமுண்டா பந்ரித பÑ போஷ ஜனநீ தாÑயணீ வலலவீ
சித்ரூபி பரதேவதா பகவதீ ஸ்ரீ ராஜராஜேஸ்வரீ!

5. அம்பா பரஸூதனு குபராங்குஸதரீ அர்த்தேந்து பிம்பாதரீ
வாராஹீ மதுகைடப பிரஸமணீ வாணீரமாஸேவிதா!
மல்லாத்யாஸுர மூகதைத்ய தமனீ மாஹேஸ்வரீ அம்பிகா
சித்ரூபி பரதேவதா பகவதீ ஸ்ரீ ராஜராஜேஸ்வரீ –

6. அம்பா ஸ்ருஷ்டி விநாஸ பாவனகரீ ஆர்யா விளம் விம்பாதரீ
காயத்ரீ ப்ரணவாÑராம்ததரஸா பூர்ணாது லைந்தீக்ருதா!
ஓங்காரீ வினதா ஸுரார்ச்சிதிபதா உத்தண்டதைக்யா–பஹா
சித்ரூபி பரதேவதா பகவதீ ஸ்ரீ ராஜராஜேஸ்வரி!

7. அம்பா ஸாஸ்வத ஆகமாதி ஷினுதா ஆர்யாம் ஹா தேவதா
யாப்ரஹ்மாதி பீலிகாநத ஜனனீ யாவைஜகன் மோஹினி
யாபஞ்ச ப்ரணவாதி ரேபஜனனீ பாசித்களாமாலினீ!
சித்ரூபி பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேஸ்வரீ.

8. அம்பா பாலித பக்கராஜ தனிசம் அம்பாஷ்டகம்யபடேத்
அம்பாலோல கடர் ஷலீÑ லலிதம் சைச்வர்ய மவ்
அம்பா பாவன மந்த்ர ராஜ படனாத் அந்தேசமோஷப்ரதா
சித்ரூபி பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேஸ்வரீ.

# நிறைவுரை

கயவாகு மன்னன் ஈழம் திரும்பிய போது சம்புத்துறை வழியாக வந்து கந்தரோடை அங்கணாமைக் கடவையில் கண்ணகிக்கு கோவில் ஒன்றை அமைத்து, பின் இவ் வழிபாட்டை நாடெங்கும் பரப்பும் படி கட்டளை இட்டான். இதனை ஒட்டிய வீரோதைய சிங்கை ஆரியனின் காலத்தில் யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் ஆலயங்கள் அமைக்கப்பட்டன. உதாரணமாக **வேலம் பரை கண்ணகி** அம்மன் கோவில், **வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோவில்** முதலியவற்றைக் கூறலாம். ஆனால், ஈழத்தின் சைவ வளர்ச்சிக்கு உறுதுணையாய் நின்ற ஆறுமுக நாவலர் இதனை ஏற்கவில்லை. எனவே, ***இவ்வழிபாடு இராஜராஜேஸ்வரி, பத்ரகாளி, மாரி அம்மன் வழிபாடாகவும், சக்தித் தெய்வ வழிபாடாகவும் காலப் போக்கில் மாற்றடைந்தது. மட்டுவிலில் உள்ள பன்றித்தலைச்சிக் கண்ணகி அம்மன் கோவில் சரித்திரச்சுருக்கம்*** பொன்னம்பலபிள்ளை யாரால் ஊஞ்சல் எச்சரிகை முதலியவற்றில் எழுதப்பட்டுள்ளது. இதனை விடவும் பல ஐதிகங்களும் நிலவுகின்றன.

கொலைக் களத்திலே இறந்த கோவலன் மீண்டும் எழுந்து மாதவியோ கண்ணகியோ வந்தவர்கள் படு களத்தில் மாதவியாள் 'வந்தாளே வாடி என் மடிமேல்' எனக் கூறியதும், சினமுற்ற கண்ணகி எழுந்து ஐந்து தலை நாகமாக மாறி ஈழம் நோக்கி நகர்ந்து நயினாதீவு சென்று, பின் சீரணி, அங்கணாமைக் கடவை, அள வெட்டி, சுருவில் முதலிய இடங்களுக்குச் சென்றதாகவும் அதன் வழிபல நாகர் கோவில்கள் அமைந்தமையும் இவ்வழிபாடுடன் தொடர்புடையதாகக் கருதப்படுகிறது. இதன் வழியே இன்று வழுக்கி யாறு பாய்கிறது என்பர்.

***மந்திகைக் கண்ணகி அம்மன் அந்தாதி*** இவ்வழிபாட்டைப் பற்றிக் கூறுகிறது. அத்தோடு அவ்வாலயத்தில் வைகாசிமாதம் மகோற் சவமும் நடைபெறுகிறது. **நவாலி களையோடை கண்ணகி அம்மன் மீது** பேருஞ்சலும், **கோப்பாய்க் கண்ணகி அம்மன் கோவில்** மீது சேனாதிராஜரின் ஊஞ்சலும், **வற்றாப்பளைக் கண்ணகி** அம்மன்

கோவில் மீது தோத்திரம், காவியம், பொறிக்கடவை அம்மன் மீது பதிகம் என்பனவும் பாடப்பட்டுள்ளன. இன்று மட்டக்களப்பிலே இவ்வழிபாடு மிகச் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. பெரும்பாலும் இவ்வழிபாடு பற்றி தோன்றிய இலக்கியமும் இதனையே நாடி நிற்கிறது. இப்போது மடுவில் உள்ள புனித மேரி அம்மன் முன்னர் பத்தினி அம்மன் வழிபாடாகவே இருந்து வந்தது என எஸ். குமாரசாமி கூறுகிறார். ***மட்டக்களப்பு மான்***மியத்திலும் இதனைக் காணலாம்.

மதுரையில் இருந்து இலந்தத்துறைக்கு செம்பக நாச்சியார் அம்மன், பத்திரகாளி அம்மன், கண்ணகி அம்மன் ஆகிய மூன்று அம்மன்களும் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படுகிறது. மட்டக்களப்பு காரைதீவு பட்டி மேட்டுக் கண்ணகைக் அம்மன் கோவில் இன்று பிரபல்யமாகி வருகிறது. இவை வன்னியர் ஆட்சி யில் மிகச் சிறந்த நிலையில் இருந்தன. இவ்வாலயமீது ஏழு விருத்தமும், காவியமும் ஊஞ்சல், அகவல் முதலியனவும் பாடப் பட்டுள்ளன.

ஈழத்திலே கண்ணகி வழிபாடு பற்றி பூரணமான கதை சகவீரனின் ***கண்ணகி வழக்குரை***யிலேயே காணப்படுகிறது. எனவே சிங்களவர், தமிழ் மக்களிடையே வேறுபாடு இன்றி ஊறிய கிராமிய வழிபாடாக இவ்வழிபாடு திகழ்கிறது. எனினும், மட்டக்களப்பே இதற்கு நிலைக்காலாக உள்ளது.

இலங்கையில் வாழ்ந்த பூர்விக மக்களின் வழிபாடாகிய நாக, யக்ஷ வழிபாட்டிற் பெண் தெய்வங்களான நாகினி, யக்ஷி ஆகியவை வணக்கப்பட்டன என்பதை வரலாறுகளிலிருந்து அறிய முடிகிறது. நம் நாட்டிற் கிடைத்த சுடுமண் பெண் தெய்வ உருவங் களும் லிங்கவழிபாடு பற்றிய சான்றுகளும் தாய்த் தெய்வம் சக்தி யாகவும் அருஉருவ நிலையில் லிங்க வழிபாட்டுடன் சேர்த்தும் வழிபடப்பட்டதை எடுத்துக்காட்டுகின்றன. சிவசக்தி வழிபாட்டினதும் சக்கமிப் புக்கு உதாரணமாக நயினையிலுள்ள ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தைக் குறிப்பிடலாம். 64 சக்தி பீடங்களுள் ஸ்ரீ புவனேஸ்வரி

பீடம் என அழைக்கப்படுவது நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானமே.

ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுக்களில் துர்க்கை பற்றிய குறிப்புகள் உள்ளன. இதே காலத்தைச் சேர்ந்த லட்சுமி உருவம் பொறித்த நாணயங்களும் காணப்படுகின்றன. வீரவழிபாட்டின் ஓரம் சமாகிய கண்ணகி வழிபாடு ஈழத்திற் புகுந்தது. இவ்வழிபாடு இங்கு நிலவிய சக்தி வழிபாட்டுடன் தன்னை இணைத்துக் கொண்டது எனலாம்.

## அடிக்குறிப்புகள்

1. கைலாசபதி, க., (1999), ***பண்டைத் தமிழர் வாழ்வும் வழி பாடும்,*** குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, ப. 02.
2. கணபதிப்பிள்ளை, க., (2001), *ஈழத்து வாழ்வும்* வளமும், குமரன் புத்தகசாலை இல்லம், சென்னை – கொழும்பு,ப. 26.
3. கைலாசபதி, க., (1999), *மு.கு.நூ,* ப.02.
4. மேலது, ப.04.
5. மேலது, ப.09.
6. மேலது, ப. 39.
7. கணபதிப்பிள்ளை, க., (2001), *மு.கு.நூ,* ப.09.
8. அடைக்கலசாமி, எம்.ஆர்., (1934), *தமிழ் இலக்கிய* வரலாறு, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிட், திருநெல்வேலி, ப. 136.
9. கிருஷ்ணராசா, செ., (1999), *இலங்கை வரலாறு,* பாகம் *I* , பிறை நிலாவெளியீடு, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், ப. 245.
10. காசிநாதர், த., (1986), *சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோயில் வரலாறு,* செட்டியார் பதிப்பகம், யாழ்ப்பாணம், ப. Vii – Viii, ப. 09.
11. வரதராசன், மு., (1996), *கண்ணகி,* இராதாபதிப்பகம், பாரிநிலையம், சென்னை, ப.113.
12. நாவேந்தன், (1968), *சிலப்பதிகாரச்* செந்நெறி, (ஒரு சொற் பொழிவு) தமிழ்க்குரல் பதிப்பகம், ஏழாலை வடக்கு, சுன்னாகம்.

**13.** மாணிக்கம், வ.சுப., (1990), காப்பியப் பார்வை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

**14.** இராமகிருஷ்ணன், எஸ்., (1991), இளங்கோவின் பாத்திரப் படைப்பு, பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிட், சென்னை, ப.07.

**15.** *மேலது,* ப.09.

**16.** *மேலது,* ப.08.

**17.** *மேலது,* ப.25.

**18.** *மேலது,* ப.147.

**19.** *மேலது, பக்.* 187-188.

**20.** கைலாசபதி, க., (1996), *அடியும் முடியும்,* குமரன் பதிப்பகம், சென்னை – கொழும்பு, ப. 241.

**21.** *மேலது,* பக்.241 – 243.

**22.** வடிவேலன், பெ., (1997) *மலையகத்தில் மாரியம்மன்* வழிபாடும் *வரலாறும்,* யுனி ஆட்ஸ் பிரைவேட் லிமிட், 48B, புளூமென்டால் வீதி, கொழும்பு.

**23.** தெய்வேந்திரன், பொன்., (2002) *சிலம்பின் செய்தி,* ஆதி முனீஸ்வரர் ஆலய வெளியீடு, சண்முகா கொம்பியூட்டர்ஸ் அன்ட் பிரிண்டர்ஸ், வவுனியா, பக். 123 – 124.

**24.** *மேலது, பக்.* 125 – 126.

**25.** *மேலது, ப.* 130.

**26.** *மேலது, ப.* 132.

**27.** *மேலது, ப.* 133.

**28.** சுந்தரம்பிள்ளை, காரை. செ., (2000), *வட இலங்கை நாட்டார் அரங்கு,* குமரன் புத்தக இல்லம், சென்னை, ப. 114.

**29.** *மேலது,* ப.115.

**30.** *மேலது,* ப. 129.

**31.** மேலது, ப.129.

**32.** மகேஸ்வரலிங்கம், க.. (1996), *மட்டக்களப்புச் சிறு தெய்வ வழிபாடு – ஓர் அறிமுகம்,* தில்லை வெளியீடு, மகிழடித்தீவு, ப.25.

**33.** *மேலது,* ப. 26.

**34.** *மேலது,* ப. 29.

**35.** *மேலது,* ப. 32.

**36.** *மேலது,* ப. 35.

**37.** *மேலது,* ப.123-124.

**38.** பார்க்க: *கும்பாபிஷேகமலர்,* (07.02.2001), திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம், ஸ்ரீ கணேச அச்சகம், திருகோணமலை.

**39.** செல்லத்துரை, பூ.ம., (1999), நாகர்கள் உண்டாக்கிய பௌத்தம்" *இலங்கைத் தமிழர் வரலாறும் இன்றைய நிலையும்,* மட்டக்களப்பு அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம், (CONGOB) வெளியீடு, ஈஸ்வரன் கிராபிக்ஸ், பார் வீதி, மட்டக்களப்பு

**40.** *மேலது,* ப.83.

41. புஷ்பரட்ணம், ப., (2000), *தொல்லியில் நோக்கில்* இலங்கைத் தமிழர் பண்பாடு, பவானி பதிப்பகம், புத்தூர் கிழக்கு, யாழ்ப்பாணம், ப. 186.

42. பார்க்க, *மகாசக்தி மகத்துவமலர்*, (2002) நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தான மகாகும்பாபிஷேகச் சிறப்புமலர், கொழும்பு.

43. கந்தையா, வி.சீ., (1983), *மட்டக்களப்புச் சைவக் கோவில்கள்,* பிரதேச அபிவிருத்தி இந்துசமய தமிழ் அலுவல்கள் அமைச்சு வெளியீடு, கூட்டுறவு மொத்த விற்பனை அச்சக நிலையம், கொழும்பு, ப. 148 – 153.

44. மேலது, ப. 154.

45. ஏகாம்பரநாதன், ஏ., (1984), *தமிழகச் சிற்ப ஓவியங்கலைகள்,* திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் லிமிட், சென்னை. பக். 143 – 144.

46. பத்மநாதன், சி., (2005), "பத்தினியின் படிமங்கள்",*இலங்கையில் இந்து சமயம்,* அகில இலங்கை இந்துமாமன்றத்தின் பொன் விழா வெளியீடு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு, பக். 337 – 346.

47. மேலது, பக். 337-346.

48. வேலுப்பிள்ளை, ஆ., (1980) *தமிழர் சமய வரலாறு,* பாரிபுத்தகப் பண்ணை, வெற்றி அச்சகம் சென்னை.

49. ஈசன், எஸ்., (1988),"ஈழத்துக் கண்ணகி வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்" *இந்து ஒளி,* அகில இலங்கை இந்துமாமன்றத்தின் வெளியீடு, கொழும்பு.



பத்தினி, ஜேதவனாராமம்
அநுராதபுரம்

ISBN 97895598962-5.8.